# கலையின்பம்

நாமக்கல் கவிஞர்




கவிஞர் பதிப்பகம்

# கலையின்பம்

நாமக்கல் கவிஞர்
ஸ்ரீ. வெ. இராமலிங்கம் பிள்ளை

கவிஞர் பதிப்பகம்
ராஜவீதி :: கோவை

முதற் பதிப்பு — அக்டோபர், 1958.
விலை: ரூ 2-00.

நவபாரத் பிரஸ், 76, எல்லிஸ் ரோட், சென்னை-2.

# பதிப்புரை

"கலையென்றால் உணர்ச்சிகளைக் கவரவேண்டும்
களிப்பூட்டி அறிவினைப் போய்க் கவ்வ வேண்டும்
நிலையில்லா சிந்தனையை நிற்கச் செய்து
நீதி நெறி தெய்வ நினைப்பூட்ட வேண்டும்"

என்று நாமக்கல் கவிஞர் பாடியுள்ளார்கள்.!

அதைப் போன்று உணர்ச்சிகளைக் கவர்ந்து, அறிவினைக் கவ்வி, சிந்தனையை ஒரு நிலைப்படுத்தி தெய்வநினைப்பூட்டும் கட்டுரைத் தொகுதியே இக் 'கலையின்பம்'.

கலையென்றால் என்ன? இசை யென்றால் என்ன? தமிழ் இசையின் பெருமை என்ன? வடமொழி இசையின் தத்துவம் என்ன? என்பனவற்றைத் தெளிவாக்கும் கட்டுரைகள் பல இதில் அடங்கி உள்ளன.

இது போன்று மேலும் பல தொகுதிகள் வெளிவர இருக்கின்றன. தமிழ் அன்பர்கள் அவற்றைப் பெரிதும் வரவேற்பர் என்று நம்புகிறோம்.

—கவிஞர் பதிப் பகத்தார்.

# பொருள் அடக்கம்


| | பக்க எண் |
|---|---|
| கலையின்பம் | 5 |
| தாய் மொழிக் கல்வி | 12 |
| வள்ளுவனும் கம்பனும் | 19 |
| தமிழ் இசையும் கலையும் | 25 |
| தமிழிசையும் வடமொழி இசையும் | 40 |
| பாரதி காட்டிய புது வாழ்வு | 56 |
| விடுதலை இயக்கமும் பாட்டும் | 75 |
| திருக்குறளே நம் தேசிய பாடல் | 100 |
| திருவள்ளுவர் அருளிய இன்பம் | 115 |


# 1. கலையின்பம்

'கலை' என்றால் என்ன என்பதை நாம் அறிந்து கொள்ளவேண்டும். 'கலை' என்ற சொல்லை சாதாரணமான 'கல்வி'யைக் குறிக்கவும் உபயோகிப்பது உண்டு. இங்கே நாம் ஆராயப் புகுந்தது அதுவல்ல. 'கல்வி' என்பது வேறு; 'கலை' என்பது வேறு; இதை நாம் தெளிவாகத் தெரிந்துகொள்ளவேண்டும். 'கலை' என்ற சொல்லை சாதாரணமான பள்ளிப் படிப்புகளையும் குறிப்பதற்காக உபயோகப்படுத்துகிறார்கள் என்பதற்கு உதாரணம் 'சர்வகலாசாலை' என்பதில் காணலாம். சர்வகலாசாலை என்பதற்கு, சகல கலைகளையும் கற்றுக்கொடுக்கிற இடம் என்பதுதான் அர்த்தம். சர்வகலாசாலைகளில் என்ன கற்றுக்கொடுக்கிறார்கள்? பலவிதமான விஷயங்களைப்பற்றிய பொது அறிவைத்தான் அங்கே சொல்லிக்கொடுக்கிறார்கள். பொது அறிவு 'கலை' அல்ல. பின் எது 'கலை' என்றால், ஒரு மனிதன் தான் கற்றுக்கொண்ட பொது அறிவிலிருந்து, அவனைப்போலவே பொது அறிவு கற்றுக்கொண்டிருக்கிற மற்றவர்கள் அறியாத ஒரு புது நுணுக்கத்தைத் தன்னுடைய முயற்சியினாலோ அல்லது மனோதர்மத்தினாலோ கண்டுபிடித்துச் செய்து காட்டுகிற அந்தத் திறமைதான் 'கலை' என்பது.

ஒரு உதாரணம் பார்ப்போம்: 'கணித சாஸ்திரம் சர்வகலாசாலையில் எல்லாருக்கும் கற்றுக்கொடுக்கப்படு

கிறது. சுருக்கமாகக் கணித சாஸ்திரம் என்பது கூட்டல், கழித்தல், பெருக்கல், வகுத்தல் என்ற நான்கும் சேர்ந்ததுதான். இந்த நான்கையும் அவற்றின் பிரயோகத்தையும் கணிதம் கற்றுக்கொண்ட எல்லாரும் அறிவார்கள். அவற்றிற்கான வாய்ப்பாடுகளும் மற்ற விதிகளும் எல்லோருக்கும் தெரிந்தவையே. வெறும் இந்தக் கூட்டல், கழித்தல், பெருக்கல், வகுத்தல் அறிவைத் துணைகொண்டு தன்னுடைய சொந்த மனோதர்மத்தினால் செய்த முயற்சிகளால் **ஐன்ஸ்டின்** என்ற கணித சாஸ்திரி 'அணு'வின் சக்தியை அளந்துவிட்டார். ஒரு 'அணு'வில் எண்ணிறந்த 'பரமாணுக்கள்' சேர்ந்து இறுகியிருக்கிற உண்மையையும், அந்த இறுக்கத்திலுள்ள சக்தியின் அளவையும், அந்த இறுக்கத்தைத் தளரச்செய்து ஒரு 'அணு'வில் உள்ள எண்ணிறந்த 'பரமாணுக்களை'ப் பிரிப்பதற்கு வேண்டிய சக்தியையும், அப்படிப் பிரிக்கப்படுகிற அதிர்ச்சியினால் கிளம்புகிற சக்தியின் வேகத்தையும் கணித சாஸ்திரத்தின் உதவியால் கண்டுபிடித்தவர் ஐன்ஸ்டின். இது 'கலை'. இப்படி அவர் கண்டுபிடித்ததைக் கண்டு உலகத்திலுள்ள அறிஞர்களெல்லாம் வியந்து மகிழ்ந்தார்கள். ஏன் மகிழ்ந்தார்கள் என்றால் பிளக்கப்படுகிற 'அணு' வெடிக்கும்போது உண்டாகும் அதிர்ச்சி வேகத்தைக்கொண்டு வாழ்க்கைக்கு வசதியுண்டாக்கக்கூடிய பல நல்ல காரியங்களைச் செய்துகொள்ளலாம் என்பதை ஐன்ஸ்டின் விளக்கிக் காட்டினார். அதனால்தான் மக்கள் மகிழ்ந்தார்கள்.

இப்போது இந்தக் கலையறிவை அணுகுண்டுகள் செய்யப் பயன்படுத்திக்கொண்டு உலகத்தை நாசமாக்க முயலுகின்றார்கள் என்பதைப்பற்றி இங்கே எண்ண



வேண்டாம். ஒரு நல்ல கலையறிவைக் கெட்ட காரியத்துக்குப் பயன்படுத்துகிறார்கள் என்பது கலையின் குற்றமல்ல.

எனவே 'கலை' என்பது என்னவென்றால், எல்லாராலும் செய்ய முடியாத விதமாக ஒரு காரியத்தைச் செய்து, அந்தக் காரியம் மக்களுக்கு வியப்பையும் மகிழ்ச்சியையும் உண்டாக்குமானால் அந்தக் காரியம் ஒரு 'கலை'. அதைச் செய்கிறவன் ஒரு கலைஞன். அந்தக் காரியம் நம்முடைய புலன்களுக்கு இன்ப முண்டாக்குவதால் மகிழ்ச்சியடைகிறோம். அது எல்லாராலும் செய்ய முடியாததாக இருப்பதால் வியப்படைகிறோம்.

இப்படியாக நம்முடைய ஐந்து புலன்களுக்கும் தனித்தனியே இன்பம் உண்டாக்கி வியக்கச் செய்கிற வேலைகள் எத்தனையோ இருக்கின்றன.

எல்லாராலும் வாயால் பலவித ஓசைகளை உண்டாக்க முடியும். ஒரு குறிப்பிட்ட மனிதன் ஒரு குறிப்பிட்ட முறையில் வாயாலும் மூக்காலும் ஓசைகளை எழுப்பி, வீணை மீட்டுவதைப் போன்ற நாதத்தை உண்டாக்கி விகடம் செய்கிறான். நேராக அவனைப் பார்க்காமல் மறைவில் இருந்து அந்த நாதத்தை மட்டும் கேட்டால் யாரோ வீணை வாசிப்பதுபோலவே இருக்கிறது. இது காதுக்கு இன்பம் தந்து வியப்பையும் உண்டாக்குகிற 'கலை'.

ஒரு சமையற்காரன் அவனுக்கே சொந்தமான ஒரு குறிப்பிட்ட முறையில் பதார்த்தங்களைக் கூட்டி, மற்ற சமையற்காரர்கள் உண்டாக்க முடியாத சுவையை உண்டாக்குகிறான். இது வாய்க்கு இன்பம் தந்து வியப்பும் உண்டாக்குகிற 'கலை'.

எல்லாராலும் ஒரு பென்சிலைக்கொண்டு பலவித மான கோடுகளைக் கிழிக்க முடியும். ஆனால் ஒரு சித்திரக் காரன் அதே கோடுகளைக் குறிப்பிட்ட முறையில் கிழித்து ஒரு மனிதனுடைய உருவத்தை உண்டாக்குகிறான். அந்த உருவத்தில் ஒரு குறிப்பிட்ட பேர்வழியின் அடை யாளம் தத்ரூபமாக அமைகின்றது. அது நம் கண்ணுக்கு இன்பம் தந்து வியப்பையும் உண்டாக்குகிறது. இது கண்ணுக்கு இன்பம் தரும் கலை.

மல்லிகை மலரோ, சம்பகப் பூவோ அல்லது ரோஜாப் புஷ்பமோ, அது வாடாமல் இருக்கிற வரை யிலும்தான் அதனதன் மணத்தைக் கொடுக்கும். அதிக மாகச் சொன்னால் பறித்த மலர் ஒரு நாள் முழுதும் வாசனை வீசலாம். அதற்கு மேல் வாடி வதங்கி வாசனை கெட்டுப்போகும். ஆனால் அத்தர் செய்யும் கலையறிந்த ஒருவன் ஒரு துளி தைலத்தை நம்மீது பூசுகின்றான். உடனே அப்போதுதான் அலர்ந்த ஒரு கூடை மல்லிகைப் புஷ்பங்களை ஒருமிக்க முகர்ந்தது போன்ற வாசனையை அது மூக்குக்குத் தருகின்றது. எத்தனை மாதங்கள் சென்றா லும் அந்த அத்தர் அதே மணத்தைக் கொடுக்கின்றது. இப்படியே மற்ற மலர்களைக்கொண்டும் அத்தர் செய்கிற வித்தை மூக்குக்கு இன்பந்தரும் 'கலை'.

உடலுக்கு இன்பம் தருகிற கலையும் உண்டு அலைச் சலினாலோ உழைப்பினாலோ அலுப்புண்டாகி நம்முடைய உடலுறுப்புக்களில் சில சமயங்களில் இலேசான வலி உண்டாவது சகஜம். அப்படிப்பட்ட சமயங்களில் யாரையாவது கூப்பிட்டு நம்முடைய கைகால்களைப் பிடித்துவிடச் சொல்லுகிறோம். கைகால்களைப் பிடித்து விடும் வேலையை எல்லாரும் செய்ய முடியும். ஆனால்



அதற்கென்றே பழகிய ஒரு மனிதன் மற்றவர்கள் அமுத் துவதைப்போல் நேர்ந்தபடியெல்லாம் அமுத்தாமல் நாடி நரம்புகளின் போக்கையும் தசைநார்களின் அமைப்பும் அனுசரித்து மிகவும் நூதனமான முறையில் பிடித்துவிடு கிறான். அதனால் உடலுறுப்புக்களில் இருந்த வலி நீங்கி நம்மையும் அறியாதபடி நமக்குத் தூக்கமும் வந்துவிடு கிறது. இது உடலுணர்ச்சிக்கு இன்பம் தருகிற 'கலை'.

இப்படியாக மெய், வாய், கண், மூக்கு, செவி என் னும் ஐந்து புலன்களுக்கும், இன்பமூட்டி வியப்புண்டாக் கக்கூடிய எல்லாச் செயல்களும் 'கலை' என்ற இனத்தைச் சேர்ந்தவை. இவற்றுள் மெய், வாய், மூக்கு என்னும் மூன்று புலன்களுக்கும் இன்பம் தருகிற செயல்களைச் சாதாரணக் கலையாகவும், காது, கண் ஆகிய இந்த இரண்டு புலன்களுக்கு இன்பம் தருகிற செயல்களை விசேஷக் கலையாகவும் கொள்ளப்படும். ஏன் என்றால் மெய், வாய், மூக்கு ஆகிய இந்த மூன்று புலன்களுக்கும் இன்பம் தருகிற செயல்களைவிட கண்ணுக்கும் காதுக்கும் இன்பந்தருகிற செயல்கள்தாம் நம்முடைய சிந்தனையை அதிகமாகத் தூண்டுகின்றன என்பது அனுபவம். அதனால் கண்ணுக்கும் காதுக்கும் இன்பம் தந்து சிந்தனை யைத் தூண்டி அறிவுக்கு ஆக்கம் தருகிற கலைகளை 'நுண் கலைகள்' என்று போற்றுகின்றார்கள். இவற்றை ஆங் கிலத்திலும் '**Fine Arts**' என்று பாராட்டுகின்றார்கள். கண்ணுக்கும் காதுக்கும் இன்பம் தந்து சிந்தனையைத் தூண்டக் கூடிய கலைகளாவன: சித்திரம், சிற்பம், பரத நாட்டியம், சங்கீதம் என்பனவாம். சங்கீதம் என்பதில் இசைக் கருவிகளாகிய வீணை, பிடில், புல்லாங்குழல் முதலிய வாத்தியங்களினால் உண்டாக்கப்படும் இனிய

ஓசைகளும் சேரும். கண், காது என்ற இந்த இரண்டிலும்கூட காதுக்கு இன்பமுண்டாக்கி சிந்தனையைத் தூண்டுகிற கலை சிறந்ததாகக் கொள்ளப்படுகிறது. அதனால் காதின் வழியாகச் சிந்தனையைத் தூண்டுகின்ற இசைக் கலை தலைசிறந்த நுண்கலையாகச் சொல்லப்படுகிறது.

ஏன் அப்படிச் சொல்லப்படுகிறதென்பதைப் பார்ப்போம் : ஒரு நல்ல சங்கீத வித்துவான், உயர்ந்த கருத்துக்களடங்கிய ஒரு பாட்டை இசைந்த ராகத்தோடு பாடுவதைக் கேட்கும் ஒரு ரஸிகன் தன்னுடைய இருகண்களையும் மூடிக்கொண்டு பாட்டை அனுபவித்துப் பரவசமடைகின்றான். கண்களை மூடிக் கொண்டதனால் தன்னுடைய சிந்தனை கண்ணில்படுகிற எதனாலும் கலந்து போகாதபடி பாட்டிலுள்ள கருத்தில் வயப்பட்டு நிற்கிறது. அதற்காகவே கண்களை மூடிக் கொள்கிறான். மூடிக்கொண்டபின் மற்றப் புலன்களெல்லாம் செயலற்றனவாகி விடக் காதுமட்டும் செயலாற்றிச் சிந்தனையைப் பலப்படுத்துகிறது. பாடலை நன்றாக அனுபவிப்பதற்காகக் கண்களை மூடிக் கொள்ளும் அதே ரஸிகன் ஒரு நல்ல படத்தையோ அல்லது வேறு காட்சியையோ பார்த்து ரஸிப்பதற்கென்று காதுகளை மூடிக் கொள்வதில்லை. அதனால் காதுக்கான கலை கண்ணுக்கான கலையைவிட நுண்ணிய கலையென்று கருதப்படுகிறது.

இந்த நுண் கலைகளின் நோக்கமெல்லாம் மனிதனுடைய சிந்தனையைத் தூண்டிவிடுவதுதான். சிந்தனைக்குள் சிறந்த சிந்தனை தெய்வ சிந்தனைதான். தெய்வத்தை மறுக்கிற நாஸ்திகனுக்கும் கூட சிறந்த சிந்தனை எதுவென்றால் அவன் தெய்வம் என்ற



ஒரு பொருள் இல்லை என்று சொல்லக் காரணம் தேடுகிற சிந்தனைதான். நம்முடைய முன்னோர்கள், கலையின் பயன் தெய்வ சிந்தனையைத் தூண்டிவிடுவது ஒன்றேதான் என்ற நம்பிக்கையோடு இந்த நுண்கலைகளையெல்லாம் ஆலயங்களில், சிற்பமாகவும், சித்திரமாகவும், நாட்டியமாகவும் சங்கீதமாகவும், வாத்தியங்களாகவும் வைத்து வழிபடச் செய்தார்கள்.

---

# 2. தாய்மொழிக் கல்வி

இந்தியாவில் அரசியல், பொருளாதாரம், கல்வி முறை முதலான எல்லாத் துறைகளிலும் மகத்தான மாறுதல்கள் ஏற்பட்டு வருகின்றன. அந்த மாறுதல்கள் பல குழப்பங்களை உண்டாக்கிவிட்டன. இந்தக் குழப்பங்களை நிதானமாக ஆராய்ந்து தெளிவு காணவேண்டியது மிகவும் அவசியம். இல்லாவிட்டால் நாட்டின் முன்னேற்றம் தடைபடும் என்பது மட்டுமல்லாமல், பல துன்பங்களும் புகுந்துவிடும்.

மிகவும் நல்ல நோக்கங்களுடன் செய்யப்பட்ட மொழிவாரி மாகாணப் பிரிவினைகள் நாம் சிறிதும் எதிர்பாராத சிக்கல்களை உண்டாக்கிவிட்டன. இதுவரை இருந்த இடம் தெரியாதிருந்த இனப்பற்றும், மொழிப் பற்றும் வெறிகளாக மாறிப் பேய்க்கோலம் கொண்டுவிட்டன. இனப்பற்றும், மொழிப் பற்றும் இருந்து வருவதைத் தவிர்க்க முடியாது. அவைகள் இருந்துவருவதும் குற்றமன்று; நியாயமானதும் உரிமையும்கூட.

ஆனால் இந்த இனப்பற்றும், மொழிப் பற்றும் வெறிகளாகிவிட்டால், எவ்வளவு தீமை உண்டாகும் என்பதைப் பம்பாயிலும் குஜராத்திலும், வேறு சில இடங்களிலும் கண்ணாரக் கண்டுவிட்டோம். இந்த அனுபவத்திலிருந்து நாம் அறிந்துகொள்ளவேண்டிய மிக முக்கியமான படிப்பினை என்னவென்றால், இந்தத் தவிர்க்க முடியாத இனப்பற்றும், மொழிப் பற்றும் வெறிகளாக மாறிவிட இடமுண்டாகாதபடி அவற்றை அணைத்து, ஆதரித்து, அவைகளுக்குரிய உரிமைகளைக் கொடுத்து விடவேண்டும் என்பதே.



இந்தக் கண்ணோட்டத்துடன்தான் கல்வி முறையையும் கவனிக்கவேண்டும். விஞ்ஞானப் பாடங்களும், 'இஞ்ஜினியரிங்' 'மெடிகல்' முதலான உயர்தரக் கல்விகளும், ஆங்கிலம் தவிர, வேறு எந்த மொழியிலும் கற்பிக்கப்படுவதைப் பற்றி பேசவும் கூடாது என்பது மிக நல்ல எண்ணத்துடன்தான் சொல்லப்படுகிறது. என்றாலும், அந்த அபிப்பிராயத்தை ஏற்றுக்கொள்ளக் கூடிய காலம் கடந்துவிட்டது. இந்த அபிப்பிராயம், பிரதேச மொழிகளிலும் எல்லாக் கலை அறிவுகளும் வளர வேண்டும் என்ற ஆர்வத்தை அலட்சியம் செய்வதாக இருக்கிறது. இதை வற்புறுத்தினால் அது மொழி வெறிகளைக் கிளப்பிவிடும்; நாளுக்கு நாள் எதிர்ப்பு அதிகப்படும்.

ஆதலால் எல்லாக் கல்வியும் ஆரம்பத்திலிருந்து பிரதேச மொழியில்தான் போதிக்கப்படவேண்டும் என்ற கொள்கையை உடனடியாகச் செயல்படுத்த ஆரம்பிப்பதுதான் நல்லது. விஞ்ஞானத்துக்கு வேண்டிய கலைச் சொற்கள் பிரதேச மொழியில் இல்லையே என்பதற்காகக் காத்திருக்காமல், தகுந்த கலைச் சொற்கள் பிரதேசமொழியில் உருவாகிற வரைக்கும் ஆங்கிலக் கலைச் சொற்களையே உபயோகிக்கலாம்.

ஆங்கிலப் படிப்பு மட்டுமன்றித் தாய்மொழியிலும் கூட எழுதவோ படிக்கவோ தெரியாத பலபேர் இன்று

'மோட்டார்'த் தொழிலில் மிகவும் திறமையுள்ளவர்களாக விளங்குகிறார்கள். அவர்கள் 'இஞ்சின்' 'சிலிண்டர்', 'ப்ளக்', 'கார்பரேட்டர்', 'ரேடியேட்டர்', என்ற பல சொற்களையும், அவை குறிக்கும் பொருள்களையும் மிக நன்றாக அறிந்திருக்கிறார்கள். காலப் போக்கில் இந்தச் சொற்களுக்குச் சரியான தமிழ்ச் சொற்கள் புழக்கத்திற்கு வரலாம். உதாரணமாக 'ரேடியோ' என்ற ஆங்கிலச் சொல்லுக்குச் சரியான பதமாக 'வானொலி' என்ற சொல் வழங்கி வருகிறது. இந்த 'வானொலி' என்ற சொல் விஞ்ஞான அறிவுக்கும் பொருந்தியதா யமைந்திருக்கிறது.

ஆதலால் மேல் படிப்புகளை ஆங்கிலத்தில்தான் போதிக்க வேண்டும் என்ற எண்ணத்தை விட்டுவிட்டு, எல்லாப் படிப்பையும் தமிழிலேயே போதிக்க வேண்டிய முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். இந்த மாகாணத்தின் ஆட்சிமொழி தமிழாகத்தான் இருக்க வேண்டும் என்பதை அரசாங்கமே ஒப்புக் கொண்டபின் போதனை மொழி ஆங்கிலமாகவே இருக்கவேண்டும் என்பது பொருந்தாது. முற்றிலும் மாறுதலடையத் தாமதமாகும் என்றாலும், கொள்கையை உடனடியாகச் செயல் படுத்தத் தொடங்க வேண்டும். கலாசாலைகளில் எந்த மொழி போதனை மொழியாகச் சிறப்பிடம் பெறவேண்டும் என்பதைப் பொருத்தமட்டில் இதுதான் என் கருத்து.

இனி 'நாளடைவில் ஆங்கிலத்தின் இடம் இந்தி அல்லது மற்ற மொழிகளுக்குத் தரப்படவேண்டும்,' என்று இந்தியப் பிரதமர் அண்மையில் கல்வியமைச்சர்கள் மகாநாட்டில் பேசியதால் உண்டாகும் குழப்பத்தை ஆராய்வோம்.



பிரதமர் இதற்கு முன்னால் பேசிவந்திருக்கிற மொழி பற்றிய பேச்சுக்களைக் கவனித்தால், இந்தப் பேச்சுக் குழப்பமுண்டாக்கக் கூடியதாகத் தான் இருக்கிறது. ஆனாலும், அவர் எந்தக் கருத்தில் 'ஆங்கிலத்தின் இடம் இந்தி அல்லது வேறு மொழிகளுக்குத் தரப்படவேண்டும்' என்று சொன்னார் என்பதை நாம் நிச்சயிக்க முடியாது. ஆனால் ஆங்கிலத்தைப் பற்றிய நம்முடைய கருத்தை நாம் தெளிவாக்கிக் கொள்ள வேண்டும்.

நம்முடைய மாகாணத்தின் அலுவல்களைப் பொருத்த மட்டிலும் மாகாண எல்லைகளுக்குள், இதுவரையிலும் ஆங்கிலம் வகித்துவந்த இடம் தமிழுக்கே தரப்படவேண்டும் என்பதே தமிழ் நாட்டவர்களுடைய கருத்து. ஆனால் மாகாணத்துக்கு மாகாணம் உறவு கொண்டாடுவதிலும், மத்திய சர்க்காருடன் எழுதிக் கொள்வதிலும், அயல்நாடுகளுடன் வியாபாரத் தொடர்பு கொள்வதிலும் இப்போது ஆங்கிலம் வகித்துவரும் இடத்தை இந்திக்குக் கொடுத்து விடுவது எளிதான காரியமன்று.

இந்தியாவின் ஜனத்தொகையில் பெரும் பகுதியான, சுமார் இருபது கோடி மக்கள் புரிந்துகொள்ளும் இந்தி மொழிதான் இந்தியாவின் பொது மொழியாக இருக்க வேண்டுமென்று மகாத்மா காந்தியவர்கள் இந்தியா சுதந்திரம் அடைவதற்கு முன்னாலேயே சொல்லிக் கொண்டு இருந்தார். அவருடைய தலைமையின் கீழ் இந்தியாவிலுள்ள எல்லா மாகாணங்களும் துளிகூட இனவேற்றுமையோ, மொழி வேற்றுமையோ எண்ணாமல் ஒத்துழைத்துச் சுதந்திரம் கிடைத்துவிட்ட உற்சாகத்தில் அவர் சொல்லிவந்த கருத்துக்கும் மரியாதை காட்டியது போல், இந்திமொழி பொதுமொழியாக வேண்டும் என்

பதை எல்லாரும் ஏகமனதாக வரவேற்ருர்கள். அதன்படி இந்தியச் சட்டத்தில் இந்தி பொதுமொழியாகத் தீர்மானிக் கப்பட்டது. அத்துடன் அப்போதிருந்த சூழ்நிலையில் பதி னேந்து ஆண்டுகளுக்குள் இந்தியை நாடு முழுவதிலும் பரப்பிவிட முடியும் என்ற நம்பிக்கையும் இருந்தது. அப் படியே சட்டத்திலும் குறிக்கப்பட்டது.

ஆனல் அந்தச் சூழ்நிலே வெகு விரைவில் மாறிவிட் டது. இந்தியைப் பள்ளிக்கூடங்களில் கட்டாயப் பாட மாக புகுத்த முயன்றபோது பல இடங்களில் அதற்குக் கடுமையான எதிர்ப்புகள் தோன்றின. அதனல் பிரதம ரும், ராஷ்டிரபதியும், மற்றும் பொறுப்புள்ள அதிகாரி களும் இந்தியைக் கட்டாயப்படுத்தித் திணிக்க வேண் டாம் என்று சொன்னர்கள். அதன் பிறகு பிரதேச மொழிக்கு முதலிடமும், ஆங்கிலத்துக்கு இரண்டாவது இடமும், இந்திக்கு மூன்ருவது இடமும் தரப்பட்டன. தமிழ்நாட்டில் இப்போது தமிழும் ஆங்கிலமும் கட்டாயப் பாடங்களாகவும், இந்தி இஷ்டபாடமாகவும் இருந்துவரு கின்றன. பரீட்சைகளில் தேர்வதற்கும், இந்தியில் வாங் கப்படும் ‘மார்க்குகள்’ மதிக்கப்படுவதில்லே.

இந்தி, இந்தியாவின் பொது மொழியாகி விட்டால், மத்திய அரசாங்க உத்தியோகங்களுக்கு இந்தி தெரியா தவர்கள் தகுதியற்றவர்கள் ஆகிவிடுவார்களே என்ற பயத்தினல் தமிழ் நாட்டிலும் ஏராளமானவர்கள் இந்தி யைக் கற்கிருர்கள். ஆனலும் இந்த மாகாணத்தில் ஆங் கிலமொழி இப்போது வகித்துவரும் இடத்தை இந்தி மொழிக்கு விட்டுவிட வேண்டும் என்ற எண்ணம் யாருக் கும் இல்லே என்பது தெளிவாகத் தெரிகிறது.



ஆங்கிலமொழி இலக்கியச் சிறப்புகள் மிகுந்தது. அதுமட்டுமன்று. உலகத்தில் உள்ள மற்ற மொழிகளி லுள்ள இலக்கியங்களே எல்லாம் நாம் அறிந்து அனுபவிப் பதற்குக் கடந்த இருநூறு ஆண்டுகளாக நமக்கு உதவி வந்த மொழி ஆங்கிலம்தான். அந்த மொழிக்கு இப் போது நம்மிடை இருந்து வருகிற இடத்தை வேறு எந்த மொழிக்குக் கொடுத்துவிட்டாலும், ஆங்கில மொழி அறிவு நாட்டில் சிறுகிச் சிறுகி அற்றுப்போய்விடும். அது சிறிதும் விரும்பத்தக்க தன்று; ஆதலால் அகில இந்தியக் காரியங்களில் ஆங்கிலமிருந்து வரும் இடங்களே எல்லாம் இந்திக்கு விட்டுவிடவேண்டும் என்பது இப்போது எண் ணத்தக்கதன்று. குறிப்பாகத் தமிழ்நாட்டு மக்களுக்கு ஆக்கிலத்தைவிட இந்திதான் அன்னிய மொழி. அதனல் ஆங்கிலத்தின் இடத்தை இந்திக்கு விட்டுவிடுவதைத் தமிழர்கள் ஆதரிக்க மாட்டார்கள்.

இப்படிச் சொல்வதால் நான் இந்தி மொழியை வெறுப்பதாக எண்ணிவிடக் கூடாது. இந்தி மொழி பொது மொழி ஆவதை நாம் எதிர்க்கவில்லே. ஆனல் இப்போது ஆங்கிலம் அமர்ந்துள்ள எல்லா இடங்களேயும் இந்திக்கு விட்டுவிடுவதால் தமிழ் நாட்டுக்கு உண்டாகக் கூடிய பல கஷ்ட நஷ்டங்களேத் தவிர்க்க ஒரு வழி காண வேண்டும் என்பதுதான் முக்கியம். அதற்கு மிகவும் எளி தான வழி என்னவென்ருல், இந்தியும் ஆங்கிலமும் இந்திய அரசாங்கத்தின் பொது மொழிகளாக இருக்கச் செய்வதே. இது எல்லா மாகாணங்களுக்கும் நல்லது என்ருலும், குறிப்பாக இந்தி தெரியாத தென்னுட்டு மாகாணங்களுக்கு மிகவும் நல்லது. இதை நம்முடைய சென்னே அரசாங்கமும் ஆதரிக்கும் என்றே எண்ணு

கிறேன். மாகாண அரசாங்கமும் பொதுமக்களும் ஒரு முகமாக இதை விரும்பினுல், மத்திய அரசாங்கம் இணங் காமற்போகாது. இதைச் செய்யாவிட்டால், பள்ளிக் கூடங்களில ஆங்கிலத்தைக் கட்டாயப் பாடமாக வைத்தி ருப்பது அர்த்தமில்லாதது.

எனவே, தாய்மொழியில் நவீன அறிவுகளும் சேர்ந்து அது வளர்ச்சி பெறுவதற்கு விஞ்ஞானக் கல்விகளேயும், தமிழிலேயே போதிக்க வேண்டும். மாகாணக் காரியங் களில் தமிழே ஆட்சி மொழியாக இருக்கவேண்டும். அகில இந்தியக் காரியங்களுக்கும், அயல் நாடுகளின் தொடர்புகளுக்கும், ஆங்கிலமே பொது மொழியாக நீடிக்க வேண்டும்.

---

# 3. 'வள்ளுவனும் கம்பனும்'

கோவைக் கலைக் கல்லூரியில் 15-2-57-ல் நிகழ்த்திய ஆண்டு விழாச் சொற்பொழிவு.

**அன்பர்களே !**

"அரிது அரிது மானிடராய்ப் பிறத்தலரிது" என்று நம் முன்னோர்கள் கூறிப் போந்துள்ளனர். ஆனுல் இன்று நாம் பார்க்கும்போது மானிடராகப் பிறந்தாலும், மாணவராகும் வாய்ப்புப் பெறுதல் மிகமிக அரிது என்று உணர்கின்ருேம். ஏனென்ருல் மாணவப் பருவமே வாழ்க்கையில் கிடைத்தற்கரிய பருவமாகும்! பிற்கால வாழ்க்கைக்கு வேண்டிய எல்லாத் தகுதிகளேயும் உரு வாக்கும் பருவம் இப்பருவமே!

**எனது மாணவப் பருவம் :**

நான் இந்தக் கல்லூரியின் முன்னுள் மாணவன்! உங்களேயும், இந்தக் கல்லூரியையும் எண்ணும்போதெல் லாம் மங்கி மறைந்துபோன என் பழங்கால நினைவுகள் அனைத்தும் ஒன்றன்பின் ஒன்ருக மீண்டும் பசுமை கொண்டு எழுந்து என் கண்முன் நிற்பதைக் காண் கின்றேன். நான் மாணவனுக இருந்தபோது நான்

செய்த சிறு பிழைகளைப் பொறுத்தருளி, என்னைப் பெருநெறியில் செலுத்திய பல ஆசிரியர்கள் இங்கு இருந்தனர்; அவர்களுக்கு நான் என்றென்றும் கடமைப்பட்டிருக்கின்றேன்.

## நானும் தவறு செய்தேன் !

எனக்குக் கணக்கு வராது; என் நண்பன் ஒருவனுக்குக் கணக்கைத் தவிர வேறு ஒன்றுமே வராது! ஏனைய பாடங்களில் நல்ல மதிப்பெண் பெற்றுக் கணக்கில் மட்டும் சரியாக மதிப்பெண் பெறத் தவறிய என்னை ஆசிரியர் கடுமையாகக் கோபித்துக்கொண்டார்; எந்தப் பாடத்தில் எவ்வளவு மதிப்பெண் பெற்றாலும் கணக்கில் தேர்வெண் வாங்காவிட்டால் பல்கலைக் கழகத் தேர்வுக்கு அனுப்பாமல் தடுத்து நிறுத்திவிடுவேன் என்று முன்னறிவிப்புச் செய்தார். இந்த நிலையில் நண்பன் எனக்கு உதவி செய்ய முன் வந்தான். இருவரும் ஒரு திட்டமிட்டோம்! நண்பனுடைய பதிவெண்ணை எனது விடைத்தாளில் நான் எழுதிவிடவேண்டியது! எனது பதிவெண்ணை நண்பன் தனது தாளில் எழுதிவேண்டியது. இப்படிச் செய்தால் கணக்கில் நான் தேர்ந்துவிடுவேன்! நண்பனோ, ஏனைய பாடங்களில் எல்லாம் தோல்வி எண்ணே வாங்குகின்றவன். ஆதலால், கணக்கிலும் தோல்வியடைவதைப் பற்றிக் கவலையில்லை என்று சொல்லிவிட்டான்! ஆனால் விதி வேறு வகையில் வேலை செய்துவிட்டது! நண்பன், சொன்னபடி செய்தான்! நானோ மறந்துபோய் என் விடைத் தாளில் என் பதிவெண்ணையே எழுதிவிட்டேன்! முடிவு? ஒரே பதிவெண் கொண்ட இரண்டு விடைத்தாள்கள்! ஆசிரிய



ரிடம் உண்மையைக் கூறி அழுதேன்! என்னை மன்னித்தார்! கணக்கில் மட்டும் தவறிவிட்டால் ஒரு மாணவனை யாரும் பல்கலைக் கழகத் தேர்விற்குச் செல்லுவதினின்றும் தடுத்துவிடமாட்டார்களென்றும், நான் கணக்கிலே மேலும் ஊக்கம் காட்டுவதற்காகவே அவ்வாறு முன்னறிவிப்புச் செய்ததாகவும் அன்புடன் கூறினார். உண்மை சொன்னதற்காக என்னைப் பாராட்டினார். அன்றிலிருந்து உண்மையின் சிறப்பு எனக்கு நன்கு விளங்கியது.

## திருக்குறளும் கம்ப ராமாயணமும் :

வாழ்வில் உண்மை பேசுவதும், ஒழுக்கமாக நடந்து கொள்ளுவதும்தான் ஒருவனுக்கு உயர்வைத் தரும். அந்த வகையில் மாணவர்களுக்கு வழி காட்டவே திருக்குறளும் கம்ப ராமாயணமும் நம் தமிழ் நாட்டில் ஏற்பட்டிருக்கின்றன. உலகத்து நூல்கள் சொல்லும் நீதிகளெல்லாம் வாழ்வியலுக்கு எவ்வளவு தொலைவுக்கு ஒத்துவரும் என்று சொல்ல முடியாது. ஆனால், வள்ளுவர் செய்த குறளோ, சமயக் கணக்கர் வழிநில்லாது, உலகியலோர் வழிநின்று, உண்மையினை விளக்கிச் செல்கின்றது. கம்ப ராமாயணமும், இதே போன்று மக்களுக்குப் பயன்படும் மெய்ப்பொருள்களை எடுத்துக் காட்டிச் செல்கின்றது.

இந்திய நாட்டிலே பல இராம காதைகளிருக்கின்றன. கம்பனுக்கு முன் "தேவபாடையில் இக்கதை செய்தவர் மூவரானவர்". இப்படிப் பல கதைகளிருந்தும், கம்பன் ஏன் தமிழில் இயற்றினான் என்ற கேள்வி எழலாம். அது நல்ல கேள்வியே. கம்பன்; தான்

வான்மீகியைவிடச் சிறந்த கவிஞன் என்று உலகுக்குக் காட்டுவதற்காக எழுதவில்லை; ஆனால் வான்மீகி எந்தக் கருத்தினை மக்களிடையே பரப்பவெண்ணி எழுதினாரோ, அதே கருத்தினை மக்களிடையே ஆழமாகப் பதியச் செய் வதற்கே கம்பன் தன் இராமாயணத்தை இயற்றினான் எனலாம்.

வான்மீகி, இராமனைக் கடவுளின் திரு அவதாரமாக எண்ணுகின்றார்; பிறரும் எண்ணுகின்றனர். எனினும் கம்பனைப்போல் இராமனின் முழு உருவத்தையும் நம் முன் கொண்டுவந்து காட்டப் பின்தங்கிவிட்டன, அவர் தம் இராம காதைகள். ஒவ்வொன்றும் ஒவ்வொரு பகுதியில் குறைபாடுடையதாகவே இருக்கின்றது. வான்மீகி, இராமனைத் திருமாலின் ஒரு கூறாகவே எண்ணுகின்றார். ஆனால், கம்பனோ திருமாலுக்கும் மேலாக—மும்மூர்த்திகளுக்கு மேலாக—ஆதியும் அந்தமும் இல்லாத ஒரு பரம்பொருளாகவே காண்கின்றான். இதனால் கம்பனது பொறுப்பு மிகவும் பெரிதாகிவிட்டது. மக்கள் பண்பிலே இயல்பாகக் காணப்படும் குறைகளையெல்லாம் களைந்து இராமனுக்குப் பண்பு கொடுக்கவேண்டிய பெரிய கட்டத்தில் கொண்டுவந்து நிறுத்தப்பட்டுவிட்டான். முதனூலாகிய வான்மீகியைத் தழுவிக் கூட்டிக் குறைத்து, மாற்றி மறுத்து இராமனைச் சிறந்த பண்புக்கெல்லாம் உறைவிடமாகக் காட்டுகின்றான். அனுமன் வாக்கினாலேயே இராமன் யார் என்பதைத் தெளிவுபடுத்துகின்றான் கம்பன்.

அசோக வனத்தை யழித்த அனுமன் இராவணன் முன்பு நிறுத்தப்படுகின்றான்; அவனை நோக்கி "யாரை நீ? என்னை இங்கு எய்த காரணம்? ஆர் உனை விடுத்த



வர்?" என்று இராவணன் கேட்க, அதற்கு அனுமன் யாருடைய ஏவலாலும் வரவில்லை; இராமன் ஆணையால் வந்தேன்; அவன்,

"மூலமும் நடுவும் ஈறும் இல்லதுஓர் மும்மைத்தாய்
காலமும் கணக்கும் நீத்தகாரணன்; கைவில் ஏந்திச்
சூலமும், திகிரிசங்கும், கரகமும்துறந்து, தொல்லை
ஆலமும், மலரும், வெள்ளிப் பொருப்பும் விட்டு
அயோத்தி வந்தான்"

என்று மும்மூர்த்திகளுக்கும் மூலமான பரம்பொருளே இராமன் என்று கூறுகின்றான் கம்பன். வான்மீகி படைத்த பாத்திரங்கள் எல்லாம் அவ்வளவு குண விசேடத்தால் பரிசுத்தமாக விளங்குகின்றன எனக் கூறுவது கடினமே. ஆனால் கம்பன் பாத்திரங்கள் குணங் குறைபாடின்றி விளங்குகின்றன.

இந்த வகையில் கம்பனுக்கு வழிகாட்டியாகத் திருவள்ளுவர், இளங்கோ முதலியோர் இருந்திருக்கின்றனர். அவர்கள் சென்ற நெறியிலே, தமிழர் பண்பாடு இவை என அவர்கள் வரையறுத்த பாதையிலே, மரபு பிறழாது, வடநாட்டுக் கதையாகிய இராம காதையை நடத்திச் சென்ற கம்பனின் தமிழ்ப் பற்றிற்கும், அவன் புலமை நலத்திற்கும் எதனைத்தான் உவமை கூற முடியும்? கம்பனின் ஆற்றலையும் தறுகண்மையையும் நாம் புகழ வேண்டுமானால், கம்பனது வாக்காலேயே,

"உயர் சென்னி
துண்டமதி வைத்தவனை ............
ஒத்தான்—என்றும்
"என்றுமுள தென்றமிழ் இயம்பி
இசை கொண்டான்"

என்றும் புகழவேண்டும். கம்ப ராமாயணம் காலத்தைக் கடந்த ஒரு காவியம். வள்ளுவர் குறளோ நாடு, மதம், மொழி ஆகிய எல்லாம் கடந்த பெருநூல்! திருக்குற ளுக்குக் காலத்திற்குக் காலம் பலர் பலதிறப்பட்ட உரை களைச் செய்துபோந்துள்ளனர். அவற்றில் அருமையும் உண்டு; எளிமையும் உண்டு. இருந்தாலும் இன்று வரையில் வள்ளுவர் அடிமுடி காணப்பெருத இறைவனுக இருக்கின்ருர்! இந்த நிலையில், மேலும் மேலும் திருக் குறளைப் படித்துக்கொண்டே சென்ருல்தான் போகப் போக உண்மை ஓரளவிற்குத் தோன்றத் தொடங்கும்.

### யார் தமிழ் மாணவன் ?

திருக்குறளையும் கம்ப ராமாயணத்தையும் பிற இலக்கியங்களோடு கூட்டிப் படித்துப் பயன்பெறும் மாணவர்களே உண்மைத் தமிழ் மாணவர் ஆவர். அத் தகைய தகுதியினைப்பெற்று, வாழ்வின் வளமெலாம் உற்று, மாணவர்களாகிய நீங்கள் நெடிய நாள் வாழ்வீர் களாக! வணக்கம்.

---

# 4. தமிழ் இசையும் கலையும்

### தமிழிசை

'தமிழ் இசை' என்ருல் 'தமிழ்ப்பாட்டு' என்று அர்த்தம். 'இசை' என்ற பதத்தை நாம் பல சமயங் களில் 'சங்கீதம்' என்ற பதத்துக்கு நேரான பதம் என்ற பொருளில் பிரயோகப் படுத்துகிருேம். அது சரியல்ல. தமிழ் இலக்கிய வழக்கத்தில் பாடுவதற்கு இசையும்படி இணைக்கப்பட்ட சொல்லடுக்குத்தான் 'இசை' என்று பெயர். வெறும் ஓசைக்கு 'இசை' என்ற பெயர் தமிழில் இல்லை. இதன் உண்மையைப் "பண் என்னும் பாடற்கு இயைபு இன்றேல்" என்ற திருக்குறள் சொற் ரெடரில் காணலாம். 'இயைபு' என்பதும் 'இசைவு' என்பதும் ஒரே பதம். 'பண் என்னும் பாடற்கு இயைபு இன்றேல்' என்பதற்கு அர்த்தம்: 'பாடுவதற்கு இசை யாத பாட்டு என்ன பாட்டு? என்ருே, அல்லது பாடு வதற்கு இசையும்படியான சொல்லடுக்கு இல்லாத வெறும் ஓசையினுல் என்ன பயன்? என்ருே பொருள் கொள்ளலாம். இத்த இரண்டு விதங்களில் எந்த விதத்தில் பொருள் செய்தாலும் சங்கீதத்துக்கு சாஹித்யமே பிரதானம் என்பது விளங்கும்.

ஆதலால் 'தமிழிசை' என்றால் 'தமிழ்ப் பாட்டு' என்பது மட்டும்தான் பொருள். அதனால் 'தமிழிசை இயக்கம்' என்பதற்கு 'தமிழ்ப் பாட்டு வேணும் என்ற முயற்சி' என்றுதான் பொருளாகும்.

நூற்றுக்கு நூறும் தமிழர்களே கூடியுள்ள சபைகளிலும் தமிழைத் தம் தாய் மொழியாகப் பெற்ற சங்கீத வித்வான்களே பாடுகின்ற பாட்டுக் கச்சேரிகளில் தமிழ்ப் பாட்டே ஒன்றுகூட இல்லையே என்ற ஏக்கத்திலிருந்து எழுந்தது இந்தத் தமிழிசை இயக்கம்.

### பிறமொழி வெறுப்பினால் அல்ல

இந்த இயக்கத்தின் ஆரம்ப காலத்தில், இது தமிழ் மக்களுக்குப் பிற மொழிகளின் மீது வெறுப்பை வளர்க்க வந்த தீமை என்று பல நல்லவர்களும் கூட இதை பலமாகக் கண்டித்தார்கள். சங்கீத வித்வான்களில் பெரும்பாலரும் இதை ஏகமனதாக எதிர்த்தார்கள். சில சங்கீத வித்வான்கள் இந்த இயக்கத்தின்மீது அவர்களுக்கு வந்த கோபத்தால் 'துக்கடா' வாகக் கூட இனித் தமிழ்ப் பாட்டைப் பாடுவதில்லை என்று பயமுறுத்தினார்கள். சங்கீத வித்வான்களுக்குத் தமிழிசை இயக்கத்தின்மீது வெறுப்பு வந்ததில் வியப்பில்லை. அவர்களுக்கு வந்த ஆத்திரம் மிகவும் அநுதாபத்துக்குரியது. ஏனென்றால், எந்த மொழியிலாவது ஒரு பாட்டைத் தமிழ் நாட்டுக் கர்னாடக சங்கீத பாணியில் ஸ்வரப்படுத்திப் பாடுவதற்குப் பழகிக் கொள்ள ஒருசங்கீத வித்வான் செய்கின்ற சாதகங்கள் கொஞ்ச நஞ்சமல்ல. வெகு பாடுபட்டுத் திருப்பித் திருப்பிப் பல நாள் பாடிப் பயிற்சிபெற



வேண்டும். ஒவ்வொரு சங்கீத வித்வானும் குறைந்த பட்சம் இருபது முப்பது பாட்டுகளையாவது இப்படிப் பாடிப் பாடி பயிற்சிபண்ணி வைத்திருப்பார்கள். அப்படி ஸ்வர விஸ்தாரத்தோடு அவர்கள் அப்யாசம் செய்திருந்த எல்லாப் பாட்டுகளும் தமிழ் அல்லாத பிறமொழிப் பாட்டுகளாகவே இருக்கும். கச்சேரியைக் கேட்க வந்த ரஸிகர்களில் யாரேனும் தமிழ்ப் பாட்டு பாடவேணும் என்று கேட்டுவிட்டால், அதற்காகக்கச்சேரியின் முடிவில் 'துக்கடா'வாக ஒரு தெம்மாங்கு, தில்லானா, காவடிச் சிந்து அல்லது திருப்புகழ் இவற்றைத் தப்பும் தவறுமாகக் கூடப் பாடுவார்கள். இந்தத் தமிழ்ப் பாட்டுகளுக்கு ஸ்வர விஸ்தாரங்கள் இருக்காது. தமிழ்ப் பாட்டு பாடச் சொன்னவர்கள் இந்தத் தெம்மாங்கு தில்லானாவிலேயே திருப்தியடைந்து விடுவார்கள். அப்படியே பழகி விட்ட சங்கீத வித்வான்களைத் திடீரென்று 'தமிழ் நாட்டில் தமிழ்ப் பாட்டுகளைத்தான் பாட வேண்டும்' என்றால் அவர்களுக்குக் கோபம் வராமல் வேறு என்ன வரும்?

### பிறமொழி மோகம்

ஆகையினால் தமிழ் நாட்டுப் பாட்டுக் கச்சேரிகளில் தமிழ்ப் பாட்டுக்குச் சிறப்பில்லாது போன குற்றம் சங்கீத வித்வான்களைச் சேர்ந்தது அல்ல. சுமார் இருநூறு ஆண்டுகளாகத் தமிழர்கள் தங்கள் தாய் மொழியைப் புறக்கணித்து விட்ட பொல்லாங்கே இதற்குக் காரணம். ஆங்கில அரசாட்சி இங்கே வேரூன்றி, நம்முடைய அடிமை மனப்பான்மை அதிகரித்து, ஆங்கில மொழியின் மோகத்தில் அழுந்திக் கிடக்க நேர்ந்து விட்டது. அடிமைத் தனத்தை நீக்குவதற்காகக் காங்கிரஸ் மகா சபை ஆரம்

பித்த சுதந்தர முயற்சிகளையும் கூட நெடுநாள் வரையி லும் ஆங்கில மொழியிலேயே தான் விவாதித்து வந் தார்கள்.

அற்புதப் பிறவியாகிய மகாத்மா காந்தியவர்கள் நமக்குத் தலைவராக வந்த பிறகுதான் இந்த நாட்டில் அங்கங்கே உள்ளவர்கள் அவரவர்களுடைய தாய் மொழியை அதுநாள் வரையிலும் அலட்சியம் செய்து விட்டதன் தீமைகளை அறியலானார்கள்.

## காந்தியடிகளின் தாய்மொழிப் பற்று

முதல் முதல் தமிழ் நாட்டில் காந்தியடிகள் சுற்றுப் பிரயாணம் வந்தபோது ஒரு ஊரில் அவருக்கு மிகச் சிறப்பான வரவேற்பு நடத்தப் பட்டது. அப்போது நான் அங்கிருந்தேன். காந்தியடிகளுக்கு வாசித்துக் கொடுத்த வரவேற்புப் பத்திரம் ஆங்கில மொழியில், மிக உயர்ந்த பட்டுத் துணியின்மேல் வெகு அழகாக அச்சடித்து வழங்கப்பட்டது. அந்த வரவேற்புக்குப் பதில் சொல்லும் போது மகாத்மா என்ன சொன்னார் என்றால் "உங்கள் வரவேற்புக்கு வந்தனம். இந்த வரவேற்புப் பத்திரம் உங்களுடைய தாய் மொழியிலும் இல்லாமல் என்னு டைய தாய்மொழியிலும் இல்லாமல் நம்மை அடிமைப்படுத் தியிருக்கிற அன்னிய மொழியில் அச்சிடப் பட்டிருப்பது மிகவும் வருந்தத் தக்கது. இதை நான் பலமாகக் கண்டிக்க வேண்டியிருப்பதற்கு வருந்துகின்றேன். ஆங்கில மொழி யின் மேல் நமக்கு இன்னும் இவ்வளவு மோகம் இருக்கிற போது ஆங்கில ஆட்சியையும் நம் அடிமைத்தனத்தையும் எப்படி அகற்ற முடியும்?" என்று சொன்னார்.



## மயக்கம் தீர்க்க வந்த மருந்து

ஆங்கில மொழியில் இருந்த ஆசையையாவது நல்ல ஊதியம் வரக்கூடிய உத்தியோகங்களைக் கருதிய தற்காக என்று சொல்லலாம். அத்துடன் ஆங்கில மொழி மோகம் அந்த மொழியைக் கற்று அறிந்தவர்க ளிடத்தில்தான் இருந்தது. ஆனால், கொஞ்சம் கூட நமக்கு அர்த்தம் தெரியாத ஒரு மொழியில் பாடுகின்ற பாட்டுகளைக் கேட்டுக்கொண்டு அதை ரஸிப்பதுபோல நெடுநேரம் தலையசைத்துக்கொண்டு உட்கார்ந்திருக்கும் மயக்கத்தை என்னென்று சொல்லுவது? இந்த மயக் கத்தைத் தெளிவிக்க வந்த முயற்சிதான் தமிழிசை இயக்கம்.

தமிழ் நாட்டில் தமிழர்களே கூடியுள்ள சபைகளில் நடக்கிற பாட்டுக் கச்சேரிகளில் தமிழ்ப் பாட்டுக்குத்தான் சிறப்பிடம் இருக்கவேண்டும் என்ற ஒரே ஒரு நோக் கத்தைக்கொண்டுதான் தமிழிசை இயக்கம் எழுந்தது என்றாலும், அதன் அந்தரங்கம் இன்னும் ஆழ்ந்ததாக இருப்பதை நாம் எண்ணிப் பார்க்கவேண்டும். சிறிது நாம் சிந்தித்துப் பார்த்தால் தமிழ் மொழியும், தமிழ் இன மும், தமிழ் நாடும் நாளுக்கு நாள் சிறப்பிழந்து சீர்குலைந்து வருகின்றனவே என்று, நாம் அறியாமலும் நமக்குள் குமுறிக்கொண்டிருக்கிற உணர்ச்சிகளின் ஒரு சிறு பகுதியே இந்தத் தமிழிசை இயக்கம்.

## தமிழ் மொழியின் தனிச்சிறப்பு

அனாதியான ஆண்டவனைப்போல் தமிழ் மொழியும் ஆதி அந்தம் அறிய முடியாத பெருமையுள்ள புராதன

மொழி என்று புகழப்படுவது; அழிவில்லாத ஜீவதத்துவம் நிறைந்துள்ளதால் 'என்றுமுள தென்றமிழ்' என்று கம்பன் பாடியிருப்பதில் களிப்பூட்டுவது; பல்லாயிரம் ஆண்டுகள் சென்றும், இன்னும் இளமையும் வளமையும் குறையாத எழிலுடையதாக இருப்பதனால் 'கன்னித் தமிழ்' என்று கற்றவர்கள் பாராட்டுவது; கல்வி யறிவும் கவிதைச் சிறப்பும் கலை யறிவும் மிகுந்துள்ள காரணத்தால் அதைப் படிக்கிற எவருக்கும் இன்பமே தந்து "யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல் இனிதாவதெங்கும் காணோம்" என்று பாரதி பாடியது மிகவும் சரிதான் என்று உலகிலுள்ள பல மொழிகளிலும் ஆராய்ச்சியுள்ள அறிஞர்கள் ஆமோதிப்பது; சமரச சன்மார்க்கத்தையும் சமாதான சமுதாய வாழ்வையுமே கோரி, அன்பையும் அமைதியையும் வளர்ப்பதையே நோக்கமாகக் கொண்ட இலக்கியங்கள் மலிந்துள்ளதனால் 'தண்டமிழ்' என்று கொண்டாடப்படுவது; உலகத்திலுள்ள எல்லா மனிதர்களும் ஒரே கடவுளின் மக்கள் என்னும் உண்மையை நெடுங்காலத்துக்கு முன்னாலிருந்தே உணர்ந்து 'யாதும் ஊரே, யாவரும் கேளிர்' என்ற நினைப்பு நம்முள் நிலைபெறச் செய்தது; மத வெறி, நிற வெறி, மொழி வெறி என்பன போன்ற வெறுப்புணர்ச்சிகளை முற்றிலும் விலக்கிவிட்டுச் சிங்களம், புட்பகம், சாவகம் முதலிய தீவுகளிலும், எகிப்து, கிரேக்கம், இத்தாலி முதலிய நாடுகளிலும் சென்று பல நாட்டு மக்களோடும் உறவுகொண்டு வாணிபம் நடத்திப் பரிசு பெற்று வந்த பண்புகளில் நம்மைப் பழக்கி வைத்தது; எழுபது வயதுக்குமேல் அம் மொழியைக் கற்றறிந்து அனுபவிக்கவேண்டும் என்று காந்தியடிகளை ஆசை



கொள்ளத் தூண்டியது; பாரபட்சம் அறியாத சத்திய சீலராகிய அந்தக் காந்தியடிகளால் 'தமிழ் மிகச் சிறந்த மொழி' என்று பாராட்டப்பெற்றது; 'கண்கண்ட தெய்வம்' என்னும் காந்தி மகாத்மா எதற்காக அவதரித்து, எதை வாழ்ந்து காட்டி, எதற்காகத் தமது உயிரையும் தந்தாரோ அந்தக் 'கொல்லாமை', 'பொய்யாமை' என்ற இரண்டு கொள்கைகளையே தன் குல தர்மங்களாகக் கொண்டு, இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னாலிருந்து கூடிய மட்டிலும் நம்முடைய வாழ்க்கையில் அவற்றைக் கொண்டு செலுத்த சொல்லிக் கொடுத்தது. இந்தச் சிறப்புக்களெல்லாம் தமிழ் நம்முடைய தாய் மொழி என்பதற்காகச் சொல்லப்படும் தற்புகழ்ச்சிகள் அல்ல. எல்லா மொழிக்கும் அதனதன் சிறப்புகள் இருக்கலாம். அவரவர்கள் தாய் மொழியே அவரவர்களுக்குச் சிறந்ததாகத் தோன்றும். என்றாலும் தமிழ் மொழிக்கே உள்ள தனிச்சிறப்புகளை மற்றவர்கள் மதிக்காவிட்டாலும் நாம் மறந்துவிடக்கூடாது. இந்தச் சிறப்புகள் தமிழ் இலக்கணத்திலும் உண்டு;

## பிற மொழிகளுக்கு இல்லாத பெருமை

இலக்கியங்களிலும் உண்டு. இலக்கணத்தைப் பற்றி இங்கே விரிக்க இடமில்லை. இலக்கியத்தை மட்டும் பார்ப்போம். மேல்நாட்டு மொழிகள் விஞ்ஞான வளர்ச்சியையும் அரசியல் வித்தியாசங்களையும் அதிகமாக விவரிக்கின்றன. பல சாஸ்திரங்களுக்கும் இருப்பிடமாகிய வடமொழி ஆன்மஞானத்தையும் தெய்வ சக்தியையும் கர்மங்களின் பலாபலன்களையும் பிறப்பு இறப்பின் தொடர்ச்சிகளையுமே அதிகமாகப் பேசுகின்றது. அமெரிக்க

இலக்கியங்கள் விஞ்ஞான வித்தையைப் பணமாக்கிச் செல்வத்தைப் பெருக்குகின்ற பொருளாதார ஆசையையே அதிகமாகப் புகட்டுகின்றன. ஜெர்மனி இலக்கியங்கள் போர் வீரத்தையும் படைச் செருக்கையுமே மிகுதியாகப் பாராட்டுகின்றன. பிரெஞ்சு இலக்கியங்கள் மனித வாழ்க்கைக்கு வேண்டிய சுகபோக சாதனங்களையே அதிகமாகச் சுட்டிக் காட்டுகின்றன.

விஞ்ஞான அறிவும், அரசியல் நுணுக்கமும், ஆன்ம ஞானமும், தெய்வ நம்பிக்கையும், கர்மபலன்களின் ஆராய்ச்சியும், பிறப் பிறப்பின் விசாரணையும், பொருளாதார பலமும், போர் வீரமும், படைச் செருக்கும், சுகபோக சாதனங்களும் ஆகிய இவை அனைத்தும் மனித வாழ்க்கைக்கு அத்தியாவசியமான விஷயங்களே. ஆனால் இவற்றுள் எதுவும் தனியாக உலக வாழ்க்கைக்கு உதவாது. இவை அனைத்தும் ஏறத்தாழவாவது சேர்ந்திருக்கும் இடத்தில்தான் மக்கள் மனித வாழ்க்கை நடத்த முடியும். அதற்காக மேற்சொன்ன அத்தனை விஷயங்களையும் சேர்த்து, ஒவ்வொரு விஷயத்தையும் வைக்கவேண்டிய இடத்தில் வைத்துச், சொல்லவேண்டிய முறையிற் சொல்லி அறிவுறுத்துகின்ற ஒரு இலக்கியம் தமிழ் மொழியில்தான் உண்டு; வேறு எந்த மொழியிலும் இல்லை. அந்த இலக்கியம்தான் திருக்குறள். அந்த திருக்குறளுக்கு விரிவுரை காணும் கதைதான் கம்ப ராமாயணம். திருக்குறள் அது எழுதப்பட்ட அன்றைக்கும், இன்றைக்கும், இனி என்றைக்கும் மானிட வர்க்கம் சமாதானமாகவும் சந்தோஷமாகவும் வாழ்க்கை நடத்துவதற்கு வேண்டிய எல்லா அறிவுகளும் அறங்களும் அடங்கியது. தமிழ் மொழியின் தனிச்சிறப்புக்கு அதைவிட வேறு என்ன உதாரணம் வேண்டும்?



அப்படிப்பட்ட அருமைத் தமிழ் மொழியின் பெருமை அருகி வருவதைக் கண்டு நமக்குள் உண்டான அவஸ்தையின் ஒரு சிறு பகுதியே இந்தத் தமிழிசை இயக்கம்.

தமிழ் மொழிக்குத் தனிச்சிறப்புத் தருவது திருக்குறள்தான் என்றாலும் அந்தத் திருக்குறள் உண்டானதே தமிழ் இனத்தின் தனிப் பண்புகளில் இருந்துதான். தமிழ் இனம் என்று ஒரு இனம் உண்டா என்ற தயக்கம் உண்டாகலாம். ஆம்; உண்டு.

## ஒற்றுமையில் வேற்றுமை

வேற்றுமைகள்தான் உலகத்தின் இயல்பு. அந்த வேற்றுமைகள் தாம் உலகத்தின் அழகும் கூட. வேற்றுமைகள் இல்லையானால் உலகம் இல்லை. எண்ணிறந்த இந்த வேற்றுமைகள் எல்லாம் ஒரே ஒரு சக்தியின் வெவ்வேறு தோற்றங்கள் என்பது மிகவும் உண்மை. வேற்றுமைகளின் உள்ளிருக்கும் ஒற்றுமையை உணர்வதுதான் உயர்ந்த அறிவு. ஆனாலும் வேற்றுமைகள் வேற்றுமைகள்தாம். அவற்றை மாற்றவும் முடியாது; மறைக்கவும் கூடாது. மாற்றிவிட முயல்வதும் மடமை. வயிரமணியும் அடுப்புக்கரித்துண்டும் ஒரே வஸ்துதான். அதனால் வயிரத்தை நாம் கரித்துண்டாக வைத்துவிட முடியுமா? ஒரு கரித்துண்டு அது இருந்த இடத்தினாலும், ஏற்பட்ட சூழ்நிலைகளாலும், நேரிட்ட நெருக்கடிகளாலும் வயிரமாக மாறுகின்றது. இன்னொன்றுக்கு அந்த சூழ்நிலைகள் இல்லாததால் வெறும் கரித்துண்டாகவே இருக்கிறது. 'மாம்பழம்' என்றால் ஒரு

வகைப் பழத்தைக் குறிக்கிறது. ஆனால் மாம்பழத்தில் எத்தனையோ தினுசுகள் இருக்கின்றன. ஒவ்வொரு தினுசுக்கும் உருவமும், நிறமும், மணமும், சுவையும் வெவ்வேறாக இருக்கின்றன. அதைப்போலவே உலகத்திலுள்ள தாவர ஜங்கமப் பொருள்கள் எல்லாவற்றிலும் இந்த இன வேற்றுமைகள் இருக்கின்றன. இந்த வித்தியாசங்களை மாற்றிவிட்டால் உலகத்தில் இன்பமில்லை. உலகம் முழுவதும் ஒரே ஜடம் ஆகிவிடும். ஆதலால் இந்த இன வேற்றுமைகளை மாச்சரியங்களுக்கு இடங்கொடுக்காமல் ரஸிக்கவேண்டுமே யல்லாமல் அழிக்க முயலக்கூடாது; முயன்றாலும் முடியாது.

## ஒப்பற்ற தமிழ் இனம்

மற்ற எல்லாப் பொருள்களிலும் இன வேற்றுமை இருப்பதைப் போல மனிதர்களுக்குள்ளும் இன வேற்றுமை உண்டு.

வசிக்கின்ற இடத்தின் சீதோஷ்ணங்களாலும், நீர் வள நிலவள நிலைமைகளாலும், உணவு, உடை முதலிய வித்தியாசங்களாலும், இவற்றைச் சேர்ந்த பழக்க வழக்கங்களாலும் கல்வியினாலும், கலைகளினாலும், மொழியினாலும் வெவ்வேறு நாட்டின் மக்கள் வெவ்வேறு இனங்களாக இருந்து வருவது வெளிப்படை. அப்படிப்பட்ட இனங்களில் தமிழ் இனம் ஒரு தனித்தொகுதி. இந்தத் தமிழ் இனம் மிக மிகப் பழைமையானது. அதன் சரித்திர ஆரம்பம் எப்போது என்று எவராலும் கணிக்க முடியாது. தொன்று தொட்டு இந்தத் தமிழ் இனம் மிகச் சிறந்த கல்வியையும் கலைகளையும் உலகத்துக்கு உதவியிருக்கிறது. சித்திரம், சிற்பம், சங்கீதம், நடனம்,



நாடகம், கவிதை, இசைக் கருவிகள் இவற்றில் தமிழ் இனம் என்றும் தலைசிறந்து விளங்கி வந்திருக்கிறது. பண்டைய தமிழ் இனம் கண்டறிந்த இல்லற ஒழுக்கம், குடி முறை, அரசியல் முறை, வரி முறை, வாணிப முறை, சமுதாய ஒத்துழைப்பு, சமதர்மப் பங்கீடு முதலியவற்றிற்கு இணையான ஏற்பாடுகள் வேறு எந்த நாட்டிலும் எந்தச் சமூகத்திலும் இன்றளவும் இருந்ததில்லை. அதனால்,

*தமிழன் என்றொரு இனமுண்டு;*
*தனியே அவற்கொரு குணமுண்டு;*
*அமிழ்தம் அவனுடை மொழியாகும்;*
*அன்பே அவனுடை வழியாகும்.*

இப்படிப்பட்ட தமிழ் இனத்தின் பெருமைகள் நாளுக்கு நாள் நலிந்து வருவதைத் தடுக்கவேண்டும் என்று நமக்குண்டான நல்லுணர்ச்சியின் ஆரம்ப வேலை தான் இந்தத் தமிழிசை இயக்கம்.

## இழந்த பெருமைகளை மீண்டும் பெற

தமிழ் இனத்தின் நன்மைகளை மீண்டும் நாம் அடையவேண்டுமானால் தமிழர்கள் தமிழில் எண்ண வேண்டும்; தமிழில் எழுதவேண்டும்; தமிழில் படிக்க வேண்டும்; தமிழில் பாடவேண்டும்; தமிழில் கேட்க வேண்டும்; தமிழில் நடிக்கவேண்டும்; தமிழில் வாழ்க்கை நடத்தவேண்டும். கற்றலைக் காட்டிலும் கேட்டலே மிகவும் பயன்தரக் கூடியது. ஆதலால் கேள்வி ஞானத்தைப் புகட்டுவதற்கென்றே ஏற்பட்ட பாட்டுக் கச்சேரிகளில் தமிழ்ப் பாட்டுக்களைத்தான் தமிழர்கள் கேட்கவேண்டும். பாடுகின்ற தமிழர்களும் தமிழ்ப் பாட்டுகளுக்குத்தான் சிறப்புத் தரவேண்டும். இது வெறும் தமிழபிமானத்துக்

காகச் சொல்லுவது அல்ல. இதில் பிறமொழி வெறுப் புத் துளிகூட இல்லை.

**கலையின் பயன்**

கலை யின்பம் கல்வியைப் புகட்ட ஒரு கருவியாக இருக்கவேண்டும் என்பதுதான் தமிழ் இனத்தின் மரபு. தமிழர்கள் எந்தக் கலையையும் வெறும் தமாஷுக்காகவோ பொழுதுபோக்குக்காகவோ வீணுக்கினதில்லை. தமிழ் இனம் வளர்த்த எல்லாக் கலைகளும் இறைவனை உணரக் கூடிய எண்ணங்களை வளர்த்து, அறங்களைப் புகட்டி, ஒழுக்கத்தை உயர்த்தவேதான் உபயோகப்படுத்தப் பட்டன. தமிழ் நாட்டுச் சித்திரம், சிற்பம், பாட்டு, நடனம், குழல், யாழ், சின்ன மேளம், பெரிய மேளம் முதலான எல்லாக் கலைகளையும் கோவில்களில் சேர்த்து வைத்துக் கும்பிட்டுவந்ததன் நோக்கமும் அதுவேயாகும்.

கலையை, வெறும் கலை இன்பத்துக்காக மட்டும் அநுபவிக்கவேணும் என்பது பயனற்றது. கலையைக் கலைக்காக மட்டும் ரஸிக்கக்கூடியவர்கள் லக்ஷத்தில் ஒரு வராவது இருப்பார்களா என்பதும் சந்தேகம். அப்படி லக்ஷத்தில் ஒருவரோ இருவரோ இருப்பது உண்மை யானாலும் அவர்கள் இருந்து போகட்டும். பாட்டுக் கச்சேரி அந்த ஒருவர் இருவருக்காக மட்டும் அல்ல என்பதையாவது அனுசரிக்கவேண்டும். கேட்கிறவர்கள் நல்லுணர்ச்சிகளைக் கிளப்பிவிட்டு வாழ்க்கைக்கு உதவாத வெறும் கலை, கறிசமைக்க உதவாத காய் போலத்தான்.

**உள்ளத்தைத் தொடாதது கலை அல்ல**

தமிழிசை இயக்கத்தின் ஆரம்பத்துக்கு ஆதரவாள ராக இருந்தவரும் இந்த இயக்கம் தொடர்ந்து நடக்க



வேண்டும் என்ற ஏற்பாடுகளைச் செய்து போனவருமான காலஞ்சென்ற செட்டிநாட்டு ராஜா. ஸர். அண்ணாமலை செட்டியாரவர்கள் தேவகோட்டையில் நடத்திய முதல் தமிழிசை மகாநாட்டில் பாடுவதற்கென்று அடியேன் சில பாட்டுகளை ஆக்கினேன். அதில் ஒரு பாட்டு,

> கலை என்றால் உணர்ச்சிகளைக் கவரவேண்டும்;
> களிப்பூட்டி அறிவினைப்போய்க் கவ்வவேண்டும்;
> நிலைகொள்ளாச் சிந்தனையை நிற்கச்செய்து,
> நீதிநெறி தெய்வநினைப் பூட்டவேண்டும்;
> விலையில்லாப் பெருமைபல உடையதேனும்
> விளங்காத பாஷையிலே பாட்டைக்கேட்டுத்
> தலையெல்லாம் சுளுக்கேற அசைத்திட்டாலும்
> தனக்கது ஓர் கலைப்பயனைத் தருவதாமோ ?

என்பது. கலை என்பது உடனடியாக உணர்ச்சிகளைக் கவரவேண்டும்; அதன் மூலம் ஒரு இன்பத்தை ஊட்ட வேண்டும்; அந்த இன்பம் அறிவைத் தொடர்ந்து அதைப் பற்றவேண்டும்; அந்தப் பற்று நினைத்துப் பார்க்கவேண்டிய நிர்ப்பந்தத்தை உண்டாக்கவேண்டும்; அந்த நினைவு நீதி நெறிகளையும் தெய்வ நினைப்பையும் புகட்டவேண்டும்; அப்படி யில்லாமல் எவ்வளவு சாமர்த் தியத்தோடு பாடப்பட்டாலும், நமக்குப் பொருள் தெரி யாத பிற மொழிப் பாட்டுகளைக் கேட்டுக்கொண்டு சிந்தனைக்கு வேலையே இல்லாமல் தலையை மட்டும் எவ்வளவு ஆட்டிக்கொண்டிருந்தாலும் அதனால் கலைப் பயனை அடைந்துவிட முடியாது.

**உலக அமைதிக்கு ஒரு மருந்து**

ஆதலால் தமிழர்கள் தமிழ்ப் பாட்டைத்தான் விரும்ப வேண்டும். அந்தப் பாட்டு தமிழ் மரபையும் தமிழ்ப்

பண்பையும் ஒட்டியதாக இருக்கவேண்டும். அப்போது தான் தமிழ் உணர்ச்சியும் தமிழ் ஆர்வமும் உண்டாகும். அந்த உணர்ச்சியும் ஆர்வமும்தான் தமிழ் இனத்தின் பெருமையை எண்ணச் செய்யும். அந்த எண்ணம் தமிழ் இலக்கியங்களை நாடச் செய்யும். அந்த நாட்டம் திருக் குறளைக் காட்டும். அந்தத் திருக்குறள் வடித்துக் கொடுத்த வாழ்க்கைதான் காந்தியடிகள் நடத்திக் காட்டிய நன்னெறி. அந்த நன்னெறி ஒன்றுதான் இப்போது உலகெங்கும் கொந்தளித்துக்கொண்டிருக்கிற கொடுமை களைக் குறைக்கத் தகுந்த நன்மருந்து. உலக சமாதானத் துக்குத் தலைசிறந்த சேவை செய்வதற்கு இந்தத் தமிழ் அறிவு மிகவும் தகுதியுடையது. அதற்காகவேனும் தமிழ் அறிவைப் போற்றித் தமிழிசையைப் பரப்பவேண்டும்.

## இனி ஒரு விதி செய்வோம்

இனி இந்தத் தமிழிசை இயக்கம் பாட்டுக் கச்சேரி களில் தமிழ்ப் பாட்டுகள் வேண்டும் என்பதோடு மட்டும் நின்றுவிடாமல், வேறு பல துறைகளிலும் வேலை செய்து, தமிழ்ப் பாட்டுகள் பாடப்படுகிற எல்லா இடங்களையும் பரிசுத்தப்படுத்த வேண்டும். நாடக மேடையிலும், 'சினிமா' திரைப்படத்திலும், கிராமபோன் தட்டுகளை ஒலி பெருக்கும் இடங்களிலும் தமிழிசைக்கு இழுக்குண்டாகக் கூடிய பாட்டுகளை விலக்கவேண்டிய கட்டாயத்தை விதி யாக்க முயலவேண்டும். தமிழ் மொழியை துர் விநி யோகப்படுத்தி மக்களுக்குள் வேற்றுமைகளையும் வெறி களையும் விருத்தி செய்து தமிழ் இனத்தின் பெருமை களையும் அமைதியையும் கெடுக்கக்கூடிய எல்லாத் தீமை களையும் சட்டபூர்வமாக ஒடுக்கவேண்டிய முயற்சிகளையும்



மேற்கொள்ளவேண்டும். மத்திய அரசாங்கத்துக்கு முர ணில்லாமல் அதற்கான மாகாண சட்ட திட்டங்களைத் தமிழ்ப் பண்புகளுக்கு ஒத்த முறையில் செய்யச் சொல்லி அரசாங்கத்தை அணுகவேண்டும். மொத்தத்தில் தமிழ் நாட்டில் தமிழ் இனத்தின் நன்னெறிப் பண்புகளுக்கு இடையூறான எல்லாக் குற்றங்களையும், சத்தியத்துக்கும் ஜீவகாருண்யத்துக்கும் ஒத்த சட்டபூர்வமான முறையில் குறைப்பதற்கான முயற்சிகளை யெல்லாம் மேற்கொள்ள வேண்டும். மொழிவாரி மாகாணப் பிரச்னைகளால் தமி ழினங்களைப் பாதுகாத்துக்கொள்ளவேண்டிய கட்டாயம், நாம் விரும்பாமலும் கூட, நமக்கு ஏற்பட்டிருக்கிறது. அது மறைமுகமாக நமக்கு வாய்த்த ஒரு நன்மை என்றே கொள்ளவேண்டும். அந்த வாய்ப்பையும் நாம் நல்ல முறையில் பயன்படுத்திக்கொண்டு, தமிழ் நாட்டின் நலங்களை அதிகப்படுத்தி சன்மார்க்க வழிகளில் சமதர்ம சமுதாயத்தை உண்டாக்கி வைக்க இந்தத் தமிழிசை இயக்கம் உதவவேண்டும்.

## தமிழ் மரபு காப்போம்

விஞ்ஞான விருத்தியிலும் வியாபாரப் பெருக்கத் திலும் மட்டும் உலகம் சந்தோஷம் அடைந்துவிட முடியாது. மக்களுக்குள் மனிதப் பண்புகள் நிலைபெற்றா லன்றி உலக சமாதானம் உருப்படியாகாது. மற்ற எல்லா அறிவுகளையும் இரண்டாம் பக்ஷமாக்கி மனிதப் பண்பு களைப் பாதுகாக்கும் அறிவுகளுக்குச் சிறப்பிடம் தருவது தான் தமிழ் மரபு. அந்த மரபுக்குப் பங்கம் வராமல் நாம் நடந்துகொண்டால் மற்ற நலங்கள் தாமே அமையும்.

# 5. தமிழிசையும் வடமொழி இசையும்

'தமிழிசை' என்ற சொல்லுக்கு இரண்டு அர்த்தங்கள் உண்டு. ஒன்று, 'தமிழ் மொழியில் பாடுவது' மற்றொன்று 'தமிழ் மொழிக்குச் சொந்தமான சங்கீதம்' என்பது.

முதலாவது அர்த்தம் தமிழனுடைய நியாயமான உரிமையைக் கோருவது. இரண்டாவது அர்த்தம் தமிழ் மொழியின் நியாயமான உரிமையை விளக்குவது.

முதலாவது அர்த்தத்தில் 'தமிழிசை இயக்கம்' என்பது, தமிழன் தன்னுடைய தாய் மொழியாகிய தமிழில் இசையைக் கேட்டு இன்புற வேண்டும் என்ற இச்சைதான். தாய்மொழி என்றால் தாயார் புகட்டிய மொழி. தாயின் உடலிலிருந்து தான் நம்முடைய உடல் உண்டாயிற்று. அவள் ஊட்டிய அமுதத்திலிருந்துதான் நம்முடைய உடல் வளர்ந்தது. அவள் சொன்ன சொற்களிலிருந்துதான் நமக்கு அறிவு ஆரம்பித்தது. பின்னால் நாம் எத்தனைப் பிற மொழிகளைக் கற்றுக் கொண்டாலும் அவற்றிலுள்ள அறிவுகளை நம்முடைய தாய் மொழியில் பெயர்த்துச் சொன்ன பிற்பாடுதான் புரிந்து கொண்



டோம். ஆகையால் தாய்மொழி உறவு தள்ள முடியாதது. எந்த அறிவும் தாய்மொழி மூலமாகத்தான் வளர முடியும். இசை இன்பத்தையும் தாய் மொழிப் பாட்டுக்களில்தான் அனுபவிக்க முடியும். வெறும் சங்கீதம் உயிர் என்றால் அவ்வுயிருக்குச் சாகித்தியம் தான் உடல். உடல் இல்லாமல் உயிர் மட்டும் உபயோகமான எதையும் செய்ய முடியாது என்பது மறுக்க முடியாத உண்மை.

'பாட்டு எந்த மொழியில் இருந்தால் என்ன? இந்த மொழித் தகராறை ஏன் சங்கீதத்தில் நுழைக்க வேண்டும்?' என்று பேசப்படுகிறது. சாகித்தியம் இல்லாத வெறும் சங்கீதம், அதைக் கேட்க வரும் மக்களுள் பெரும் பகுதிக்கும் வெறும் சப்த ஜாலம்தான். இராகத்தையும், ஸ்வரங்களையும், தாளங்களையும் எவ்வளவு சாமர்த்தியமாகக் கையாண்டு பாடினாலும் அது வெறும் ஓசைதான். சங்கீத ஞானம் உள்ள வெகு சிலர் மட்டும் வெறும் கலைத் திறனுக்காக அதை அனுபவிக்கலாம். மற்றவர்கள் பாடகர் வெகு பாடுபட்டும் பயின்றிருக்கிற வித்தையைக் கண்டு வியப்படையலாம். ஆனால் காதில் விழுந்ததெல்லாம் காதோடுதான் நின்று விடும். கருத்தில் பாயாது. உள்ளத்தை உருக்காது. உணர்ச்சியைக் கிளப்பாது. அறிவையோ ஆன்மாவையோ அசைக்காது.

எந்த மொழியில் எவர் பாடினாலும் அந்த மொழி அவருக்கு சொந்த மொழியாக இருக்கவேண்டும். எவர் எந்த மொழியில் பாட்டைக் கேட்டாலும் அந்த மொழி அவருக்குச் சொந்த மொழியாக இருக்க வேண்டும். 'சொந்த மொழி' என்றால் தாய்மொழியாகவாவது அல்லது கற்றுணர்ந்து சொந்தமாக்கிக் கொண்ட பிற

இருக்க மொழியாகவாவது வேண்டும் என்பதுதான். அப்படி அல்லாத மொழியில் பாடுவது குற்றம். கேட்பதும் பயனற்றது.

இந்த உண்மைகளை மதிக்காமல், தமிழ் நாட்டில், எல்லோரும் தமிழர்களாகவே கூடியிருக்கும் சபைகளில், பாடகரும் தமிழராகவே இருந்தும் தமிழ் அல்லாத பிற மொழிப் பாட்டுக்களையே பாடுவது பழக்கமாக இருந்தது. அந்த மாபெரும் குற்றத்தை அகற்றவென்றே கங்கணங் கட்டிக் கொண்ட இராசா சர். அண்ணுமலை செட்டியார் அவர்களுக்கு நாம் மிகவும் கடமைப்பட்டிருக்கிறோம்.

தமிழ்நாட்டில், தமிழர்களுக்கிடையில், தமிழ் தாய் மொழியாக உள்ள சங்கீத வித்வான்கள், தமிழ் சாகித்தியங்களைத்தான் பாட வேண்டும் என்று கோருவதுதான், 'தமிழிசை' என்ற சொல்லுக்கு முதன்மையான அர்த்தம்.

இனி அதற்கு இரண்டாவது அர்த்தம் என்னவென்ருல், 'இப்போது தமிழ் நாட்டில் வழங்கி வரும் சங்கீதக் கலை, தமிழர்கள் தமிழ் மொழியிலேயே வளர்த்துத் தமிழ் நாட்டுக்கே சொந்தமான சங்கீதம்' என்பது. இது, தமிழ்ப் பாஷை, சங்கீதத்துக்கு எடுத்த மொழி அல்ல என்று சொல்லும் அறியாமையைப் போக்க நிற்பது. தமிழ் மொழியில் இசை வளர்ந்தது என்பதை அறியாதவர்கள் தமிழிசை இயக்கத்தை எதிர்த்து ஏளனம் செய்தது எப்படி என்பதை இராசா சர். அண்ணுமலை செட்டியாரவர்களுடைய வாய் மொழியாகவே கேட்போம் : 1943-ல் நடந்த தமிழிசை முதல் மகாநாட்டில் இராசா சர் அவர்கள் பேசிய திறப்பு உரையில், "நமது தமிழ் மொழிக்கு



நலம்தரும் இந்த இயக்கத்திற்கும் எதிர்ப்பும், இடர்களும் முளைத்தன. ஆனுல் தமிழிசையின் வளர்ச்சி விசையில் அந்த இடர்கள் தகர்ந்து போயின. எனினும், இன்னும் வீண் வாதங்களும், பிடிவாதங்களும் சிற்சில இடங்களில் காண்கின்றன. தமிழிசை எதிர்ப்பாளர் வேடிக்கையான குறுக்கு வாதங்களைக் கிளப்பிக் கூச்சலிட்டனர். பத்தி பத்தியாகச் செய்தித் தாள்களை நிரப்பினர்.

'தமிழ் மொழி இசைக்குத் தகுந்ததன்று. தெலுங்கு வடமொழியிலுள்ள நயம் தமிழுக்கு வராது. இசைக்கு வேறுபாடில்லை, அது 'நாத வித்தை.' அதில் பாஷைப் பிரச்னையைப் புகுத்தக்கூடாது. தமிழில் பாடினுல் கலை நயம் கெடும். சங்கீதத்தின் மாற்றுக் குறையும். மதிப்புக் கெடும். பாட்டு அருளால் வளரும். பொருளால் வளராது. யாரோ சிலர் பணத்தைக் கொட்டி இசையைத் தமிழாக்கப் பார்க்கிறுர்கள். அது கர்நாடக சங்கீதத்தையே காலைவாரி அடித்து விடும். தமிழில் உயர்ந்த பாடல்கள் இல்லை' இவையே எதிர்ப்பாளர்கள் கிளப்பிய குறுக்கு வாதங்கள்."

இது பதினைன்கு ஆண்டுகளுக்கு முன்னுல் இராசா சர். சொன்னது. இப்போது இது போன்ற எதிர்ப்புகள் இல்லை. என்ருலும் இந்தக் குறுக்கு வாதங்கள் உண்மைக்கு ஒரு சிறிதும் ஒத்தன அல்லவென்று விளக்கக் கூடிய சரித்திர ஆராய்ச்சியை நாம் தெளிவுபடுத்திக் கொள்வது, தமிழிசை இயக்கம் மேலும் மேலும் வளர்ச்சியடைந்து, தமிழ் மக்களுடைய கவனக் குறைவால் தமிழ் மொழி இழந்துவிட்ட சிறப்புக்களை மீட்டுக்கொள்வதற்கு மிகவும் பயன்படும்.

இசைக் கலை தமிழில் உண்டா என்பதற்கு விடை சொல்லச் சிலப்பதிகாரம் என்ற காப்பியம் ஒன்றே போதும். இப்போது தமிழ் நாட்டில் வழங்கிவரும் சங்கீதக் கலை 1800 ஆண்டுகளுக்கு முன்பே தமிழ் மொழி உண்டாக்கித் தமிழில் வளர்ந்த கலைதான் என்பதைச் சிலப்பதிகாரம் கண்ணாடிபோல் காட்டுகின்றது. சிலப்பதிகாரம் வடமொழிக் கலைச்சொற்கள் அதிகம் இல்லாத தனித் தமிழ்க் காப்பியம். இதில் இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழும் விளங்குகின்றன. இது 1800 ஆண்டுகளுக்கு முன்னால் இயற்றப்பட்டது என்பது ஆராய்ச்சிக்காரர்கள் அனைவரும் ஒருமுகமாக ஒப்புக்கொண்ட உண்மை. இதில் இசைக் கலையைப் பற்றிய நுணுக்கங்கள் பல இடங்களிலும் உண்டு. என்றாலும் இதிலுள்ள 'அரங்கேற்று காதை' என்னும் பகுதி இசைக் கலையைப் பற்றிய நுணுக்கங்களையே மிகவும் விரிவாகச் சொல்லுகிறது. அரங்கேற்று காதையில் வரும் பாத்திரங்கள் (1) நாட்டியம் ஆடுகின்ற பெண் (2) நாட்டியம் பயிற்சி செய்துவைக்கும் ஆடல் ஆசிரியன் (3) ஆட்டத்துக்குப் பக்கப்பாட்டு பாடுகின்ற சங்கீத வித்வான் (4) அந்த சங்கீதத்துக்கு வேண்டிய சாகித்தியத்தைச் செய்து கொடுக்கும் கவிஞன் (5) பக்க மேளமான மிருதங்க வித்வான் (6) பக்க வாத்தியமாக வாசிக்க வேண்டிய புல்லாங்குழல் வித்வான் (7) அதே மாதிரி பக்கவாத்தியமாக வீணை (யாழ்) வாசிக்கும் வித்வான் என்பவர்கள். இவர்கள் எல்லோரும் நல்ல சங்கீதஞானமுள்ளவர்களாக இருக்கவேண்டும் என்பதோடு, தனித்தனியே அவர்களுக்கு இருக்கவேண்டிய தகுதிகளும் சொல்லப்பட்டிருக்கின்றன.



இந்தப் பகுதிகளுக்கெல்லாம் அரும்பதவுரை ஆசிரியர் என்பவரும், அடியார்க்கு நல்லார் என்பவரும் உரை எழுதியிருக்கிறார்கள். அடியார்க்கு நல்லாருடைய உரை மிகவும் விரிவானது. ஆடலுக்குப் பக்கப்பாட்டுப் பாட வேண்டிய சங்கித வித்வான் தகுதிகளைச் சொல்லுகின்ற பகுதிகளிலும், யாழைப் பற்றியும் குழலைப் பற்றியும் சொல்லுகின்ற பகுதிகளிலும், ஏழு ஸ்வரங்களைப் பற்றியும், அந்த ஸ்வரங்களின் இயக்கங்களால்தான் இசை (சங்கீதம்) உண்டாவது என்றும் விளக்கம் சொல்லப்படுகிறது. தாள வகைகளைப்பற்றி சுருக்கமாகச் சொல்லிவிட்டுத் தாளங்களின் விவரங்களை யெல்லாம் 'தாள வகையொத்து' என்னும் நூலிற் காணலாம் என்று சொல்லுகிறார் அடியார்க்கு நல்லார்.

இதில் நாம் கவனிக்கவேண்டியது, 'ஏழு ஸ்வரங்களைப் பற்றிய பிரஸ்தாபமும், அந்த ஏழு ஸ்வரங்களின் இயக்கங்கள்தாம் இசையை உண்டாக்குகின்றன' என்பதும்தான். தமிழ் மொழி இசைக்குத் தகுந்ததல்ல என்று இக்காலத்தில் சொல்ல வந்தால், 1800 ஆண்டுக்கு முன் எழுதப்பட்ட ஒரு காப்பியத்துக்கு ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் எழுதப்பட்ட தமிழ் உரையில் ஏழு ஸ்வரங்களின் இயக்கம்தான் இசை என்று எப்படி எழுதியிருக்க முடியும்?

இங்கு சொல்லப்பட்ட ஏழு ஸ்வரங்கள்தாம் ச-ரி-க-ம-ப-த-நி என்பன என்பதை 'யாழ் நூல்'

இயற்றிய தவத்திரு விபுலானந்த அடிகள் விளக்கியுள்ளார். அண்ணுமலைப் பல்கலைக் கழக சங்கீத பூஷணம் வீணை எஸ். இராமநாதன் அவர்களும் தமது 'சிலப்பதிகாரத்து இசை நுணுக்க விளக்கம்' என்ற நூலில் இதைத் தெளிவுபடுத்தியிருக்கிருர்.

விபுலானந்த அடிகள், அடியார்க்கு நல்லார் கூட சிலப்பதிகார மூலத்திலுள்ள இசை நுணுக்கங்களுக்குச் சரியான உரை செய்யவில்லை யென்று, வருத்தப்பட்டு ஒரு சொற்பொழிவில் "அரங்கேற்று காதையில் 70-வது முதல் 94-வது வரி வரையில் யாழிசைப் போனைக் குறிக்கின்றன. அந்த வரிகளுக்குப் பூரணமாக அர்த்தம் தெரிந்துகொண்டால், பண்டைத் தமிழிசையின் பொக்கிஷத்துக்குத் திறவுகோல் கிடைத்துவிடும். ஐந்து வருட காலத்துக்கு மேலாக நான் ஆராய்ச்சி செய்ததன் பலனுகச் சிறிது ஒளி கிடைத்துள்ளது. அந்த அடிகளுக்கு அடியார்க்கு நல்லார் விளக்க உரை எழுதவேயில்லை. அடியார்க்கு நல்லார் காலத்திலேயே பண்டைத் தமிழிசை புறக்கணிக்கப்பட்டதென்று தெரிகிறது. மத்திய காலத்தில் கலை வல்லவர்களாக இருந்த சமண சந்நியாசிகளும் பௌத்த சந்நியாசிகளும் ஆடல் பாடல் என்ற இரு கலைகளையும் புறக்கணித்தனர்" என்று பேசியிருக்கிருர்.

ஆயிரம் வருடங்களுக்கு முன்னுலேயே புறக்கணிக்கப்பட்டுக் குற்றுயிராய்க் கிடந்த தமிழிசைக்குப் புத்துயிர் கொடுத்துச் செழிக்கச் செய்த இராசா சர். அண்ணுமலை செட்டியாரவர்களுக்கு நாம் எவ்வளவு நன்றி செலுத்தினுலும் தகும். சிலப்பதிகாரத்திலுள்ள இசைக் கலை



நுணுக்கங்களை ஆராயும்படித் துண்டியதே இந்தத் தமிழிசை இயக்கம்தான் என்றுல் அது மிகையல்ல.

### வடமொழியில் இசைக்கலை

வடமொழியாகிய சமஸ்கிருதத்தில் சங்கீதம் உண்டா என்று யாரும் கேட்கமாட்டார்கள். ஏனென்றுல் இப்போது நம் காதில் விழுகின்ற சங்கீத சம்பந்தமான சொற்கள் பெரும்பாலும் வடமொழிப் பதங்களே. ஆனுல் சிலப்பதிகாரத்தைப் போல 1800 வருடங்களுக்கு முன்னுல் எழுதப்பட்டு சங்கீத சாஸ்திர நுணுக்கங்களைப் பற்றி அவ்வளவு விரிவாகச் சொல்லுகின்ற ஒரு இலக்கியம் வடமொழியில் இருப்பதாகத் தெரியவில்லை. சங்கீதத்தைப் பற்றிய பிரஸ்தாபம் வடமொழியில் வேத காலந்தொட்டு இருந்திருக்கிறது. ஆனுல் சங்கீதக் கலையைப் பற்றிய சாஸ்திர முறைகளைக் காட்டக்கூடிய தான இலக்கியம் சிலப்பதிகாரத்தைப்போல் அவ்வளவு பழைய நூல் வடமொழியில் இப்போது இல்லை.

பரத நாட்டிய சாஸ்திரம் என்று ஆடல் பாடல்களைப் பற்றியகலை நூலாக வடமொழியில்உள்ள மிகவும் புராதன நூல் சுமார் 1250 வருடங்களுக்கு முன் இயற்றப்பட்டது என்று தெரிகிறது. சிலப்பதிகாரத்துக்கு 550 வருடங்களுக்குப் பின்னுல் இயற்றப்பட்டது அது. அதில் நாட்டியக்கலையைப் பற்றித்தான் அதிகம் சொல்லப்படுகிறது. சங்கீதத்தைப் பற்றி அதில் இருப்பது மிகவும் சொற்பம். **நாரத சங்கீத மகரந்தம்** என்பது ஒரு புராதன வடமொழி இசை நூல். சங்கீதக் கலைக்கு முக்கியமான நூலாகக் கருதப்படுவது. இது இயற்றப்பட்ட காலம்

சுமார் 1100 ஆண்டுகளுக்கு முன்னால் என்று சொல்லப்படுகிறது. இதுவும் சிலப்பதிகாரத்துக்கு 700 வருடங்கள் பிற்பட்டது. **ஜயதேவருடைய கீத கோவிந்தம்** என்பது ஜயதேவர் என்கிற வங்காளி எழுதிய வடமொழி சங்கீதப் பாட்டுக்கள். அவை அஷ்டபதிகளாக உள்ளன. சங்கீத வித்வான்களும் பக்தர்களும் மிகவும் பாராட்டுகின்ற நூல். சங்கீதக் கலைக்கு மிகவும் ஒத்தாசையான இலக்கியம் என்று சொல்லப்படுகிறது. இது இயற்றப்பட்ட காலம் சுமார் 800 வருடங்களுக்கு முன்னால். அதுவும் சிலப்பதிகாரத்துக்கு 1000 ஆண்டுகளுக்குப் பிற்பட்டது.

**சங்கீத ரத்னாகரம்:** இது தமிழ் நாட்டுச் சங்கீத வித்வான்களால் மிகவும் மதிக்கப்பட்ட வடமொழி சங்கீதக் கலை நூல். இதுவும் சுமார் 700 வருடங்களுக்கு முன்னால்தான் இயற்றப்பட்டது. இது வடமொழியில் இருந்தாலும் இந்நூலை இயற்றிய **சாரங்கதேவர்** என்பவர், இவருக்கு மூன்று தலைமுறைகளுக்கு முன்னால் வடநாட்டிலிருந்து தமிழ் நாட்டில் குடிபுகுந்த குடும்பத்தில், தமிழ் நாட்டிலேயே பிறந்து தமிழ் நாட்டிலேயே வாழ்ந்தவர். ஆதலால் இவருடைய சங்கீத ஞானம் வடநாட்டிலிருந்து வந்ததென்று சொல்லிவிட முடியாது.

மேலே சொல்லப்பட்ட வடமொழி நூல்களுடன் பிற்காலத்தில் உண்டான 'ராகதரங்கிணி', 'ஷட்ராக சந்திரோதயம்', 'ராகமாலிகா', 'ராக மஞ்சரி', 'நர்த்தன நிர்ணயம்' என்ற வடமொழி நூல்களும் உள்ளன.

இந்த வடமொழி நூல்களைப் பற்றிய ஆராய்ச்சி இங்கே எதற்காக வென்றால், சங்கீத சம்பந்தமுள்ளனவாகக் காணக் கிடக்கிற எல்லா வடமொழி நூல்களுக்கும்



வெகு காலத்துக்கு முற்பட்டது சிலப்பதிகாரம் என்பதைக் காட்டத்தான்.

அதனால் சிலப்பதிகாரத்தில் உள்ள ஏழிசைச் சங்கீதம் தமிழ் மொழியில் பிறந்து, தமிழில் வளர்ந்து, தமிழுக்கே சொந்தமானது. அப்படியிருக்க, 'தமிழ் மொழி இசைக்குத் தகுந்ததன்று; தெலுங்கு, வட மொழிகளில் உள்ள நயம் தமிழுக்கு வராது' என்று சிலர் பேசும்படி நேர்ந்தது, நெடுங்காலமாகத் தமிழர்கள் பிறமொழி மோகத்தால் தாய்மொழியைப் புறக்கணிந்திருந்த நம் குற்றமேயன்றிப் பிறிதில்லை.

## கர்நாடக சங்கீதம்

நெடுங் காலமாகத் தமிழ் நாட்டில் முழங்கி வரும் இந்த இசைக்கலை இப்போது 'கர்நாடக சங்கீதம்' என்ற பெயருடன் எங்கிருந்தோ வந்ததுபோல் எண்ணச் செய்கிறது. 'கர்நாடக சங்கீதம்' என்ற பெயர் முதன் முதலாகத் தமிழ் நாட்டு சங்கீதப் பரம்பரையில், கன்னட மொழியில் 'தேவர் நாமா' என்னும் பாடல்களை இயற்றிய புரந்தர தாசருக்கு 'கர்நாடக சங்கீதப் பிதா மகன்' என்ற பட்டத்தைச் சூட்டினார்கள் என்பதன் சம்பந்தமாகத்தான் உபயோகப்பட்டிருக்கிறது. இந்தப் புரந்தர தாசர்தான் சங்கீதக் கலையை முறையோடு பிறருக்குப் பாடம் சொல்லிக் கொடுக்க ஆரம்பித்தவர் என்று இவருடைய சரித்திரத்தால் அறிகிறோம். இவர் ஒரு கன்னடக்காரர் என்பதை மனத்தில் வைக்க வேண்டும். கன்னடமும் தெலுங்கும் மலையாளமும் தமிழ்மொழியிலிருந்து வளர்ந்த கிளைகளே!

இந்தப் புரந்தர தாசர் சுமார் 450 வருடங்களுக்கு முன்னுல் வாழ்ந்தவர். கர்நாடக சங்கீதம் என்ற பெயர் 450 ஆண்டுகளுக்கு முன்னுல் உண்டானது என்ருலும் கர்நாடக சங்கீதத்துக்கு இப்போதிருக்கிற உருவத்தை உண்டாக்கி ஜீவசக்தியும், சிறப்பும் பெருகச் செய்து வைத்தவர்கள் ஸ்ரீ தியாகராஜ சுவாமிகளும், ஸ்ரீ சாமா சாஸ்திரியவர்களும், ஸ்ரீ முத்துசாமி தீக்ஷிதர் அவர்களும் தான். கர்நாடக சங்கீதக் கலைக்கு 'மும்மூர்த்திகள்' என்று போற்றப் படுகிற இந்த மூன்று பேரும் ஒரே காலத்தில் வாழ்ந்தவர்கள் என்பதையும், மூன்று பேரும் தஞ்சாவூர் ஜில்லா திருவாரூர் என்ற ஒரே ஊரில் பிறந்தவர்கள் என்பதையும், தமிழ்நாட்டிலேயே வாழ்ந்தவர்கள் என்பதையும் நாம் நினைவிற்கொள்ள வேண்டும்.

தியாகராஜ சுவாமிகள் தெலுங்குப் பிராமணர். இவருடைய முன்னோர்கள் இவருக்கு மூன்று தலைமுறைகளுக்கு முன்னுல் ஆந்திர தேசத்திலிருந்து தமிழ் நாட்டில் குடிபுகுந்தவர்கள். தியாகராஜர் வீணை வாசிக்கத்தெரிந்தவர். வெகு இனிமையான சாரீர சம்பத்துடையவர். தெய்வ பக்தியே வாழ்க்கையின் நோக்கமாக வெகு பரிசுத்தமான எளிய வாழ்க்கை நடத்தினவர். சொத்து சுகங்களைக் கருதாமல் பிட்சை வாங்கிச் சீவனம் நடத்தியவர். மிக உயர்ந்த ஆன்ம ஞானமும் மனத்துறவும் வாய்ந்தவர். இவர் பாட்டுக்களை இயற்றியதும் அவற்றைத் தாமே மிக உயர்ந்த சங்கீத முறையில் பாடினதும் தமது சொந்த ஆன்ம வளர்ச்சிக்கும் பக்திக்காகவுமே யல்லாமல் புகழுக்காகவோ பணத்துக்காகவோ அல்ல. தெய்வ பக்தியே வடிவெடுத்தாற்போல் பிரதிபலனைக் கருதாமல் தெருத்தெருவாக தேவகானம்



செய்து கொண்டு, தூய வாழ்க்கை நடத்தி வாழ்ந்த இவரைத் தமிழர்கள் தெய்வமெனக் கொண்டாடியதில் வியப்பில்லை. துறவிகளை வணங்குவதே தமிழன் தொன்று தொட்டுப் பழகிய வழக்கம். அது அவன் இரத்தத்திலேயே கலந்துள்ள பண்பு. தியாகராஜருடைய கீர்த்தனைகள் தெலுங்கில் இருக்க நேர்ந்தது அவருடைய தாய்மொழி தெலுங்கானமையால். அவருடைய சாகித்தியங்கள் தெலுங்கில் இருந்தாலும் அவைகளின் இராகம், தாளம், ஸ்வரம் முதலிய சங்கத நுணுக்கங்கள் தமிழைச் சேர்ந்தவைகளே.

சாமா சாஸ்திரி அவர்களுடைய முன்னோர்களும் அநேக தலைமுறைகளுக்கு முன்னுல் விஜய நகரத்திலிருந்து திருவாரூரில் குடி யேறினவர்கள்; சாமா சாஸ்திரியார் திருவாரூரில் பிறந்து வளர்ந்து அங்கேயே கல்வி கற்றுச் சங்கீதம் பயின்றவர். இவருக்கும் தாய்மொழி தெலுங்கு. இவர் இயற்றிய சாகித்தியங்கள் தெலுங்கிலும் வடமொழியிலும் உள்ளன. அவற்றின் சங்கீத அடிப்படையும் தமிழைச் சேர்ந்தது தான்.

முத்துசாமி தீக்ஷிதரும் அவருடைய முன்னோர்களும் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள். முத்துசாமி தீக்ஷிதரும் திருவாரூரிற் பிறந்தவர். இவருடைய தந்தை இராமசாமி தீக்ஷிதரும் சிறந்த சங்கீத வித்வான். வீணவாசிப்பதில் கெட்டிக்காரர். சங்கீத மனோதர்மம் நிறைந்தவர்.

'ஹம்ஸத்வனி' என்ற இராகத்தைக் கற்பனை செய்தவர். இராம நாடகம் பாடிய அருணசலக் கவிராயருக்குக் 'கனகாபிஷேகம்' செய்து புகழ் பெற்ற மணலி முத்து கிருஷ்ண முதலியார் குடும்பத்தாரால் இவரும் 'கனகாபி

ஷேகம்' பெற்றவர். முத்துசாமி தீக்ஷிதர் திருவாரூரிற் பிறந்து வளர்ந்து, தஞ்சாவூரில் கல்வியும் சங்கீதமும் கற்றுக் கொண்டவர். பின் மணலி முதலியார் குடும்பத்தின் ஆதரவில் காசிக்குச் சென்று அங்கே ஐந்து வருடம் தங்கி வேத, வேதாந்த வடமொழி ஞான நூல்களில் நல்ல தேர்ச்சி பெற்று மீண்டும் மணலிக்கே வந்து வசித்தவர். இவர் இயற்றிய சாகித்தியங்கள் எல்லாம் வடமொழியில் செய்யப்பட்டவை.

கர்நாடக சங்கீதத்திற்கு மும்மூர்த்திகள்' என்று சொல்லப்படுகிற ஸ்ரீ தியாகராஜர், ஸ்ரீ சாமா சாஸ்திரிகள் ஸ்ரீ முத்துசாமி தீக்ஷிதர் ஆகிய இம்மூவரும் இயற்றிய சாகித்தியங்கள் தமிழில் இல்லாவிட்டாலும் இவர்களுடைய சங்கீதம் தமிழ் மொழி தந்த சங்கீதம் தான் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. இவர்கள் பயிர் செய்த 'கர்நாடக சங்கீதம்' என்ற அழகான பூஞ்செடியின் வேர் தமிழில்தான் இருக்கிறது. அதை வளர்த்த பூமி சத்தும் எருவும் நீரும் எதுவென்றால் சங்க காலத்திலிருந்து பாண்டிய, சேர, சோழ மன்னர்களால் பாதுகாக்கப்பட்டு, தமிழ் நாட்டுக் கோயில்களில் தெய்வத்துடன் சேர்த்துக் கும்பிடப்பட்டு, நாட்டியக்காரரின் பாட்டிலும் மேளக்காரரின் வீட்டிலும் குலதெய்வமாகக் கொண்டாடப்பட்டு, தேவாரம், திருவாசகம், திருவாய்மொழி, திருப்புகழ், திருவருட்பா முதலிய பாசுரங்களில் பண்பெற்று, 'என்றுமுள தென்தமிழில்' இருந்துகொண்டே யிருந்த இசைக் கலைதான். இளங்கோவடிகள் இலக்கியத்தில் இடம் பெற்று, அரும்பதவுரை அடியார்க்கு நல்லார் உரைகளில் விளக்கம் பெற்று வாழையடி வாழையாகத் தமிழ்நாட்டில் இருந்துவரும் இசைவாணர் பரம்பரையில் பயிலப்பெற்று



வந்த அதே இசைக் கலைதான். கலைவாணர்களுடைய வெவ்வேறு மனோதர்மத்துக்குத் தக்கபடி புதுப்புதுக் கற்பனைகள் கலந்து, காலப்போக்கால் இராக தாளங்களின் பெயர்கள் மாறி, இப்போது 'கர்நாடக சங்கீதம்' என்று நம் காதில் விழுகிறது. அது மறுக்க முடியாத சரித்திர உண்மை.

அதனால் தமிழிசை' என்பதற்குத் 'தமிழ்மொழி தந்த சங்கீத சாஸ்திரம்' என்பது தான் பொருள். இந்த உண்மை, தமிழிசை இயக்கம் ஆரம்பிப்பதற்கு முன்னால் தமிழ்ப் பண்டிதர்கள் வெகு சிலருக்குத்தான் தெரிந்திருக்க முடியும். இப்போது ஏராளமான பொதுமக்களுக்கும் தெரிகிறது.

இந்த உண்மையை நாம் எப்போதும் மனத்தில் வைத்துக்கொண்டால்தான், தமிழ்மொழி இழந்துவிட்ட பழைய பெருமைகளைப் புதுக் கலைகளுடன் விளங்கும்படி மீட்பதற்கென்று ஒரு சர்வகலாசாலையையும், தமிழ் நாடெங்கும் தமிழிசையே முழங்கவேண்டுமென்று இந்தத் தமிழிசை சங்கத்தையும் நிறுவித் தந்த இராசா சர். அண்ணாமலை செட்டியார் அவர்களுடைய ஆவல் நிறைவேறித் தமிழ் நாட்டின் சமுதாய வாழ்வு எல்லாத் துறைகளிலும் மலர்ச்சி பெறும்.

**தமிழ் மொழி**

தமிழ் நாடெங்கும் தமிழிசை முழங்கவேண்டும் என்பது, தமிழ் நம்முடைய தாய்மொழி என்பதற்காக மட்டும் அல்ல. மனித சமுதாயம் சமாதானமாகவும் சந்தோஷமாகவும் வாழ்வதற்கு என்றென்றும் இன்றியமையாத மெய்யறிவைப் புகட்டுவதே தமிழின் மாண்பு.

கற்றதனால் ஆய பயன் என்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின்.

என்னும் பொய்யாமொழிக்கிணங்க தெய்வ பக்தியே கல்வியின் பயனாகக் கருதச் செய்வது தமிழ்மொழி.

அந்தத் தெய்வபக்திக்கு ஒத்த ஒழுக்கமாக,

ஒன்றாக நல்லது கொல்லாமை மற்று அதன்
பின்சாரப் பொய்யாமை நன்று.

என்று ஜீவகாருண்யத்தையும் வாய்மையையும் வற்புறுத்திப் புகட்டுவது தமிழ்மொழி. தெய்வ பக்தி, சாந்தம், சத்தியம் என்ற மூன்றும் சேர்ந்ததுதான் தமிழ்ப் பண்பு. வேத வேதாந்தங்களிலிருந்து வடித்தெடுத்த மெஞ்ஞானத்தை வாழ்க்கையில் மேற்கொள்ளப் போதிக்கும் இலக்கியங்களே மிகுந்தது தமிழ் மொழி. 'தமிழ்ப் பாடல்' என்றால் அதில் தெய்வ நம்பிக்கைக்கும், சன்மார்க்க ஒழுக்கத்துக்கும் உதவக் கூடிய கருத்துக்களைத் தவிர வேறு எதுவும் இருக்காது என்பது தமிழ் மரபு.

தமிழ் மொழியை 'அமிழ்து' என்றே ஆன்றோர்கள் கூறினார்கள். ஏனென்றால் 'அமிழ்தம்' என்பது இனிமையும் இளமையும் என்றும் அழிவில்லாதத் தன்மையையும் தரக்கூடியது என்று சொல்லப்படும் ஒரு பொருள். அமிழ்தை உண்டவர்கள் அமரர்களானார்கள். அதைப் போலவே,

தெள்ளுற்ற தமிழமுதின் சுவைகண்டார்
இங்கு அமரர் சிறப்புக் கண்டார்.

என்று பாடுகின்றார் பாரதியார். இதன் பொருள் : தெளிவான தமிழ் என்னும் அமிழ்தின் இனிமையை அனுபவிப்



பவர்கள், இந்தப் பூவுலகிலேயே, அமரர்கள் வேத லோகத்தில் அடையும் சிறப்புக்களை அடைவார்கள் என்பது.

அதனால் 'அமிழ்து' என்ற சொல்தான் 'தமிழ்'. 'அமிழ்து' என்ற சொல்லை நிறுத்தாமல் திருப்பித் திருப்பி உச்சரித்தால் 'அமிழ்து' என்பதின் ஈற்றிலுள்ள உகரம் தானாகவே மறைந்து போய், 'தமிழ்' என்ற ஓசை தான் நிற்கும். அப்படிப்பட்ட,

தேமதுரத் தமிழோசை உலகமெலாம்
பரவும் வகை செய்தல் வேண்டும்

என்ற கொள்கைக்கே நிலையமாக நிற்கும் தமிழிசைச் சங்கம், கடந்த பதினான்கு ஆண்டுகளின் இடையறாத முயற்சிகளில் தமிழிசை வளர்ச்சியிலும், தமிழ்ப் பண்பு களின் ஆராய்ச்சியிலும், இசைக் கருவிகளை உருவாக்குவதிலும் மிகவும் போற்றத் தகுந்த முன்னேற்றம் கண்டிருப்பது மகிழ்ச்சிக்குரியது. அத்துடன் தமிழிசை இயக்கம், தமிழ் மக்கள் மீண்டும் தம் தாய்மொழியின் மீது ஆழ்ந்த பற்றுக் கொள்ளக் காரணமாக இருந்திருக்கிறது, என்பதும் பெருமை கொள்ளத் தக்கது.

# 6. பாரதி காட்டிய புது வாழ்வு

அடிமைத்தனத்தால் நமக்குள் வளர்ந்திருந்த அன்னிய மோகங்களால் மங்கிக் கிடந்த தமிழ் மொழிக்கு மறு மலர்ச்சி தந்தவன் பாரதிப் புலவன். தமிழ் மொழியின் சிறப்பையும் தமிழ்ப் பண்புகளின் நன்மைகளையும் முற்றிலும் மறந்து கிடந்த தமிழ் மக்களைத் தட்டி யெழுப்பிப் புத்துயிர் கொடுத்துப் பழந்தமிழில் நிறைந்து கிடக்கும் நல்லறிவுகளுக்குப் புது மெருகு கொடுத்தவன் பாரதிப் புலவன். தெய்வ நம்பிக்கைக்கும் தினசரி வாழ்க்கைக்கும் சம்பந்தமே இல்லாததுபோல் பேசப்பட்டு வந்த திண்ணை வேதாந்தத்தைத் திணறச் செய்தவன் பாரதிப் புலவன். தெய்வத்தைக் காண வேண்டுமானால் இல்வாழ்க்கையை வெறுக்க வேண்டும் என்றும், மனைவியையும், மக்களையும் மறக்கவேண்டும் என்றும் சுகபோகங்களைத் துறக்க வேண்டும் என்றும் பொது அறிவாகப் போதிப்பது தமிழறிவுக்குப் பொருந்தாது என்பதைச் சொல்லிலும் பாட்டிலும் வாழ்க்கையிலும் வற்புறுத்திக் காட்டியவன் பாரதிப் புலவன். ஆங்கில ஆட்சியின் அடக்கு முறையின் காரணமாக மிகத் தீவிரமுள்ள தேச பக்தரான பாரதி நிச்சயமான வருவாய்க்கு வழியில்லாமல் புதுச்சேரியில் புகுந்திருக்க நேர்ந்தது. அங்கே



வாழ்க்கைக்கு வேண்டிய வசதிகள் இல்லாமல் பலநாள் பட்டினி கிடக்கவும் நேரிட்டது. அப்படியிருந்தும் அவர் எழுதியதும் பாடியதும் என்ன ? வாழ்க்கையை வெறுத்தாரா ? மனைவி மக்களைத் துறந்தாரா ? உலகத்தை நிந்தித்தாரா ? இல்லை. தனக்கும் தன்னைப் போலவே எல்லா மனிதர்களுக்கும் நல்ல உணவு, நல்ல உடை, நல்ல இருப்பிடம் முதலியன கிடைக்க வேண்டும் என்று தெய்வத்தை வேண்டிப் பாடினர். எல்லா மக்களும் இல்லறத்தைச் சரியாக நடத்தி உலக இன்பங்களையெல் நல்ல முறையில் அனுபவிக்க வேண்டும் என்றும் அப்படி அனுபவிக்கும்போதே, அதற்கென்று வேறு முயற்சியில்லாமல் எல்லாச் செயல்களிலும், எல்லாப் பொருள்களிலும் ஈசனை உணரவேண்டும் என்றே பாடினர். மொத்தத்தில் தமிழ் நாட்டின் தேசியப் பரம்பரையான நல்ல பண்புகளுக்கெல்லாம் புதுவாழ்வு காட்டினவன் பாரதிப் புலவன்.

மேலே சொன்ன குறிப்புகளின் உண்மையைப் பாரதியின் பாடல்களில் பார்ப்போம்.

### தமிழ் மொழி

"யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல்
இனிதாவது எங்கும் காணோம்"—என்கிருர்.
தெள்ளுற்றத் தமிழ் அமுதின் சுவைகண்டார்
இங்கு அமரர் சிறப்புக்கண்டார்—என்கிருர்.
சொல்லில் உயர்வு தமிழ்ச் சொல்லே—அதைத்
தொழுது படித்திடடி பாப்பா —என்கிருர்.

தமிழ் மொழியைப் போன்ற இனிய மொழி உலகத்தில் எங்குமில்லை என்று சொல்லுகிருரே! தெளிவான

அறிவு தரும் தமிழ் மொழி என்ற அமிர்தத்தின் சாரத்தைக் கண்டவர்கள் இந்த உலகத்திலேயே தேவலோகத்தின் சிறப்புக்களை அடைந்தவர்களாவார்கள் என்கிருரே ! மொழிகளிலெல்லாம் உயர்ந்த மொழி தமிழ் மொழிதான், அதைத் தொழுது படிக்கவேண்டும் என்று சொல்லு கிருரே ! தமிழ் தம்முடைய தாய்மொழி என்பதற்காக மொழி வெறியினுல் இப்படிச் சொல்லுகிருரா !

பாரதியார் தமிழை மட்டும் படித்தறிந்த தனித்தமிழ்ப் பண்டிதரல்லர். வட மொழியிலும் ஆழ்ந்த படிப்புள்ள வர். அதற்கென்றே காசிக்குச் சென்று வடமொழிக் கலாசாலையில் சேர்ந்து முறைப்படி வடமொழியைக் கற் றுணர்ந்தார். அத்துடன் ஆங்கில மொழியிலும் நல்ல பயிற்சியுடையவர். மேலும் ப்ரெஞ்சு, இந்தி, வங்காளி முதலிய பிற மொழிகளையும் விரும்பிக் கற்றவர். மற்ற மொழிகளில் எவ்வளவு தேர்ச்சியுடையவர் என்பதைச் சொல்ல முடியாதென்ருலும் வட மொழியிலும், ஆங்கிலத் திலும் நல்ல தேர்ச்சியுள்ளவர். ஆங்கிலத்தையும் விலக்கி விட்டாலும் வடமொழியில் ஆழ்ந்த கல்வியுள்ளவர் என் பதில் ஐயமில்லை. வடமொழி மிகச் சிறந்த இலக்கியங்கள் உள்ளது. உலகத்துக்கெல்லாம் மெய்ஞ் ஞான ஒளி கொடுப்பது வடமொழி. அதைப் பாரதியார் அறியாதவ ரல்லர். அப்படி யிருக்க, அந்த வடமொழியையும் சேர்த்து ''யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல் இனிதாவது எங்கும் காணும்'' என்று அவ்வளவு அழுத்தமாகச் சொல்லுகிருரே! ஏன்? வடமொழியைக் குறைத்துப் பேசவா? அல்லவே அல்ல. பின் ஏன்? வடமொழியிலுள்ள வேதங்கள், புராணங்கள், இதிகா



சங்கள், பகவத் கீதை முதலிய தலைசிறந்த இலக்கியங் களிலுள்ள எல்லா நல்லறிவுகளும் பாரதி தோன்றுவ தற்கு வெகு காலத்துக்கு முன்னுலேயே தமிழில் வடித்துக் கொடுக்கப்பட்டுவிட்டன. வட மொழியிலுள்ள எல்லா இலக்கியங்களும் மொழி பெயர்ப்பாகவோ, வழி நூலா கவோ, சார்பு நூலாகவோ ஏற்கனவே தமிழில் இருந்ததோடு தமிழில் முதனூல்களாகிய ஐம்பெருங் காப்பியங்களும், சங்க நூல்களும், திருக்குறளும், கம்பன் இயற்றிய அற்புதக் காவியமும், இருப்பதைக் கண்டார் பாரதி. கம்பனுடைய இராமாயணமும் திருவள்ளுவ ருடைய திருக்குறளும் வடமொழி இலக்கியங்களிலுள்ள அறிவைத் தெள்ளி எடுத்துச் சேர்க்கப்பட்ட இலக்கி யங்கள். அதனுல்தான் பாரதி வடமொழியையும் உள் ளடக்கித் "தமிழ் மொழிபோல் இனிதாவது எங்கும் காணும்'' என்ருர்.

இந்தக் கருத்தையே வலியுறுத்த

''யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல்
வள்ளுவர் போல் இளங்கோவைப் போல்
பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை;
உண்மை: வெறும் புகழ்ச்சியல்ல'' —என்ருர்.

கம்பருடைய காவியம் இராம கதையைச் சொல்லுவது தான் என்ருலும் வடமொழியிலுள்ள மெய்ஞ்ஞான தத்து வங்களை மிகவும் தெளிவான முறையில் விளக்க நிற்கும் அறிவுக்களஞ்சியம். திருக்குறளோ உலகத்திலுள்ள எல்லா மனிதர்களுக்கும் எக்காலத்துக்கும் உதவக்கூடிய ஒப்பரிய அறநூல். அதுவும் வடமொழியிலிருந்து தெள்ளி எடுக்கப்பட்ட அறிவுகள் அடங்கியது. சிலப்பதிகாரமும் வடமொழிக் காவியங்களை அங்கங்கே சுட்டிக் காட்டி

மிகச் சிறந்த நீதிகளைப் புகட்ட நிற்பது. அதனால்தான் பாரதியார் "உயர் கம்பன் பிறந்த தமிழ் நாடு" "வள்ளுவன் தன்னை, உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ் நாடு" "நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம் என்றோர் மணி ஆரம்படைத்த தமிழ் நாடு" என்று பாடினார். தெள்ளிய நல்லறிவுகளைப் புகட்ட நிற்கும் இந்தத் தமிழ் நூல்களைப் படித்து அவற்றிலுள்ள சாரத்தை உணர்ந்தால்போதும் என்ற கருத்தில்தான்,

தெள்ளுற்றத் தமிழ் அமுதின் சுவைகண்டார்
இங்கு அமரர் சிறப்புக் கண்டார்.

என்று பாடினார்.

ஆனால் இப்படித் தமிழ் அமுதின் சுவை கண்டால் மட்டும் போதுமா? தமிழ் இலக்கியங்களில் விஞ்ஞான அறிவுகளைக் தரக்கூடிய நூல்கள் இல்லையே. வாழ்க்கைக்கு வசதிகள் உண்டாக்கி இன்ப மூட்டக்கூடிய எந்திர தந்திரங்களை இயற்றக்கூடிய அறிவு சொல்லும் நூல்கள் இல்லையே? என்ற கேள்விகள் பிறக்கலாம். அவை மிகவும் நியாயமான கேள்விகளே. ஆனால் எந்திர தந்திரங்களெல்லாம் உண்டாக்கக்கூடிய விஞ்ஞானம் உடலுக்கு மட்டும் இன்பந் தரக்கூடிய கருவிகளைத்தான் தரமுடியுமே யல்லாமல் அறிவுக்கு அமைதி தரக்கூடிய கருத்துக்களைக் கொடுக்க முடியாது. மெய்ஞான உணர்ச்சிதான் மக்களுக்குள் அன்பைப் பெருக்கிச் சமரசத்தை நினைப்பூட்டும். அதுதான் சமுதாயத்தில் சமாதானம் நிலவச்செய்து, சந்தோஷம் தரக்கூடியது. விஞ்ஞானம் இல்லாமல் மனித சமுதாயம் சமாதானமாகவும் சந்தோஷமாகவும் வாழ முடியும். ஆனால் மெய்ஞ்ஞான



உணர்ச்சி இல்லாமல் சமுதாயத்தில் சமாதானமும் இருக்க முடியாது; சந்தோஷமும் இருக்க முடியாது. அதனால்தான் பாரதியார் தமிழிலக்கியங்களில் பொதிந்துள்ள மெய்ஞ்ஞான அறிவுக்கு முதலிடம் கொடுத்தார். அதைத்தான் "தெள்ளுற்ற தமிழ் அமுது" என்றார்.

ஆனால் பாரதியார் விஞ்ஞான அறிவைப் புறக்கணித்துவிடவில்லை. தமிழ் மொழியில் விஞ்ஞான நூல்கள் அனைத்தும் இருக்கவேண்டுமென்று ஆர்வம் கொள்ளத் தூண்டுகின்றார். அதைப் பார்ப்போம் :

தமிழ்த் தாய் தன்னுடைய மக்களைப் பார்த்துச் சொல்லுகின்றாள் : "மக்களே! என்னை ஆதிசிவன் பெற்றெடுத்தான். அகத்தியன் என்ற வேதியன் எனக்கு இலக்கணம் கற்பித்தான். சேர, சோழ, பாண்டியராகிய மூவேந்தரும் என்னை மிகவும் அன்போடு வளர்த்தார்கள். மிகச் சிறந்த மொழியாகிய வடமொழிக்குச் சமானமாக வாழ்ந்தேன். தேனைப் போன்ற இனிமையும், தீயைப் போன்ற தூய்மையும், காற்றைப் போன்ற வேகமும், வானவெளியைப் போன்ற விரிந்த நோக்கமும் உள்ள காவியங்களைத் தெள்ளிய அறிவுடைய பல புலவர்கள் செய்து கொடுத்தார்கள். பல சாத்திரங்களையும் செய்தார்கள். அதனால் உலகமெல்லாம் என்னைப் புகழும் படியாக வாழ்ந்தேன். என்னுடைய இளம் பருவத்தில் என் காதில் விழுந்த எத்தனையோ மொழிகள் இருந்த இடம் தெரியாமல் மறைந்துபோயின. ஆண்டவன் அருளினாலும், மிகச் சிறந்த காவியங்களையும் சாத்திரங்களையும் இயற்றிய அந்தப் புலவர்களின் தவ வலிமையினாலும்

நான் மிகுந்த ஆரோக்கியத்துடன் குறைவின்றி வாழ்ந்து வருகிறேன். ஆனால்,

*இன்று ஒரு சொல்லினைக் கேட்டேன் —இனி*
*ஏது செய்வேன் எனது ஆருயிர் மக்காள்!*
*கொன்றிடல் போல் ஒரு வார்த்தை—இங்கு*
*கூறத் தகாதவன் கூறினன் கண்டீர்.*
*புத்தம் புதிய கலைகள்—பஞ்ச*
*பூதச் செயல்களின் நுட்பங்கள் கூறும்;*
*மெத்த வளருது மேற்கே—அந்த*
*மேன்மைக் கலைகள் தமிழினில் இல்லை.*
*சொல்லவும் கூடுவதில்லை—அவை*
*சொல்லும் திறமை தமிழ் மொழிக்கில்லை;*
*மெல்லத் தமிழ்இனிச் சாகும்—அந்த*
*மேற்கு மொழிகள் புவிமிசை ஓங்கும்.*
*என்றந்தப் பேதை உரைத்தான்—ஆ!*
*இந்தவசை எனக் கெய்திடலாமோ!*
*சென்றிடுவீர் எட்டுத் திக்கும்—கலைச்*
*செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்*
*தந்தை அருள் வலியாலும்—இன்று*
*சார்ந்த புலவர் தவவலியாலும்*
*இந்தப் பெரும்பழி தீரும்—புகழ்*
*ஏறிப் புவிமிசை என்றும் இருப்பேன்.*

இதனால், மெய்ஞ்ஞான அறிவையே முதன்மையாகக் கொண்டு, விஞ்ஞான வசதிகளையும் சேர்த்துக்கொண்டு, நல்வாழ்க்கை நடத்தவேண்டும் என்பது பாரதி நமக்குத் தரும் படிப்பினை.

## தமிழர் வாழ்க்கை

*எத்திசையில் எம்மொழியில் எவர்வாய்ச் சொல்லில்*
*எப்படியாய் வரும் கதைகள் எதுவானாலும்*



*சத்தியத்தின் வழி காட்டும் அறிவையெல்லாம்*
*தனதாக்கிக் கலைவளர்த்த தமிழன்*

என்றபடி, வடமொழியிலுள்ள நல்லறிவுகளை யெல்லாம் தமிழர்கள் தம்முடைய இலக்கியங்களில் ஏற்றுக்கொண் டிருக்கிறார்கள் என்றாலும், வாழ்க்கையின், நோக்கத்தில் வடமொழி வழக்குக்கும் தமிழ் வழக்குக்கும் சில வேற்றுமைகள் உண்டு. அவற்றுள் முக்கியமானது வீடு பெறும் நம்பிக்கைக்கான மார்க்கம். வடமொழி வழக்குப் பிரகாரம் கடவுளை உணர்வதற்கு ஒவ்வொரு மனிதனும் மனைவி மக்களைத் துறந்து, வீட்டைவிட்டுக் காட்டுக்குச் சென்று தவம் புரியத்தான் வேண்டும் என்பது. ஆனால் முக்தி பெறுவதற்கு மனைவி மக்களைத் துறந்து வனத்துக் குப் போக வேண்டியதில்லை; இல்லறத்திலேயே வீடு பெறலாம் என்பது தமிழ் வழக்கு. இது மட்டுமன்றி துறவறத்தைக் காட்டிலும் இல்லறந்தான் சிறப்பும் பொறுப்பும் உள்ளது: அதனால் மக்கள் மேற்கொள்ள வேண்டியது இல்லறம்தான் என்பது தமிழ் மரபு. தமிழர் கள் துறவறத்தை அவமதிப்பவர்களல்லர். துறவிகளைத் தமிழர்கள் வணங்கிப் போற்றியே வந்திருக்கிறார்கள். ஆனாலும் இல்லறம்தான் மனிதருக்கு இயல்பானதும் சிறப்புடையதும் என்பதே தமிழரின் கொள்கை. இதைத் திருக்குறள் உறுதிப்படுத்துகிறது. அறம், பொருள், இன் பம், வீடு (தர்ம, அர்த்த, காம, மோக்ஷம்) என்ற நான்கு உறுதிப் பொருள்களில் அறம், பொருள், இன்பம் என்ற மூன்றை மட்டும் விரித்துச் சொல்லி "வீடு" என்பதைத் திருவள்ளுவர் சொல்லாமல் விட்டு விட்டதற்கு முக்கிய காரணம் இதுதான் என்று ஊகிக்கவும் இடமிருக்கிறது.

அறன் எனப்பட்டதே இல்வாழ்க்கை; அஃதும்
பிறன்பழிப்பது இல்லாயின் நன்று.

என்கிறுர் திருவள்ளுவர். இதன் பொருள் : மனிதருக்கு தர்மம் என்று சொல்லப்பட்டதே இல்லற தர்மம் தான். ஆனுலும் இல்லறத்தானுக்குப் பின் ஆகிய துறவறத்தானே இகழாமல் இருப்பது நல்லது—என்பது.

ஆற்றின் ஒழுக்கி அறன் இழுக்கா இல்வாழ்க்கை
நோற்பாரின் நோன்மை உடைத்து.

என்கிறுர். இதன் பொருள் : நடத்த வேண்டிய ஒழுங்குடன் நடத்தி, தருமங்களில் தவருமல் செய்யப்படுகிற குடும்ப வாழ்க்கை, துறவறம் பூண்டு தவம் செய்கிறவர்களேக் காட்டிலும் பொறுப்பும் சகிப்புத் தன்மையும் உள்ளது என்பது. மேலும்,

அறத்தாற்றின் இல்வாழ்க்கை ஆற்றின் புறத்தாற்றில்
போஒய்ப் பெறுவது எவன் ?

என்கிறுர். இதன் பொருள் :—தர்மமார்க்கத்தில் இல்வாழ்க்கையை நடத்திஞல் துறவு பூண்டு வனத்துக்குச் சென்று அடையக் கூடியது என்ன இருக்கிறது ? ஒன்றுமில்லே, என்பது கடைசியாக,

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்.

என்கிறுர். இதன் பொருள் :—உலகத்தில் இல்லறம் நடத்தி வாழ வேண்டிய முறையில் வாழ்கின்றவன் (அவன் வேறு முயற்சி ஒன்றும் செய்யாமலே) வானத்திலுள்ள தெய்வத்தோடு (இரண்டறக் கலந்து விடும்படி)



சேர்த்து விடப்படுவான். அதாவது வீடு பெறுவான்—என்பது.

இந்தக் கருத்துக்களேப் பின்பற்றியே தான் பாரதியார், உலகத்தைப் பொய் என்றும் மனேவி மக்களேத் துறந்தால்தான் தெய்வத்தை அணுகலாம் என்றும் சொல்லப்படுவதைக் கண்டித்து, அறம், பொருள், இன்பத்துடன் இல்லறம் நடத்த வேண்டியதே மக்களுடைய கடமை என்று, உலகத்தில் காணப்படுகின்ற பொருள்களே நோக்கி அவர் பாடியுள்ள பாட்டிற்கு முன்னுரையாக வசன நடையில் மிகவும் தெளிவாகச் சொல்லுகிறுர். அது என்னவென்றுல் :

“இந்த உலகமே பொய்” என்று நமது தேசத்தில் ஒரு சாஸ்திரம் வழங்கி வருகிறது. சந்நியாசிகள் இதை ஓயாமல் சொல்லிக் கொண்டிருக்கட்டும். அதைப் பற்றி இந்த நிமிஷம் எனக்குள் வருத்தமில்லே. குடும்பத்தி விருப்போருக்கு அந்த வார்த்தை பொருந்துமா ? நடு வீட்டில் உச்சரிக்கலாமா ? அவச் சொல்லன்றே ? நமக்குத் தந்தை வைத்து விட்டுப்போன வீடும் வயலும் பொய்யா ? தங்கச் சிலேபோல நிற்கிறுள் மனேவி. நமது துயரத்துக் கெல்லாம் கண்ணீர் விட்டுக் கரைந்தாள் ; நமது மகிழ்ச்சியின் போதெல்லாம் உடல் பூரித்தாள் ; நமது குழந்தைகளே வளர்த்தாள் ; அவள் பொய்யா ? குழந்தைகளும் பொய்தாஞ? பெற்றவரிடம் கேட்கிறேன், குழந்தைகள் பொய்யா? நமது வீட்டில் வைத்துக் கும்பிடும் குலதெய்வம் பொய்யா ?

வீடு கட்டிக் குடித்தனம் பண்ணுவோருக்கு மேற்படி சாஸ்திரம் பயன்படாது. நமக்கு இவ்வுலகத்தில் வேண்

டியவை நீண்ட வயது, நோயில்லாமை, அறிவு, செல்வம் என்ற நான்கும். இவற்றைத் தரும்படி தம்தம் குலதெய்வங்களை மன்ருடிக் கேட்கவேண்டும். எல்லா தெய்வங்களும் ஒன்று. அறம், பொருள், இன்பம் என்ற மூன்றிலும் தெய்வ ஒளி காணவேண்டும். தெய்வத்தின் ஒளி கண்டால், நான்காம் நிலையாகிய வீடு (மோக்ஷம்) தானே கிடைக்கும்'' இது பாரதியின் வாக்கு. இது மேலே சொல்லப்பட்ட குறள்களிலுள்ள கருத்தை முற்றிலும் ஒத்திருப்பது குறிப்பிடத் தக்கது. தமிழ் மக்கள் மறந்துவிட்டிருந்த பரம்பரைப் பண்புகளை நினைப்பூட்டி நம்மைத் தட்டி எழுப்பினவர் பாரதி என்று ஆரம்பத்தில் சொன்னது இதனுல்தான்.

இப்படித் தமிழ் மொழிக்கும் தமிழ்ப் பண்புகளுக்கும் உள்ள தனிச் சிறப்புகளை மிகுந்த ஆர்வத்தோடு பாடியிருக்கிருர் என்ருலும் வடமொழியையும் அது தந்த மெய்ஞ்ஞானத்தையும் தமிழருக்கும் சொந்தமானவைகளாகவே சொல்லுகின்ருர். இந்திய நாடு முழுவதும் ஒரே கலாசாரமுள்ள ஒரு குடும்பம் என்றே போற்றுகின்ருர். தமிழ் நாட்டையும், தமிழையும் தனிப்படப் போற்றும்போதும், இந்தியா முழுவதும் ஒன்று என்பதை அவர் மறந்துவிடுவதில்லை. இதை அவருடைய பாடல்களில் பல இடங்களில் பார்க்கலாம். உதாரணம் காட்ட "பாப்பா பாட்டு'' ஒன்று போதும்.

தமிழ்த்திரு நாடு தன்னைப் பெற்ற எங்கள்
தாயென்று கும்பிடடி பாப்பா
அமிழ்தின் இனியதடி பாப்பா—நம்
ஆன்ரோர்கள் தேசமடி பாப்பா.
சொல்லில் உயர்வு தமிழ்ச் சொல்லே—அதைத்



தொழுது படித்திடடி பாப்பா
செல்வம் நிறைந்த ஹிந்துஸ்தானம்—அதைத்
தினமும் புகழ்ந்திடடி பாப்பா.
வடக்கில் இமயமலை பாப்பா—தெற்கில்
வாழும் குமரிமுனை பாப்பா,
கிடக்கும் பெரிய கடல் கண்டாய்—இதன்
கிழக்கிலும் மேற்கிலும் பாப்பா.
வேதம் உயர்ந்ததிந்த நாடு—நல்ல
வீரர் பிறந்ததிந்த நாடு,
சேத மில்லாத ஹிந்துஸ்தானம்—இதைத்
தெய்வமென்று கும்பிடடி பாப்பா.

இதில் "வேதம் உடையது இந்த நாடு'' என்பதால் வடமொழி மெய்ஞ்ஞானம் நம்முடையது என்ருர். இமயம் முதல் குமரி முனை வரைக்கும் உள்ளது நம்முடைய நாடு என்கிருர். எல்லாவற்றிருக்கும் மேலாகத் "தமிழ்த் திருநாட்டைப் பெற்ற தாய் என்று கும்பிடச்'' சொன்ன பாரதி, "ஹிந்துஸ்தானத்தை தெய்வமென்று'' கும்பிடச் சொல்லுகிருர். இந்த உபமானங்களின் சிறப்பை ஊன்றிப் பார்த்து உட்பொருளை உணரவேண்டும். இனவெறியாலும் மொழி வெறியாலும் இந்திய மக்களின் சீரழிக்கப்பட்டு வரும் இந்தச் சமயத்தில் இது மிகவும் சிந்திக்கத் தக்கது. பாரதியின் இந்தப் பாடல்களுக்கு மதிப்புக் கொடுத்ததே போல், இந்த மாகாணப் பிரிவினையில் தமிழ் மக்களுக்குக் குறை இருந்தும், அவர்கள் இன வெறியோ மொழி வெறியோ இல்லாமலிருப்பது மிகவும் பெருமைக்குரியது.

## மாபெரும கவிஞன்

பாரதியை "தேசியக் கவிஞர்'' என்றும் அவர்பாடிய கவிகளைத் "தேசிய கீதம்'' என்றும் சொல்வது வழக்கம்.

அப்படிச் சொல்லுகிறவர்கள் பெரும்பாலோரும், அவர் இந்திய நாடு அன்னிய நாட்டிற்கு அடிமைப்பட்டிருப்பதி னின்றும் விடுதலை யடையவேண்டும் என்பதற்காகப் பாடிய தேச பக்திப் பாட்டுகளை மனதிற் கொண்டுதான் சொல்லுகிறார்கள். ஆம். அவர் அதி தீவிரமுள்ள தேச பக்தர்தாம். அடிமை வாழ்வு நீங்கி சுதந்திரம் அடைய "என்று தணியும் இந்த சுதந்திர தாகம்" என்று ஆவேசத் துடன் பல தேசபக்திப் பாடல்களை இயற்றி அவற்றைத் தெருத்தெருவாகத் தாமே பாடிப் பஜனை செய்தவர் தாம். அவர் பாடல்களைக் கேட்டு விடுதலை வேட்கை கொண்ட தமிழர்கள் எண்ணிறந்தவர்கள். தமிழ் நாடு அவரை ஒரு மிகச் சிறந்த கவிஞர் என்று மதிக்கச் செய்தது அந்த தேச பக்திப் பாடல்கள் தாம். அந்தக் காலத்தில் அமித வாதி என்று அழைக்கப்பட்ட பால கங்காதர திலகர் பெருமானுடைய கட்சியைச் சேர்ந்து, கனல் பறக்கும் தேச பக்திப் பாட்டுகளைப் பாடித் தமிழ் நாட்டுத் தேச பக்தர்களுக்கு இணையற்ற வீரராக பாரதி விளங்கினார் என்பதும் உண்மைதான். அவருடைய தேச பக்திப் பாடல்களால் தூண்டப் பெற்று விடுதலைக்குத் துடி துடித்த இளைஞர்கள் ஏராளம். இளைஞர்கள் மட்டுந் தானா?

படித்தறியா ஏழைக் கிழவனேனும்
பாரதியின் பாட்டிசைக்கக் கேட்பானாகில்
துடித்தெழுந்து தன்மெலிந்த தோளைக் கொட்டித்
தொளைமிகுந்த கந்தல் உடை சுருக்கிக் கட்டி
எடுத்தெறிய வேண்டும் இந்த அடிமை வாழ்வை
இப்பொழுதே இக்கணமே என்றென்று ஆர்த்து
அடித்துரைத்து ஆவேசம் கொள்வான் என்றால்
அப்பாட்டின் மகிமை சொல்ல யாரே வல்லார்.



என்றபடி, படிப்பில்லாத பாமரக் கிழவர்களையும் அவருடைய பாட்டுக்கள் தேச பக்தி ஆவேசம் கொள்ளச் செய்தன என்பது மிகையல்ல. பாரதியின் பாடல்களில் திளைந்து தேச பக்தியில் தீவிரம் அடைந்திருந்ததால் தான் காந்தியடிகளுடைய போராட்டத்தில் கணக்கற்ற தமிழ் மக்கள் கலந்து கொண்டார்கள் என்பதும் உண்மையே.

ஆனாலும் பாரதி வெறும் தேச பக்திப் பாட்டுகளைப் பாடிவிட்ட புலவர் அல்லர். அவர் தேச பக்திப் பாடல் களைப் பாடி சுதந்திர ஆர்வத்தைத் தூண்டிவிட நேரிட்ட தும் வெறும் சந்தர்ப்பச் சூழ்நிலையே. அவர் பாடிய தேச பக்திப் பாடல்கள், மற்றப் பாடல்களைவிட எண்ணிக்கை யில் மிகவும் குறைந்தவைதாம். அவற்றிலும் வெறும் அரசியல் சுதந்தரத்தை மட்டும் குறிக்கின்ற பாட்டுகள் வெகு சிலவே. அந்தச் சிலவும் குறிப்பிட்ட சூழ்நிலைக்கு மட்டும் உதவக் கூறியனவே யன்றி எக்காலத்துக்கும் எல்லாருக்கும் உதவக் கூடியவையல்ல.

பாரதி வெறும் தேசபக்திப் பாடல்களைப் பாடவந்த புலவரல்ல. அவர் மனித சமுதாயத்துக்கு எப்போதும் உதவக் கூடிய நித்தியமான சத்திய ஞானத்தையும் அதைச் சேர்ந்த அறவொழுக்கங்களையும் பாடிய மகா கவிஞர். அவருடைய பாடல்களில் பெரும் பகுதியும் மெய்ஞ்ஞானபோதனை. அவர் கவிதைசான்றோர் கவிதை. சான்றோர் கவிதை என்றால் என்ன? அதற்குக் கல்வியிற் சிறந்த கம்பர் சொல்லும் இலக்கணம் என்னவென்றால்,

"புவியினுக்கு அணியாய் ஆன்ற பொருள் தந்து [புலத்திற்றாகி
அவிசுகத் துறைகள் தாங்கி ஐந்திணை நெறி அளாவி

சவியுறத் தெளிந்து தண்என்று ஒழுக்கமும் தழுவிச்
[சான்றோர்
கவி" எனக்கிடந்த கோதாவிரியினை வீரர் கண்டார்.

பாரதியின் கவி வெறும் தேசபக்திப் பாடல் அல்ல. அது புவியினுக்கு அணியாய் விளங்கி மக்களுக்கு மெய்யறிவை நினைப்பூட்டிக் கொண்டிருக்கும் சான்றோர் கவி.

**பயன்**

பாரதியின் பாடல்களைப் படிப்பதனாலும் பாரதி விழாக் கொண்டாடுவதாலும் நாம் அடையக் கூடிய பயன் என்ன? பாரதியை வீரத்தைப் புகட்டிய புலவன் என்றும் போர் முரசு கொட்டிய புலவன் என்றும், அவரை பலாத்கார எண்ணங்களோடு சம்பந்தப்படுத்திப் பேசுகின்றவர்கள் உண்டு. அது முற்றிலும் தவறு. அப்படிப் பேசுவது எதைப் போலவென்றால் கிருஷ்ண பகவான் போதித்த பகவத் கீதை, கொலை செய்யத் தூண்டும் இலக்கியம் என்று சொல்வதையே ஒக்கும்.

பாரதி வீரத்தைப் புகழ்ந்தார்; வெற்றியை விரும்பினார்; ஜெயபேரிகை கொட்டினார்; அச்சத்தை ஓட்டினார்; ஆண்மையை ஊட்டினார்; உண்மைதான். அதனாலென்ன? அவர் பலாத்காரத்தைச் செய்யும்படி எங்கே பாடியிருக்கிறார்? கொன்று விடுவேன் என்று சொன்னவனுக்கும் தானும் அப்படிக் கொல்ல முடியும் என்று கூடப் பதில் சொல்லவில்லையே! இதற்கு உதாரணம், ஆங்கிலேயன் ஒரு தேச பக்தனைப் பயமுறுத்துவதாக அவர் பாடிய பாடல்களில் கடைசி பாட்டாக,

சுட்டு வீழ்த்தியே புத்தி வருத்திடச்
சொல்லுவேன்—குத்திக்—கொல்லுவேன்



தட்டிப் பேசுவோர் உண்டோ? சிறைக்குள்ளே
தள்ளுவேன்—பழி—கொள்ளுவேன்.

என்பதாகப் பாடினார். இந்தப் பயமுறுத்தலுக்குப்பதிலாக தேச பக்தன் சொன்னதாக அவர் பாடியிருப்பதைப் பாருங்கள்.

சதையைத் துண்டு துண்டாக்கினும் உன் எண்ணம்
சாயுமோ? ஜீவன்—ஓயுமோ?
இதையத் துள்ளே இலங்கும் மகாபக்தி
ஏகுமோ?—நெஞ்சம்—வேகுமோ.

என்பது. இது வெறும் தேசபக்திப் பாட்டாகவா இருக்கிறது?' நீ என் தேகத்தை என்ன வேண்டுமானாலும் செய்துகொள். என் ஆன்மாவையும் பக்தியையும் உன்னால் அழித்துவிட முடியாது" என்ற பகவத் கீதை அறிவல்லவா இது!

பாரதியின் கொள்கை என்ன? அவர் போதிப்பது என்ன என்பதைச் சிந்திக்க வேண்டும். அவருடைய கொள்கை அவர் பாடியுள்ள எல்லாப் பாட்டுகளிலும், ஒரு மணியாரத்தின் மத்தியில் ஓடும் நூல்வடம் போல் இருக்கிறது. சுருக்கமாகவும் மிகத் தெளிவாகவும் அவருடைய கொள்கையை அறிந்துகொள்ள,

உயிர்களிடத்தில் அன்பு வேண்டும்—தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேண்டும்
வயிரமுடைய நெஞ்சு வேண்டும்—இது
வாழும் முறைமையடி—பாப்பா.

என்ற ஒரு பாட்டே போதும். ஜீவகாருண்யம், தெய்வ நம்பிக்கை, வைராக்கியம், என்ற மூன்றும் சேர்ந்த வாழ்க்கைதான் நல் வாழ்க்கை என்பது பாரதியின் கொள்கை. இந்த மூன்றுக்குள் மற்ற எல்லா அறங்களும் அடங்கும்.

இந்தக் கொள்கையில் திடமான நம்பிக்கை கொண்டு வாழ்க்கை நடத்திய பாரதி, தீவிரம் மிகுந்த தேச பக்தராகவும் இருந்தார். இந்தக் கொள்கைக்குப் பங்கமில்லாமல் தேச பக்தியைக் கொண்டு செலுத்தி, வெள்ளைக்காரன் ஆட்சியிலிருந்து எப்படி விடுதலை அடைவது? கொலை புரிவதோ கொள்கைக்கு விரோதம். கொள்கையையும் விட்டுவிட்டு, ஆயுத பலத்தால் வெள்ளைக்காரனை வெளியேற்றலாம் என்பதற்கு, ஆங்கிலேயரை வெல்லக்கூடிய ஆயுத பலம் அடைவது அசாத்தியத்திலும் அசாத்தியம். வழி தெரியாமல் திகைத்துக் கொண்டிருந்தார் பாரதி.

அந்தச் சமயத்தில் மகாத்மா காந்தி தமது "ஒத்துழையாமை திட்டத்தை வெளிப்படுத்தினர். உடனே பளிச் சென்று வழி துலங்கிவிட்டது பாரதிக்கு. சென்னைக்கு வந்திருந்த மகாத்மாவைத் தரிசித்து, ஒத்துழையாமை திட்டத்தைப் பற்றிய விவரங்களை அறிந்துகொள்ளப் பாரதி மகாத்மாவுடன் அளவளாவினர். ஒத்துழையாமை திட்டத்தில் தமக்கிருந்த சந்தேகங்கள் தீர்ந்து தெளிவு கொண்டார். உடனே அந்தத் திட்டத்தை வரவேற்றுக் காந்தி யடிகளின் மீது பஞ்சகம் பாடினர். இந்தப் பஞ்சகமே பாரதியார் நமக்குச் சொன்ன நல்லறிவு. அவர் நெடுங் காலமாகப் பாடிவந்த பாட்டுகளின் சாரமெல்லாம் சேர்ந்தது, இந்தப் பஞ்சகம். அவருடைய கொள்கைக்கு முத்தாய்ப்பு இந்தப் பஞ்சகம்.

வாழ்கநீ எம்மான், இந்த வையத்து நாட்டிலெல்லாம்
தாழ்வுற்று வறுமை மிஞ்சி விடுதலைத் தவறிக் கெட்டுப்
பாழ்பட்டு நின்றதாம் ஓர் பாரத தேசம் தன்னை
வாழ்விக்க வந்த காந்தி மகாத்மா! நீ வாழ்க! வாழ்க!



அடிமை வாழ்வு அகன்று இந்நாட்டார் விடுதலை
[ஆர்ந்து செல்வம்
குடிமையில் உயர்வு, கல்வி, ஞானமும் கூடி ஓங்கிப்
படிமிசைத் தலைமை எய்தும் படிக்கொரு சூழ்ச்சி செய்தாய்;
முடிவிலாக் கீர்த்தி பெற்றுய் புவிக்குளே முதன்மை யுற்றுய்
கொடிய வெம் நாக பாசத்தை மாற்ற
மூலிகை கொணர்ந்தவன் என்கோ?
இடிமின்னல் காக்கும் குடை செய்தான் என்கோ?
என்சொலிப் புகழ்வது இங்கு உனையே?
விடிவிலாத் துன்பம் செயும் பராதீன
வெம்பிணி அகற்றிடும் வண்ணம்
படிமிசை புதிதாச் சாலவும் எளிதாம்
படிக்கொரு சூழ்ச்சிநீ படைத்தாய்
தன்னுயிர் போலத் தனக்கு அழிவெண்ணும்
பிறனுயிர் தன்னையும் கணித்தல்;
மன்னுயிர் எல்லாம் கடவுளின் வடிவம்
கடவுளின் மக்கள் என்றுணர்தல்;
இன்ன மெய்ஞ்ஞானத் துணிவினை, மற்றுஆங்கு
இழிபடு போர், கொலை, தண்டம்
பின்னியே கிடக்கும் அரசியல் அதனில்
பிணைத்திடத் துணிந்தனை பெருமான்!
பெரும் கொலை வழியாம் போர்வழி இகழ்ந்தாய்;
அதனினும் திறன் பெரிதுடைத்தாம்
அருங் கலைவாணர் மெய்த்தொண்டர் தங்கள்
அறவழி ஒன்று நீ அறிந்தாய்;
நெருங்கிய பயன்சேர் 'ஒத்துழையாமை'
நெறியினால் இந்தியாவுக்கு,
வரும்கதி கண்டு பகைத்திறம் மறந்து,
வையகம் வாழ்க நல் அறத்தே.

கல்வியினாலும் கவிதையினாலும் நாம் அடைய வேண்டிய நல்லறிவுகள் பலவும் இந்தப் பாட்டுகளில் அடங்கியுள்ளன. கடைசிப் பாட்டு தீர்க்க தரிசனம்

அமைந்தது. அதன் கருத்து; இது வரையிலும் எல்லா நாட்டவரும் தமக்குள் உண்டாகும் விவகாரங்களைத் தீர்த்துக் கொள்ள பெருங் கொலை வழியான ஆயுதப் போர்களைத்தான் அறிந்திருந்தார்கள். அந்த முறையை இகழ்ந்து விட்டு, அதைக் காட்டினும் வலிமை மிகுந்ததும் தீமை இல்லாததுமான, தர்ம மார்க்கத்தை நீ தான் கண்டறிந்தாய். அதுதான் ஞானிகளும் உண்மையான தெய்வத் தொண்டர்களும் போற்றக் கூடிய மார்க்கம். அந்த மார்க்கம் நெருங்கிய பல நல்ல பயன்களைத் தரக் கூடியது. அந்த ஒத்துழையாமை மார்க்கத்தால் நிச்சயமாக இந்தியாவுக்கு வரப்போகிற சிறந்த நிலைமையினால் உலகத்திலுள்ள எல்லா நாடுகளும் ஒருவருக்கொருவர் பகைமை பாராட்டுவதை விட்டு விட்டு, நேசமாக வாழ்வார்கள்—என்பது. காந்திய வழியில் இந்தியா சுதந்திரம் அடைந்ததைக் கண்டு, மற்ற நாடுகளெல்லாம் காந்தீயத்தைப் புகழ்ந்து இந்தியாவுக்குப் பெரும் மதிப்பளிக்கிறார்கள். அந்தக் காந்திய முறையில் ஜவஹர்லால் நேரு அவர்கள் கையாளும் அயல் நாட்டுக் கொள்கையினால் பல நாடுகளுக்குள் இருந்த பகைமை குறைந்து வருவது கண்கூடு. அந்த நல்ல பலனைத்தான் தீர்க்க தரிசனம் போல் பாரதி முன்னாலேயே பாடியிருக்கிறார். ஆதலால் பாரதியின் பாடல்களால் நாம் அடைய வேண்டிய பயன்கள் காந்தியத்தில் அடங்கியுள்ள தெய்வ நம்பிக்கையும், உயிர்களிடத்தில் அன்பும், சாந்தமும், சத்தியமும், அவற்றை வாழ்க்கையில் மேற்கொள்ள-வயிரமுடைய நெஞ்சும் ஆகிய இவைகள்தாம். சுருங்கச் சொன்னால் காந்தியம்தான் மக்களுக்கு சன்மார்க்கம் என்பதே பாரதி கடைசியாகப் பாடிச் சொன்ன படிப்பினையாகும்.

# 7. விடுதலை இயக்கமும் பாட்டும்

'விடுதலை இயக்கமும் பாட்டும்' என்பது, இந்திய நாடு விடுதலை யடைவதற்கு நாம் நடத்திய இயக்கத்திற்குப் பாட்டுகள் எவ்வளவு பயன்பட்டன என்பதைப் பொருளாகக் கொண்டது.

இப்போது நம்முடைய நாடு முழுவதிலும் 1857-ஆம் ஆண்டில் நடந்த 'சிப்பாய்கள் கலகம்' என்று ஆங்கிலேயர்கள் பெயரிட்ட விடுதலைப் போரின் நூற்றாண்டு விழா கொண்டாடப்படுகிறது. அது எதற்காக வென்றால், ஆங்கிலேயருக்கு அடிமையாகி அவதிப்பட்டுக்கொண்டிருந்த நமது நாட்டின் சுதந்திரத்தை மீட்டு, ஆங்கிலேயரை வெளியேற்றவேண்டுமென்று நூறு ஆண்டுகளுக்கு முன்னாலேயே வெள்ளையரை எதிர்த்து உயிர் துறந்த வீரர்களின் தியாகத்துக்கு வணக்கம் செலுத்தவேண்டும் என்பதற்காகவே.

அதனோடு 1857-இல் நடந்த விடுதலைப் போர் அப்போது தோல்வியுற்றது என்றாலும், அதன் பயனாக இந்திய மக்களுக்குள் நாளுக்கு நாள் வளர்ந்து வந்த விடுதலை வேட்கைதான் இப்போது நாம் அனுபவிக்கும்

சுதந்திரத்தின் அடிப்படை என்பதை நினைவுகொள்ள வேண்டுமென்பதும் இந்த நூற்றாண்டு விழாவின் நோக்கமாகும்.

அதற்கும் மேலாக, ஆயுத பலத்தாலும் அடிமை மனப் பான்மையுடன் ஆங்கிலேயருக்கு அனுப்பிக் கொண்ட விண்ணப்பங்களாலும் அடைய முடியாம லிருந்த விடுதலையை அற்புதப் பிறவியான காந்தி மகான் உலகம் கண்டறியாத சன்மார்க்க முறையில் ஆன்ம பலத்தால் அடையச்செய்த பெருமையை நினைவுகொள்ள வேண்டுமென்பதும் இந்த விழாவின் குறிக்கோளாகும்.

நூற்றைம்பது ஆண்டுகளுக்கும் அதிகமாக எண் ணிறந்த தியாகங்களைச் செய்து வெகு பாடுபட்டு அடைந் துள்ள சுதந்திரத்தை இழந்துவிடாமல் கட்டிக் காக்க வேண்டிய உறுதியும் ஒற்றுமையும் நமக்குள் உண்டாக வேண்டும் என்றே இந்த விழா இந்தியாவின் மூலை முடுக்குகளிலும் கூடக் கொண்டாடப்படுகிறது.

இப்படி நாம் சுதந்திரம் அடைந்ததற்குக் காரணமாக இருந்த விடுதலை இயக்கத்திற்குப் பாட்டுகள் எப்படிப் பயன்பட்டன என்பதைப்பற்றிச் சொல்லுவதற்கு முன் விடுதலை முயற்சிகளின் சரித்திரத்தைச் சுருக்கமாகச் சொல்லுவது பொருந்தும்.

இந்தியாவில் வியாபாரம் செய்து பொருள் சம்பா திக்கவென்றே வந்த ஆங்கிலேயர், தங்களுடைய வியா பாரப் பொருள்களை வைத்துக்கொள்ளக் கட்டிடம் கட்டிக் கொள்ள அப்போது சென்னைக்கு அரசனுயிருந்த சந்திர கிரி மன்னனிடம் இடம் கேட்டார்கள். தாராள மன முள்ள அவ்வரசன் சென்னைக் கடற்கரையில், இப்போது



செயிண்ட் ஜார்ஜ் கோட்டையாக இருக்கும் இடத்தைக் கொடுத்தான். சிறுகச் சிறுக அந்த இடத்தில் ஒரு பல மான கோட்டையைக் கட்டிக்கொண்டு, தங்களுடைய வியாபாரப் பொருள்களுக்குக் காவல்போல ஒரு பட்டா ளத்தையும், அதற்கு வேண்டிய துப்பாக்கி, பீரங்கி முதலிய ஆயுதங்களையும் வெடி மருந்துகளையும் வைத்துக் கொண்டார்கள். அதன் பிறகு பம்பாயிலும் கல்கத்தா விலும் இதைப்போலவே கோட்டைகளைக் கட்டிக் கொண்டு சேனைகளையும் வைத்துக்கொண்டார்கள். தொடக்கத்தில் ஆங்கிலேயர் ஒரு வியாபாரக் கம்பெனி யாராகத்தான் இந்தியாவில் கால் ஊன்றினார்கள்.

அந்தக் காலத்தில் இந்திய நாடு பல சுதேச மன்னர் களால் தனித்தனி இராஜ்ஜியங்களாக ஆளப்பட்டு வந்தது. இந்தச் சுதேச மன்னர்களுக்கிடையில் சண்டை களும் சச்சரவுகளும் அடிக்கடி நடந்துகொண்டிருந்தன. இந்த மன்னர்களிற் சிலர் தம்முடைய எதிரிகளை வெல்வ தற்கு இங்கிலீஷ் கம்பெனியாரின் படை பல உதவியை நாடினார்கள். இந்த நிலைமையைப் பயன்படுத்திக் கொண்டு வெள்ளைக்காரக் கம்பெனியார், ஒரு சுதேச மன்னனுக்குத் துணையாக இன்னொரு சுதேச மன்னனை வென்று, அவனைத் தமக்குக் கப்பங்கட்டும் அடிமை யாக்கிக்கொண்டார்கள். இப்படியாகப் பல சதிகள் செய்து எல்லாச் சுதேச சமஸ்தானங்களையும் தமக்கு அடிமைகளாக்கிக்கொண்டு, இமயம் முதல் குமரி வரை ஆதிக்கியத்தை அபகரித்துக்கொண்டார்கள்.

இப்படி வெள்ளைக்கார வியாபாரக் கம்பெனிக்கு வந்த ஆதிக்கியம் இங்கிலாந்தின் மன்னர் பரம்பரைக்கு

மாற்றப்பட்டு இந்தியா இங்கிலாந்தின் ஏகாதிபத்தியத்துக்குள் அடங்கிய அடிமையாகிவிட்டது. அதன் பிறகு இங்கிலாந்து மன்னருக்குப் பிரதிநிதியாக ஒரு 'வைசிராய்' என்றும், மாகாணங்களை ஆளக் 'கவர்னர்கள்' என்றும், ஜில்லாக்களை ஆளும் 'கலெக்டர்கள்' என்றும் அடிமைப்பட்ட சமஸ்தானங்கள் ஆங்கில ஆட்சிக்கு விரோதமாக எதையும் செய்துவிட முடியாதபடி கண்காணிக்க 'ரெசிடெண்டுகள்' என்றும், ஏராளமான இங்கிலீஷ்காரர்கள், வேறு எந்த நாட்டிலும் இல்லாத மிகப் பெரிய சம்பளங்களுடன் தலைமைப் பதவிகளில் அமர்த்தப்பட்டார்கள். இவர்களுடைய ஏவலைச் செய்யும் உத்தியோகங்களே இந்தியருக்கு அளிக்கப்பட்டன.

இங்கிலீஷ் 'சோல்ஜர்'களுக்கு, இந்திய சிப்பாய்களுக்குக் கொடுக்கப்பட்டதைவிட மிக உயர்ந்த சம்பளமும் உணவும் உடையும், மற்ற வசதிகளும் வழங்கப்பட்டன. இவை சிப்பாய்களின் வருத்தத்தை வளர்த்து வந்தன.

இது போக, இங்கிலாந்திலிருந்தும் வேறு சில ஐரோப்பிய நாடுகளிலிருந்தும் அனேக கிறிஸ்துவ மத போதகர்கள் இந்தியாவில் வந்து குடியேறினார்கள். அவர்கள் இந்தியாவின் பல பகுதிகளிலும் கிறிஸ்துவக் கோயில்களைக் கட்டி, மடங்களை ஏற்படுத்திக்கொண்டு இந்துக்களையும் மகமதியர்களையும் கிறிஸ்துவர்களாக்கத் தலைப்பட்டார்கள். ஏராளமான இந்திய ஏழை மக்கள் கிறிஸ்தவர்களாக மதம் மாறினார்கள். இந்தக் கிறிஸ்தவர் கோயில்களுக்கும் மடங்களுக்கும் மதம் மாற்றும் வேலைகளுக்கும் இந்திய அரசாங்கம் மிகப் பெரிய மானியங்கள் கொடுத்து எல்லாவித ஆதரவுகளையும் அளித்து வந்தது. இதைக் கண்ட இந்திய மக்கள் இங்கிலீஷ் ஆட்சி இங்குள்ள இந்து மதத்தையும் மகமதிய மதத்தையும் அழித்துவிட்டுக் கிறிஸ்துவ மதத்தைப் பரப்ப முயல்வதாக எண்ணத் தொடங்கினார்கள். இந்த எண்ணத்தைப் பலப்படுத்தி இந்து மதத் தலைவர்களும், மகமதிய மௌல்விகளும் மக்களிடைப் பிரசாரம் செய்து வெள்ளையர் மீது வெறுப்புண்டாகச் செய்தார்கள். இங்கிலீஷ் ஆட்சி இந்தியர்களின் மதத்தைக் கெடுக்க முயல்கின்றது என்ற மனஸ்தாபம் இந்தியச் சிப்பாய்களின் பட்டாளங்களுக்குள்ளும் பரவியது. நீதி பரிபாலனத்திலும் வெள்ளையனுக்கு ஒரு நீதி. கறுப்பனுக்கு வேறு நீதி என்று நடத்தப்பட்டு வந்தது.



இவைகளையெல்லாம் கண்ட இந்தியர்கள் அன்னியர்களுக்கு அடிமைப்பட்டிருப்பதின் கொடுமைகளை உணரலானார்கள். அந்த உணர்ச்சி சுதந்திர தாகத்தைத் தூண்டிக்கொண்டேயிருந்தது.

கறுப்பருக்கும் வெள்ளையருக்குமிடையே காட்டப்படுகிற பாரபட்சத்தைப் பற்றிச் சுதேச சிப்பாய்களின் மனக்கசப்பு நாளுக்கு நாள் அதிகப்பட்டுக் கொண்டே வந்தது.

கடைசியாக இந்தியச் சிப்பாய்களுக்கு அவர்களுடைய மத உணர்ச்சிகளுக்கு விரோதமான கொழுப்புகள் பூசப்பட்ட குண்டுகளடங்கிய தோட்டாக்கள் கொடுக்கப்பட்டிருக்கிறதாக ஒரு வதந்தி பட்டாளங்களுக்கிடையில் பரவலாயிற்று இது சிப்பாய்களின் கோபத்தைக் கொதிக்கச் செய்துவிட்டது.

முதன் முதலாக பர்ஹம்பூர் என்னும் இடத்தில் சிப்பாய்கள் வெள்ளைக்கார அதிகாரிகளுக்குக் கீழ்ப்படிய மறுத்துவிட்டார்கள். உடனே வெள்ளைக்கார அதிகாரிகள் இந்த எதிர்ப்புக்கு முக்கியஸ்தர்களாய் இருந்த சிப்பாய்களைப் பிடித்து விலங்கு பூட்டிச் சிறையில் அடைத்துவிட்டார்கள். இந்தச் செய்தி பல ஊர்களுக்குப் பரவியது. அங்கங்கே இருந்த சிப்பாய்களும் ஆத்திரமடைந்தார்கள்.

மீரத் என்னும் பட்டினத்தில் மூன்று பெரிய சிப்பாய்ப் பட்டாளங்கள் இருந்தன. அந்த மூன்று பட்டாளங்களும் சேர்ந்து வெள்ளையருக்கு விரோதமாகக் கிளம்பி, 1857-ஆம் வருடம், மே மாதம், பத்தாம் தேதி, ஞாயிற்றுக்கிழமை மாலையில், அந்த மூன்று பட்டாளங்களுக்கும் அதிகாரிகளாயிருந்த எல்லா வெள்ளையர்களையும் சுட்டுக் கொன்றுவிட்டுச் சுதந்திர முழக்கம் செய்தன. நகரத்துக்குள் புகுந்து எட்டினமட்டும் வெள்ளையரைச் சுட்டுக் கொன்றன. சிறைச்சாலைகளின் கதவுகளை எல்லாம் உடைத்தெறிந்து, வெள்ளையரால் சிறையில் அடைக்கப் பட்டிருந்த எல்லாரையும் விடுதலை செய்து, அவர்களையும் சேர்த்துக்கொண்டு தில்லியின்மேல் படையெடுத்துச் சென்றன.

தில்லியிலிருந்த மூன்று சிப்பாய்ப் பட்டாளங்களும் இவைகளுடன் சேர்ந்து கொண்டு வெள்ளைக்கார அதிகாரிகளையும் மற்றுள்ள வெள்ளையரையும் சுட்டுக்கொன்றன. மிகவும் எளிதாகத் தில்லி இவர்களுக்கு வசமாகி விட்டது. உடனே 'இனி நம்மை வெள்ளைக்காரன் ஆள விடமாட்டோம்; வெள்ளையர்களை ஒழித்துவிட்டோம்' என்ற நம்பிக்கை உண்டாகும்படி, முடியிழந்த மொகலாய பரம்பரையைச் சேர்ந்த **பகதூர்ஷா**வைச் சக்கரவர்த்தி ஆக்கினார்கள். இந்தச் செய்தி மின்வேகத்தில் பல ஊர்களுக்கும் பரவிற்று.



இதைப்போலவே பல இடங்களில் சிப்பாய்ப் பட்டாளங்கள் வெள்ளையரை எதிர்த்துப் போர்க்கோலங் கொண்டன. சிறப்பாக வடமேற்கு மாகாணத்திலும் மத்திய மாகாணத்திலும் அயோத்தி மாகாணத்திலும் சிப்பாய்களின் எதிர்ப்பு மிகவும் பலமுள்ளதாக இருந்தது. வடமேற்கு மாகாணத்திலிருந்து வங்காளம் வரையிலும் இந்த விடுதலைப் போர் விரிவடைந்தது. சிப்பாய்களுக்குத் துணையாக முன்னே வெள்ளைக்காரரால் பதவிகளை இழந்துவிட்ட சில மன்னர்களும், தலைவர்களும் அங்கங்கே பொதுமக்களைத் தூண்டிவிட்டுப் பட்டாளங்களை உருவாக்கி வெள்ளையரைக் கடுமையாகத் தாக்கினார்கள்.

இப்படிப்பட்ட தலைவருக்குள் மிகவும் குறிப்பிட வேண்டியவர்கள் ஜான்ஸி ராணி லட்சுமியாய், தாண்டியா தோப்பி, நானா சாஹிப், ராவ் சாஹிப், அஸிமுல்லா கான், எண்பது வயதுக் கிழவனை குன்வார் சிங், மொகலாய வமிசத்தைச் சேர்ந்த பகதூர்ஷா, கான்பஹதூர் கான் முதலானவர்கள்.

சுமார் பதினைந்து மாத காலம் இந்தப் போர் வெகு மும்மரமாக நடந்தது. ஏராளமான வெள்ளையர்கள் உயிரிழந்தார்கள். இனிமேல் இங்கிலீஷ்காரர்கள் இங்கே இருக்கமுடியாது என்று நம்பும்படியான நிலைமையும் ஏற்பட்டது.

ஆனாலும், வெள்ளைக்காரர்கள் வெகு சாமர்த்தியத் துடன் பல சாகசங்களைச் செய்து, இவ்வளவு எதிர்ப்பை யும் சமாளித்துச் சிறுகச் சிறுக முன்னேறி, இந்த மா பெரும் இயக்கத்தை இந்தியர்களுடைய துணைகொண்டே ஒடுக்கிவிட்டார்கள்.

திட்டமிட்டப் போர் முறைகளை வகுத்துக்கொள்ளாத தாலும், கிடைத்த வெற்றிகளைக் கட்டிக் காத்துப் பலப் படுத்திக் கொள்ளாததாலும், போரை நடத்திய தலைவர் களுக்குள் கூட்டுறவு இல்லாமல் ஒவ்வொருவரும் ஒவ் வொரு முறையில் செயல் புரிந்ததாலும் அந்த இயக்கம் தோல்வி அடைந்தது.

இந்த இயக்கம் தோல்வியுறத் தொடங்கிய பின். இதை ஒடுக்கும்போது இங்கிலீஷ்காரர்கள் இழைத்த கொடுமைகள் நாகரிகம் என்றென்றும் நாணத் தக்கன. இயக்கத்தில் எந்த விதத்திலும் சம்பந்தப்படாத ஏழைப் பாமர மக்களை எல்லாம் கிராமம் கிராமமாகப் புகுந்து வேட்டையாடினார்கள். நிரபராதிகளான பெண்களைத் தூக்கிவிட்டார்கள். தாயோடு குழந்தையையும் உயி ரோடு எரித்தார்கள். ஊர்களுக்கு நெருப்பு வைத்துச் சாம்பலாக்கினார்கள். கிழங் கட்டைகளையும் குத்திக் கொன்றார்கள். அபயமென்று அடிபணிந்தவர்களையும் சுட்டுக்கொன்றார்கள். சிக்கிக்கொண்ட சிப்பாய்களைப் பீரங்கி வாயில் கட்டிச் சுட்டார்கள். வீடு வீடாக நுழைந்து அதில் பயந்து பதுங்கிக்கொண்டிருந்த நிரபராதிகளான ஆண், பெண் குஞ்சு குழந்தை அனைவரையும் குத்தியும் வெட்டியும் சுட்டும் கொன்றார்கள். இப்படியாக அரக்கர் களும் அருவறுக்கும்படியான எண்ணிறந்த கொடுமை



களைச் செய்து, எங்கெங்கும் மக்கள் கிலிபிடித்து நடு நடுங்கும்படியாகச் செய்ததை இங்கிலீஷ் சரித்திர ஆசிரி யர்களே மிக்க வருத்தத்துடன் எழுதிவைத்திருக்கி றார்கள்.

இப்படியாக அந்த விடுதலை இயக்கம் அடக்கப்பட் டது. வீராதி வீரரும் போற்றி வணங்குகிற ஜான்ஸி ராணி குதிரைப் பட்டாளத்தை நடத்திக்கொண்டு போர் முனைக்குப் போகும்போது எதிரிகளின் குண்டுபட்டு இறந்துபோனாள். அயோத்தி ராணியாகிய பீகம்', பிரோஸ்ஷா, நானா சாகிப் ஆகிய மூவரும் இந்தியாவை விட்டே உயிருக்காக ஓடிப்போனார்கள்.

மானங்கெட்ட மான்சிங் என்ற ஒருசிநேகித துரோகி தன்னை இங்கிலீஷ்காரர் மன்னித்து விடுவார்களென்று எண்ணித் தாண்டியா தோப்பியை வெள்ளையர்க்குக் காட்டிக்கொடுத்து விட்டான். தாண்டியா தோப்பியைத் தூக்கிலிட்டது மன்றி அவனைக் காட்டிக்கொடுத்த மான் சிங்கையும் வெள்ளையர்கள் தூக்கிலிட்டார்கள்.

தாய் நாட்டின் விடுதலைக்காக 1857-ஆம் ஆண்டில் சிப்பாய்கள் தொடுத்த போரில் பங்குகொண்ட தியாகி களுக்கும் அதில் உயிரிழந்த வீரர்களுக்கும் அஞ்சலி செய்வோம்.

வட நாட்டில் நடந்த இந்தச் சிப்பாய்ப் போருக்கும் முன்னால், அதே விடுதலை வேட்கையுடன் தமிழ் நாட்டில் வேலூரில் சிப்பாய்கள் வெள்ளையரை எதிர்த்து 1806-இல் நடத்திய போராட்டத்தையும் இப்போது நினைவு கூர்ந்து, அந்த இயக்கத்தில் உயிர் துறந்த வீரர் களுக்கும் அஞ்சலி செலுத்துவது பொருந்தும்.

வேலூரில் நடந்த கிளர்ச்சிக்கும் முன்னால் 1792-ல் "என்னுடைய பாளையத்தை நான் ஆள்வதற்கு உங்களுக்கு எதற்காக நான் கப்பங்கட்ட வேண்டும்?" என்று முதன் முதல் வெள்ளையரை எதிர்த்து நின்று வீரப்போர் புரிந்து, சதிகாரர்களின் துரோகச் செயலால் வெள்ளையரிடம் அகப்பட்டுத் தூக்கில் மாண்ட பாஞ்சாலங் குறிச்சி கட்டபொம்மனையும், அவனுடைய துணைவீரர்களான சின்ன மருது, பெரிய மருது, ஊமைத்துரை ஆகிய அவர்களையும் இப்போது நினைவுகூர்ந்து அஞ்சலி செலுத்த வேண்டும்.

1857-இல் வட நாட்டில் சிப்பாய்கள் நடத்திய விடுதலைப் போரை மட்டும் கருதிக் கணக்கிடப்பட்ட இந்த நூற்றாண்டு விழாவில் வேலூரில் நடந்த கிளர்ச்சியையும் கட்டபொம்மனுடைய வீரப்பிரதாபத்தையும் விரித்தெழுத இது தருணமன்று.

யாருக்கானாலும் நாம் இப்போது வணக்கம் செலுத்துவது, வெறும் மனிதர்களையும், அவர்கள் செய்த காரியங்களையும் கருதி அல்ல. அவர்களுக்கிருந்த சுதந்திர உணர்ச்சிக்கும், அதனால் அவர்கள் செய்த தியாகங்களுக்குமே வணக்கம் செலுத்துகின்றோம்.

1857-இல் சிப்பாய்கள் தொடுத்த விடுதலைப்போர் தோல்வி அடைந்தது என்றாலும், அப்போது இந்திய மக்களுக்குள் பரவிய சுதந்திரத் தாகம் மட்டும் தணியவில்லை. அந்தப் போரை அடக்குவதற்கு வெள்ளையர்கள் செய்த கொடுமைகள் இந்திய மக்களின் மனதில் இருந்து கொண்டே இருந்தது. நாளுக்கு நாள் வெள்ளையர் மீது மக்களுக்கு வெறுப்பு அதிகப்பட்டுக்கொண்டே வந்தது.



எப்படியாவது, எவ்வளவிலாவது, இந்தியா சுய ஆட்சி பெறவேண்டும் என்ற ஆர்வம் 'இந்திய காங்கிரஸ் மகா சபையைத் தோற்றுவித்தது. இந்தக் 'காங்கிரஸ்' வருஷா வருஷம் கூடி இந்தியாவுக்குச் சுய ஆட்சி வழங்க வேண்டுமென்று இங்கிலாந்துக்கு விண்ணப்பம் செய்து கொண்டே வந்தது. இங்கிலாந்து இந்த விண்ணப்பங்களைச் சட்டைசெய்யவில்லை.

இப்படிக் கெஞ்சிக் கேட்டுக்கொண் டிருப்பதில் பயனில்லை; எந்த முறையிலாவது எதிர்ப்புக் காட்டவேண்டுமென்று ஸ்ரீ பாலகங்காதர திலகர் ஒரு தீவிரக் கட்சியை உண்டாக்கி மிதவாத முறைகளைக் கண்டித்தார். "இந்தியா சுய ஆட்சி பெறவேண்டிய விஷயம் அன்னியர்களுடைய தயவைப் பொறுத்ததன்று; சுயராஜ்யம் எனது பிறப்புரிமை" என்ற உணர்ச்சியை ஊட்டினார். திலகருடைய கட்சிக்கு அமோகமான ஆதரவு கிடைத்தது. இளைஞர்கள் அனைவரும் அவரையே பின்பற்றினார்கள். வெள்ளையர் ஆட்சிக்குப் பலமான எதிர்ப்புக்கள் பகிரங்கமாகப் பேசப்பட்டன.

இதைப் போலவே அதி தீவிரமான சுதந்திர எண்ணங்களை, பாபு அரவிந்த கோஷ் வங்காளத்தில் தமது பத்திரிகை வாயிலாகப் பரப்பி வந்தார்.

வைசிராய் கர்ஸன் பிரபு 1906-இல் வங்காளத்தை இரண்டு மாகாணங்களாகப் பிரித்தபோது, மக்களுடைய சுதந்திர ஆவேசம் அளவு கடந்ததாகிவிட்டது. வங்காளத்தில் வெடிகுண்டுகள் வீசப்பட்டன. தமிழ் நாட்டில் கலெக்டர் ஆஷ் துரை சுட்டுக் கொல்லப்பட்டார். ஆங்கில அரசாங்கத்தினர் கடுமையான அடக்குமுறையை மேற்

கொண்டார்கள். லாலாலஜபதிராய் நாடு கடத்தப்பட்டார். திலகரின் மீது ராஜத்துவேஷக் குற்றம் சாட்டி ஆறு வருடச் சிறைத் தண்டனை அளிக்கப்பட்டது. சிதம்பரம் பிள்ளைக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது. அரவிந்த கோஷ் புதுச்சேரியில் அடைக்கலம் புகுந்தார். விடுதலை இயக்கத்துக்குப் பாட்டுகள்பாடிய பாரதிப் புலவனும் புதுச்சேரியைப் புகலிடமாகக் கொண்டான்.

**விடுதலை இயக்கமும் பாட்டும்:**

1914-ஆம் ஆண்டில் மகாத்மா காந்தி தென்னாப்பிரிக்காவை விட்டுவிட்டு இந்தியாவுக்கே வந்துவிட்டார்; இங்குள்ள நிலைமைகளை ஆராய்ந்தார். இந்தியாவின் விடுதலை இயக்கத்தை முற்றிலும் புதிய முறையில் தாமே நடத்தத் தீர்மானித்தார். வெள்ளைக்காரனை ஆயுத பலத்தால் வெளியேற்ற முடியாது என்பதற்காகமட்டு மன்றி, ஆயுத பலத்தைக் காட்டிலும் ஆன்மபலம் எவ்வளவு உயர்ந்தது என்பதையும் கொலைவழிப் போர்முறையைக் காட்டிலும் சத்திய-சாந்த-சன்மார்க்கப் போராட்டம் எவ்வளவு நன்மை பயக்கக்கூடியது என்பதையும் உலகத்திற்கு நிரூபிக்கவேண்டுமென்று உறுதிகொண்டு தென்னாப்பிரிக்காவில் நடத்திய சத்தியாக்கிரக முறையையே தொடரத் தீர்மானித்தார். சத்தியாக்கிரக ஒழுக்கத்தில் பயிற்சியளிக்கவென்று சபர்மதியில் ஆச்சிரமம் ஏற்படுத்தினார். இந்திய மக்களைச் சாத்வீகப் போருக்குத் தயாராக்கவென்றே ஆறுவருட காலம் இந்தியாவின் பல பாகங்களுக்கும் பிரயாணம்செய்து, தமது நோக்கத்தை விளக்கி வந்தார். 1920-ஆம் வருடத்தில் அவருடைய சாத்வீக ஒத்துழையாமைத் திட்டம் கல்கத்தாவில் கூடிய விசேட காங்கிரசில் நிறைவேறியது.



அதன்பின் மகாத்மா நடத்திய விடுதலை இயக்கத்துக்குத்தான் பாட்டுகள் பயன்பட்டன.

அதற்கு முன்னால் நடந்த ஆயுதப் போர்களான விடுதலை இயக்கங்களில் பாட்டுப் பாடுவதற்கு நேரமோ நிம்மதியோ இருந்ததில்லை. பிற்காலத்தில் தீவிரவாதிகள் காங்கிரசில் செல்வாக்குள்ளவர்களான சமயத்திலும் பாட்டுகள் பாடி இயக்கத்துக்குப் பலங்கூட்ட முடியவில்லை. ஏனென்றால் அடக்குமுறையும் போலீஸ் கண்காணிப்பும் அதிகமாக இருந்தது. தீவிரவாதம் காங்கிரசில் இடங்கொள்வதற்கு முன்னாலிருந்தே மகாகவி சுப்பிரமணிய பாரதியார் வெகு தீவிரமான தேசபக்திப் பாடல்களை இயற்றியிருந்தார். தேசபக்தியும், ஆண்மையும், ஆற்றலும் ஊட்டக்கூடிய அவருடைய பாடல்களைப் பகிரங்கமாகப் பொது ஜனங்கள் பாடி ஒரு இயக்கத்தை நடத்தக்கூடிய சூழ்நிலை அப்போது கிடைக்கவில்லை. அவர் இயற்றிய பாடல்களை, அவரே இரண்டொரு நண்பர்களுடன் சென்னைத்தெருக்களில்பஜனைபோல் பாடிக்கொண்டு போவார். சில சமயங்களில் 'மூர் மார்க்கெட்'டில் நின்று கொண்டு பாடுவார். அதைப் பலபேர் கேட்டு உணர்ச்சி கொள்வார்களென்றாலும் போலீஸ் கண்காணிப்பின் பயத்தினால் அந்தப் பாடலிலுள்ள கருத்துக்களுக்கும் தமக்கும் சம்பந்தமில்லாதவர்கள் போலத்தான் இருப்பார்கள். அந்தப் பாட்டுகளைப் பாரதியார் பாடுவதை ஒடுக்கவென்றே அவரைக் கைதியாக்க ஏற்பாடுகள் நடப்பதைப்பற்றி உளவறிந்த உத்தியோகஸ்தர்களே அவரைப் புதுச்சேரிக்குப் போய்விடச் செய்தார்கள். ஆதலால் பாரதியார் பாடிய அருமையான தேசபக்திப் பாடல்கள் அவர் காலத்தில் விடுதலை இயக்கத்திற்குப் பயன்படவில்லை.

ஆனால் அவர் பாடிய எல்லாப் பாடல்களும் மகாத்மா காந்தி ஆரம்பித்து, நமக்கு விடுதலை வாங்கித்தந்த இயக்கத்துக்கு மிகவும் பயன்பட்டன. காந்தியடிகள் ஆரம்பித்த சாத்வீக ஒத்துழையாமையில் வெடிகுண்டுக்கோ மறைந்து செய்யும் காரியங்களுக்கோ இடமிருக்காது. பகிரங்கமாகச் செய்யும் காரியங்களையும் எச்சரிக்கை இல்லாமல் செய்யமாட்டார். இந்த உண்மைகளை அவர் தென்னுப்பிரிக்காவில் நடத்திய ஒத்துழையாமையினுல் அறிந்திருந்த வெள்ளைக்காரர்கள், அவருடைய சாத்வீக இயக்கத்துக்கு அஞ்சவில்லை. காந்தி அடிகள் சத்தியாக்கிரகத் தொண்டர்களுக்கு விதித்த முதல் நிபந்தனை, சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் என்ன இம்சை செய்தாலும் எதிர்த்து இம்சை செய்யாமல் சகித்துக்கொள்ள வேண்டும்; அடுத்தது வெள்ளைக்காரர்களுடைய உயிருக்கும் உடைமைக்கும் உத்திரவாதிகளாக நடந்துகொள்ள வேண்டும் என்பன. காந்தியடிகள் பொய் சொல்லாப் புனிதர் என்பதை அறிந்த அரசாங்கத்தார் அவர் ஆரம்பித்த விடுதலை இயக்கம் தடையின்றி நடைபெற விட்டார்கள். ஆரம்பத்தில் போலீஸ் கண்காணிப்பும் இலேசாகத் தான் இருந்தது. அத்துடன் போலீஸ்காரர்கள் முதற்கொண்டு எல்லா இந்திய உத்யோகஸ்தர்களும் அந்த இயக்கத்திற்கு அனுதாபம் காட்டினுர்கள். அதனுல் ஒவ்வொரு ஊரிலும் சத்தியாக்கிரகத் தொண்டர்கள் ஏராளமாக இந்த இயக்கத்தில் சேர்ந்தார்கள்.

கூட்டங்கூட்டமாகத் தொண்டர்கள் பாரதியின் பாடல்களைப் பயமின்றிப் பாடிப் பிரசாரம் செய்தார்கள்.

"என்று தணியும்இந்த சுதந்திர தாகம்
என்று மடியுமெங்கள் அடிமையின் மோகம்



என்றெம தன்னைகை விலங்குகள் போகும்
என்றெம தின்னல்கள் தீர்ந்துபொய் யாகும்"

என்ற பாடல் ஒவ்வொரு சிறு கிராமத்திலும் ஓய்வின்றி முழங்கிற்று.

யார் எப்படித் துன்புறுத்தினுலும் சத்தியாக்கிரகிகள் அஞ்சமாட்டார்கள் என்ற உணர்ச்சியைக் காட்ட ஆங்கிலேயரைப் பார்த்துத் தேசபக்தன் சொல்லுவதாக:

"சதையைத் துண்டுதுண் டாக்கினும்
உன்எண்ணம் சாயுமோ!—ஜீவன்-ஓயுமோ!
இதயத் துள்ளே இலங்கும்
மகாபக்தி ஏகுமோ!—உயிர்—வேகுமோ
... ... ...
நாங்கள் முப்பது கோடி ஜனங்களும்
நாய்களோ! பன்றிச்—சேய்களோ
நீங்கள் மட்டும் மனிதர்களோ
இது நீதமோ! பிடி—வாதமோ!"

என்ற பாரதியின் பாடல் வரிசை மிகவும் பயன்பட்டது.

ஆயுத பலத்தைக் காட்டிலும் ஆன்ம பலமே சிறந்தது என்ற எண்ணத்தைப் பரப்புதற்கு

"கத்தி, வில். வாள், கதைகள்—எறி
கற்கள், சூலா யுதங்கள்
பித்தர்கள் தங்களுக்கே—இவை
பெட்புடை ஆயுதமாம்
சத்தியம் ஈகை அருள்—தவம்
சார்ந்த மனப்பெரியோர்
நித்தியமான உயர்—ஆன்ம
நேர்படை யேகொள்ளுவார்"

என்ற பாரதியின் பாடல் பாடப்பட்டு மக்களுக்கு விளக்கமும் சொல்லப்பட்டது.

காந்தியடிகளின் ஒத்துழையாமை இயக்கம் நடைமுறைக்கு வந்தபோது பாரதியார் உயிரோடிருக்கவில்லை. ஒத்துழையாமைத் தீர்மானம் காங்கிரசில் நிறைவேறியது 1920-ஆம் ஆண்டில். 1921-இல் பாரதியார் மறைந்துவிட்டார். ஆனாலும் காந்தியடிகளின் இயக்கத்தின் தத்துவத்தை உணர்ந்து, அதை மனப்பூர்வமாக வரவேற்றுக் காந்தி மகானை வாழ்த்திப் பஞ்சகம் பாடினார். அந்தப் பாடல்களால் காந்தியடிகளின் ஒத்துழையாமைத் திட்டத்தில் அடங்கியுள்ள கொள்கைதான் இந்தியாவுக்கு விடுதலையளிக்கக் கூடியதென்றும், அதுதான் உலகத்தில் பகைமைக் குணத்தை நீக்கி உலக சமாதானத்தைக் காக்கக் கூடியதென்றும் தீர்க்கதரிசனம் சொல்கின்றார். அந்தப் பாடல்களே காந்தியடிகளின் விடுதலை இயக்கத்துக்கு அளவற்ற ஆக்கம் அளித்தவை. அந்தப் பாட்டுக்களில் :

"வாழ்கநீ எம்மான் இந்த
வையத்து நாட்டி லெல்லாம்
தாழ்வுற்று வறுமை மிஞ்சி
விடுதலை தவறிக் கெட்டு
பாழ்பட்டு நிற்பதாமோர்
பாரத தேசம் தன்னை
வாழ்விக்க வந்தகாந்தி
மகாத்மா! நீ வாழ்க! வாழ்க!"

* * *

"தன்னுயிர் போலத் தனக்கு அழிவெண்ணும்
பிறனுயிர் தன்னையும் கணித்தல்
மன்னுயிர் எல்லாம் கடவுளின் வடிவம்
கடவுளின் மக்களென் றுணர்தல்
இன்னமெய்ஞ் ஞானத் துணிவினை மற்றாங்கு
இழிபடும் போர், கொலை, தண்டம்



பின்னியே கிடக்கும் அரசியல் அதனில்
பிணைத்திடத் துணிந்தனை பெருமான்"
"பெருங்கொலை வழியாம் போர்வழி இகழ்ந்தாய்
அதனினும் பயன் பெரிதுடைத்தாம்
அருங்கலை வாணர் தொண்டர்கள் போற்றும்
அறவழி ஒன்றுநீ கண்டாய்
நெருங்கிய பயன் சேர் ஒத்துழையாமை
நெறியினால் இந்தியாவிற்கு
வருங்கதி கண்டு பகைத்திறம் மறந்து
வையகம் வாழ்க நல் அறத்தே"

என்ற பாடல்கள் காந்தி மகான் நடத்திய விடுதலை இயக்கத்தின் உயர்ந்த நோக்கங்களை மக்களுக்கு விளக்கிக் காட்ட மிகவும் பயன்பட்டன.

சத்தியாக்கிரகிகள் எந்தவிதமான தியாகத்துக்கும் பின்வாங்கமாட்டார்கள் என்ற உறுதியைப் புகட்டப் பாரதியார் மாய்கையைப் பழித்துப் பாடிய பாட்டுக்களைப் பயன்படுத்திக்கொண்டு, ஆங்கில ஆதிக்கியத்தை மாயையாக வைத்துக்கொண்டு

"என்னைக் கெடுப்பதற் கெண்ணங் கொண்டாய்
கெட்ட மாயையே! - நான்
உன்னைக் கெடுப்ப துறுதியென்றே உணர் மாயையே!
சாகத் துணிந்திடில் சமுத்திரம் எம்மட்டு
மாயையே! - இந்தத்
தேகம்பொய் என்றெண்ணும் தீரரை
என்செய்வாய் மாயையே!'

என்ற பாடல் வரிசையைப் பாடிக்கொண்டு ஊர்வலம் செய்வது வழக்கமாக்கப்பட்டது. விடுதலை இயக்கத்தில் கலந்துகொள்ளப் பொதுமக்களிட மிருந்த அச்சத்தைப் போக்கவும், சத்தியாக்கிரகத் தொண்டர்களுடைய ஆர்

வத்தை அதிகப்படுத்தவும் பாரதியின் பாடல்கள் மிகவும் பயன்பட்டன.

காந்தியடிகளின் இயக்கம் தீவிரம் அடைந்து செயல் புரியத் தொடங்கியபோது, சமயத்துக்கேற்ற புதுப் புதுப் பாடல்களை இயற்றித்தர பாரதியார் நம்மிடையே இல்லாது போனார். ஆனால் பாரதியின் பாணியைப் பின்பற்றி நான் அப்போதைக்கப்போது இயற்றித் தந்த புதுப்புதுப் பாடல்கள் விடுதலை இயக்கத்துக்கு மிகவும் உதவியாக இருந்தன.

சத்தியாக்கிரகத் தொண்டர்கள் அப்பாடல்களை உடனுக்குடன் பாடம்செய்து கொண்டு பிரசாரம் செய்ய தார்கள். நாட்டுப்பற்றை ஊக்குவதற்காக :

''இந்திய நாடிது என்னுடை நாடு
என்று தினந்தினம் நீயதைப் பாடு
சொந்தமில் லாதவர் வந்தவர் ஆள
தூங்கிக் கிடந்தது போனது மான
வந்தவர் போனவர் யாரையும் நம்பி
வாடின காலங்கள் ஓடின தம்பி
இந்தத் தினம்முதல் 'இந்திய நாடு
என்னுடை நாடெ'ன்ற எண்ணத்தைக் கூடு''

* * *

''முத்தமிழ் நாடெந்தன் முன்னையர் நாடு
முற்றிலும் சொந்தம் எனக்'கெனப் பாடு
சற்றும் உரிமையில் லாதவர் ஆள
சரிசரி யென்றது போனது மாள
பக்தியில் அன்பினில் பணிபல செய்வோம்
பயப்பட்டு யாருக்கும் பணிந்திடல் செய்யோம்
சத்தியம் சாந்தத்தில் முற்றிலும் நின்றே
சடுதியில் விடுதலை அடைவது நன்றாம்''



என்ற பாடல்களும், காந்தியடிகளின் சாத்விகப் போரின் பெருமையைப் பிரசாரம் செய்ய :

''சாந்தி சாந்தி சாந்தி யென்று
சங்கு கொண்டு ஊதுவோம்
சோர்ந்தி ருக்கும் உலகி னுக்குச்
சுக மெடுத்து ஓதுவோம்
மாந்த ருக்குள் கோப தாப
வாது சூது மாறவே
காந்தி சொல்லும் மார்க்க மன்றி
கதிந மக்கு வேறிலை''

* * *

''கொன்று வீழ்த்தல் வீர மென்னும்
கொச்சை யான கொள்கையை
இன்று தொட்டு மாற்றி விட்டு
உண்மை வீரம் கொள்ளுவோம்
தொன்று தொட்டுக் கருணை கற்ற
பரத நாட்டில் தோன்றினோம்
நன்று இந்தச் சேவைக் கேது
வேறு நம்மைப் போன்றவர்''

* * *

''தமிழ ருக்குக் கருணை எண்ணம்
தாயின் பாலில் தந்தது
குமிழி யொத்த உயிரை நல்ல
கொள்கைக் கீய முந்திடும்
அமிழ்த மொத்த காந்தி மார்க்கம்
தமிழ கத்தின் செல்வமாம்
நமது சேவை அதனை ஏந்தி
நாட்டில் எங்கும் சொல்வதாம்''

என்ற பாடல் வரிசையும் எங்கெங்கும் தொண்டர்களால் பாடப்பட்டது. ஒத்துழையாமைத் திட்டத்தின் பல துறை களான கதரியக்கம், கள்ளுக்கடை மறியல், தீண்டாமை

ஒழித்தல் முதலியவற்றிற்கும் தனித்தனியே பாடல்கள் இயற்றப்பட்டுப் பிரசாரம் செய்யப்பட்டது. கதரியக்கத்துக்கு:

பல்லவி

"ஆடுராட்டே சுழன் றாடுராட்டே

அனுபல்லவி

சுழன்று சுழன்று சுழன் றாடுராட்டே-இனி
சுயராஜ்யம் வந்ததென்று ஆடுராட்டே

சரணங்கள்

அன்னியர்கள் நூல்கொடுத்து ஆடைகொடுத்து-நம்
அங்கத்தை மூடுகின்ற பங்கமொழியும்
கன்னியர்கள் நூற்கப்பல காளைகள் நெய்ய-நாம்
காத்துக் கொள்வோம் மானம்என்று... (ஆடு)
சாந்தி பெருகுமென்று ஆடுராட்டே-மனச்
சாட்சி விளங்குமென்று ஆடுராட்டே
காந்தி துலங்குமென்று ஆடுராட்டே-அந்தக்
காட்சி சுதந்திரமென்றாடுராட்டே (ஆடு)"

என்ற பாட்டு வரிசைகளும், கள்ளுக்கடை மறியலுக்காக:

"குடிப்ப தைத்த டுப்பதே கோடி கோடி புண்ணியம்
அடிப்பி னும்பொ றுத்துநாம் அன்பு கொண்டு வெல்லுவோம்

* * *

மக்க ளைவ தைத்திடும் மனைவி யைஉ தைத்திடும்
துக்க மான கள்ளினைத் தொலைப்பதேதுரைத்தனம்

* * *

கஞ்சி யின்றி மனைவி மக்கள் காத்தி ருக்க வீட்டிலே
வஞ்ச மாகக் கூலி முற்றும் வழிப்பறிக்கும் கள்ளினைக் (குடி)



குற்ற மற்ற பேர்களும் கொலைஞ ராவர் கள்ளினால்
கத்தி குத்து சண்டை வேண கள்ளி னால்விளைந்ததே (குடி)

குற்ற மென்று யாருமே கூறு மிந்தக் கள்ளினை
விற்க விட்டுத் தீமையை விதைப்ப தென்ன விந்தையே! (குடி)

என்ற பாடல் வரிசையும், தீண்டாமையை ஒழிப்பதற்காக:

"தீண்டாமை என்கின்ற தீய வழக்கம்
தீரத் தொலைந்திடச் செய்திடுவோம்
ஆண்டவன் பொதுவென்று நம்பின யாரும்
அந்தப் பழியை அகற்றிட வாரும் (தீண்)
இந்த வழக்கம் நாளுக்கு நாளாய்
இந்து மதத்தினை வெட்டுது வாளாய்
நிந்தை மிகுந்து அழிந்திடு முன்னே
நீக்கிட யாரும் எழுந்திடும் இன்னே (தீண்)"

என்ற பாடல் வரிசையும்.

"ஓட்டடா! ஓட்டடா! நாட்டை விட்டு ஓட்டடா
தீட்டடா மனிதருக்குள் தீண்டேல் என்ற தீமையை"

* * *

"தொத்து நோய்கள் மெத்தவும்
தொடர்ந்து விட்ட பேரையும்
தொட்டுக் கிட்டிச் சொஸ்தமாக்கல்
தர்ம மென்று சொல்லுவார்
சுத்த மேனும் ஜாதியால்
தொடப் படாது என்றிடில்
தொத்து நோயைக் காட்டிலும்
கொடிய ரென்று சொல்வதோ? (ஓட்)
நாய்க்கு ரங்கு பூனையை
நத்தி முத்த மிடுகிறோம்
நரக லுண்ணும் பன்றியும்
நம்மைத் தீண்ட ஒப்புவோம்

ஆயும் ஆறு அறிவுடை
ஆன்ம ஞான மனிதனை
அருகிலேவ ரப்பொ ருமை
அறிவி லேபொ ருந்துமோ ?
செடிம ரங்கள் கொடிகளும்
ஜீவ ரென்ற உண்மையை
ஜெகம றிந்து கொள்ளு முன்பு
செய்த திந்த நாடடா!
முடிவ றிந்த உண்மை ஞானம்
முற்றி னின்ற நாட்டிலே
மூட ரும்சிரிக்கு மிந்த
முறைமை லாவ மூக்கமேன் ?" (ஓட்)

என்ற பாடல்கள் வரிசையும் பயன்பட்டன.

காந்தியடிகளின் இயக்கத்துக்குச் சிகரமாக விளங்கியது, அவருடைய சட்ட மறுப்பு இயக்கம். சட்ட மறுப்பு இயக்கத்தை ஆரம்பிக்குமுன் அதற்குத்தொண்டர்களையும் பொதுமக்களையும் பண்படுத்த வென்றே அவருடைய 'எங்இந்தியா' பத்திரிகையிலும் பிரசங்கங்களிலும் அந்தச் சட்ட மறுப்புக்கான கட்டுதிட்டங்களையும், அதன் நுணுக்கங்களையும் சூசகமாக எழுதிக் கொண்டும் சொல்லிக் கொண்டும் வந்தார். எந்தச் சட்டத்தை மீறலாம் என்று ஆலோசனை செய்துகொண்டிருந்ததையும் அப்போதைக்கப்போது எழுதிக்கொண்டு வந்தார். கடைசியில் உப்புச் சட்டத்தை மீறப் போவதாகவும் முன்னெச்சரிக்கை விடுத்திருந்தார். எங்கே, எப்போது உப்புச் சட்டத்தை மீறப்போகிறார் என்பதை அவர் தெரிவிக்கும் முன்னால், ஒரு பெரிய சாத்வீகப்போர் நடக்கப்போகிறது என்று நான் ஊகமாகப் பாடிப் பத்திரிகைகளிலெல்லாம் வெளியிடப்பட்ட அடியில் வரும் பாட்டுக்கள் தாம் தமிழ்நாட்டில் சட்ட மறுப்பு இயக்கத்துக்கு ஏராளமான தொண்டர்



களைத் திரட்டியது. அதுமட்டுமன்றித் தமிழ்நாட்டில் சட்டமறுப்பு இயக்கம், மற்ற இடங்களில் நடந்ததைவிட மிகவும் வெற்றிகரமாக நடந்தது என்ற புகழ் கிடைப்பதற்கும் இந்தப் பாட்டு மிகவும் காரணமாக இருந்தது என்பது மிகையன்று. அந்தப் பாட்டு.

"கத்தி யின்றி ரத்த மின்றி
யுத்தமொன்று வருகுது
சத்தி யத்தின் நித்தி யத்தை
நம்பும் யாரும் சேருவீர் (கத்)
ஒண்டி அண்டிக் குண்டு விட்டு
உயிர் பறிப்ப தின்றியே
மண்ட லத்தில் கண்டி லாத
சண்டை யொன்று புதுமையே (கத்)
குதிரை யில்லை யானை யில்லை
கொல்லும் ஆசை யில்லையே
எதிரியென்று யாரு மில்லை
எற்றும் ஆசை யில்லதாய் (கத்)
கோப மில்லை தாப மில்லை
சாபங் கூறல் இல்லையே
பாப மான செய்கை யொன்றும்
பண்ணு மாசை யின்றியே (கத்)
கண்ட தில்லை கேட்ட தில்லை
சண்டை யிந்த மாதிரி
பண்டு செய்த புண்ணியம்
பலித்த தேநாம் பார்த்திட (கத்)
காந்தி யென்ற சாந்த மூர்த்தி
தேர்ந்து காட்டும் செந்நெறி
மாந்த ருக்குள் தீமை குன்ற
வாய்ந்த தெய்வ மார்க்கமே" (கத்)

இந்தப் பாட்டு மகாத்மா காந்தி உப்புச் சத்தியாக்கிரகம் நடத்தப் பொறுக்கியெடுத்த தொண்டர்களுடன் தண்டி என்ற கடற்கரைக் கிராமத்துக்குப் புறப்படுவதற்கு முன், சுமார் ஒரு மாதத்துக்கு முன்னுல் பாடப்பட்டுப் பத்திரிகைகளில் வெளி வந்தது. அப்போது நடத்தப் பட்டுவந்த 'சுதந்திரச் சங்கு' என்ற காலணு பத்திரிகையின் ஆசிரியர்களான சங்கு கணேசன், சங்கு சுப்பிரமணியம் என்பவர்கள் தமது சொந்தப் பொறுப்பில் இந்தப் பாட்டைத் தனித் துண்டுப் பிரசுரமாக இலட்சக் கணக்கில் பிரதிகள் அச்சடித்துத் தமிழ்நாட்டின் எல்லா ஊர்களிலும் உள்ள சத்தியாக்கிரகக் கமிட்டிகளுக்கு விநியோகம் செய்தார்கள். அங்கங்கே இருந்த தொண்டர்கள் அனைவரும் அதனை மனப்பாடம் செய்துகொண்டார்கள். காந்தியடிகள் தண்டிக்குப் புறப்படும்போதே தமிழ்நாட்டில் இந்தப் பாட்டு முழங்கலாயிற்று.

தண்டி உப்புச் சத்தியாக்கிரகத்தை ஒட்டித் திரு. சக்ரவர்த்தி இராஜகோபாலாச்சாரியர், திருச்சியில் டாக்டர் ராஜன் அவர்களுடைய பங்களாவிலிருந்து வேதாரணியத்துக்கு உப்பள்ளப் புறப்பட்டார். அந்த வழிநடைக்கென்று சுமார் நூறு தொண்டர்கள் பொறுக்கியெடுக்கப்பட்டிருந்தார்கள். அதிகாலையில் வழிநடை ஆரம்பிக்கும்போது தொண்டர்கள் 'கத்தியின்றி ரத்தமின்றி' என்ற பாட்டைக் கோஷ்டியாகப் பாடினார்கள். அந்தப் பாட்டை அப்போதுதான் முதன் முதலாகப்பாடக் கேட்ட ராஜாஜி அந்தப் பாட்டிலுள்ள கருத்துக்களை மிகவும் வியந்து மகிழ்ந்து, அந்த வழிநடை முழுவதிலும் அதையே வழிநடைப் பாட்டாகப் பாடும்படிப் பணித்தார்.



அதன்பிறகு நெடுநாள் வரைக்கும் இந்தப்பாட்டு, தமிழ்நாட்டில் முழங்கிக் கொண்டிருந்தது.

இப்படியாக விடுதலை இயக்கத்துக்குப் பாட்டுகள் மிகவும் பயன்பட்டன. தமிழ் நாட்டைப் பொறுத்தமட்டில் இயக்கத்துக்கு மிகவும் வலிமைவாய்ந்த பிரசாரம் பாட்டுகள்தாம் என்பது பொருந்தும்.

# திருக்குறளே நம் தேசீயப் பாடல்

'தேசீயப்பாடல்கள்' என்ற பொருள் பற்றி இந்தப் பொன்விழா மலருக்கு ஒரு கட்டுரை எழுதவேண்டு மென்று தலைவர் திரு. பி. டி. ராசன் அவர்கள் என்னைப் பணித்துள்ளார்கள்.

நான் காந்தியடிகள் நடத்திய விடுதலைப் போராட்டத்தில் கலந்துகொண்டு, அதற்குப் பயன்படக்கூடிய பல தேசாபிமானப் பாடல்களை இயற்றி, அதனால் 'தேசீயக் கவிஞன்' என்று பெயர் பெற்றதால், என்னைத் 'தேசீயப் பாடல்கள்' என்பதைப் பற்றிக் கட்டுரை எழுதப் பணித்துள்ளார்கள் என்பது தெரிகிறது.

'தேசீயப் பாடல்' என்பது அன்னிய ஆட்சியினின்றும் விடுதலை பெறுவதற்கென்று தேச மக்களின் நாட்டுப் பற்றைத் தூண்டிவிடுவதைமட்டும் குறியாகக் கொண்டது. போர் வீரத்தைப் புகட்டுவதே அதன் நோக்கம். அந்தப் போர், ஆயுதப் போராகவும் இருக்கலாம், சாத்விகப் போராகவும் இருக்கலாம். எப்படியும் எதிர்ப்பு மனப்பான்மையை உண்டாக்கி, அந்த எதிர்ப்பினால் வரக்கூடிய துன்பங்களை ஏற்றுக்கொள்ள மக்களைத் தயாராக்குவதே 'தேசீயப் பாடல்களின்' குறிக்கோள்.

இப்படிப்பட்ட தேசீயப் பாடல்கள் போரோ அல்லது போராட்டமோ நடக்கின்ற காலங்களில் மட்டுந்தான்



பயன்படும். அவை எவ்வளவு அழகான கவிகளாக அமைந்திருந்தாலும் சமுதாயத்துக்குச் சாசுவதமான இலக்கியங்களாக முடியா.

ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையில், சிறிது காலத்துக்கே பயன்பட்டுப்பின் பயனற்றவை யாகிவிடுகின்ற தேசீயப் பாடல்களை விளக்கிக் கொண்டிருப்பதைவிட, மனித வர்க்கத்துக்கே என்றென்றும் பயன்படக்கூடிய தேசீயப் பாடல்களுக்கு ஊற்றுக்கண்ணாகிய திருக்குறள் பாடல்களைப்பற்றி எழுதுவது, தமிழுக்கு மறுமலர்ச்சி நடுகின்ற 'தமிழ்ச் சங்கப் பொன்விழா' மலருக்குப் பொருத்தமாகும்.

ஆம்; திருக்குறளே தமிழ்மக்களின் தேசீயப் பாடல். எந்த மொழி பேசும் எவருக்கும் எப்போதும் வாழ்க்கையின் எல்லாத் துறைகளுக்கும் மாற்றுச் சொல்லமுடியாத நல்லறிவைப் புகட்டும் திருக்குறள் தமிழ் மொழியில் இருப்பது தமிழின் தவமேயாகும். அப்படிப்பட்ட திருக்குறளைத் தமிழர்களே சரியாகப் புரிந்து கொள்ளவில்லையானால், மற்றவர்கள் அதன் பெருமையை எப்படி அறிவார்கள்?

நெடுங்காலமாகத் திருக்குறளிலுள்ள பல குறள்களுக்குத் திருவள்ளுவருடைய கருத்துக்கு முற்றிலும் விரோதமான உரைகளே போதிக்கப்பட்டு வருகின்றன. மேலும் ஒவ்வொருவரும் தம் மனம்போனபடி யெல்லாம் திரித்து உரை கூறுகின்றார். சிலர் மிகவும் குதர்க்கமாகப் பதங்களைப் பிரிக்கிறார்கள். எப்படிப் போலவென்றால், ஒருகுடிகாரன் 'ஊக்கமது கைவிடேல்' என்ற முதுரையை 'ஊக்கம்-ஊக்கம் உண்டாகக்கூடிய, மது-மதுபானத்தை,

கைவிடேல்-விட்டுவிடக்கூடாது' என்று பிரித்துப்பொருள் சொன்னதுபோல்.

திருகுறளுக்குத் திருவள்ளுவர் கருதிய உரைகளைக் கண்டறிந்து அவற்றை மக்களுக்குப் போதிப்பதே தமிழுக்கு மறுமலர்ச்சி உண்டாக்க நல்ல மார்க்கம். ஆதலால் திருக்குறளே நம் தேசியப் பாடல்களாகத் தெருவெல்லாம் முழங்க வேண்டும்.

திருக்குறளுக்குக் கிடைத்த பழைய உரைகளுள் பரிமேலழகர் உரைதான் மிகவும் சிறந்ததாகக் கொள்ளப் பட்டது. ஆனால் அவரும் பல இடங்களில் திருவள்ளுவர் கருத்துக்குச் சிறிதும் ஒவ்வாத உரைகளைத் தந்து விட்டார்.

பரிமேலழகர் நாம் வணங்கவேண்டிய மிகவும் பெரியவர். அவர் தோன்றியிராவிட்டால் உலக இலக்கியங்களுக்குள் தலைசிறந்த இலக்கியமாகிய திருக்குறள் இந்த வடிவத்தில் நமக்குக் கிடைத்திருக்காது. மூலக் குறள்களின் வைப்பு முறைகளும் தடுமாறிச் சிதைந்து கிடந்த திருக்குறளைச் செப்பனிட்டுத் தந்த அழியாப்புகழ் அவருக்கே உரியது . ஆனாலும் என்ன? அவரும் அவருக்கு முன்னுவிருந்தவர்கள் இயற்றியிருந்த உரைகளைப் பின்பற்றி, உரைகளைச் சொந்தமாக ஆராயாமல், தவறான உரைகளைத் தந்துவிட்டார் என்பதை எடுத்துச் சொல்லக் கூடாதா? 'நெற்றிக் கண் திறந்தாலும் குற்றம் குற்றம்தான்' என்ற பரம்பரையில் வந்த நாம் இதை ஒத்துக்கொண்டால் என்ன? பரிமேலழகர் மிகப்பெரிய உரையாசிரியர்தாம். ஆனால் திருக்குறள் அவரைவிட மிகப்பெரிய விஷயம் அல்லவா? பரிமேலழகர்மீது நமக்



குள்ள பாசத்தால் திருக்குறளுக்குத் தீங்குவரச் செய்யலாமா?

திருக்குறளுக்கு உரை சொல்லும்போது, திருவள்ளுவர் எதைக் கருதியிருக்கிறார் என்பதை ஆராய்ந்தறிந்து சொல்ல வேண்டும். திருவள்ளுவர் கருத்தை அறிந்து கொள்ள முடியாமல் சொந்த யுக்தியைக்கொண்டு உரை செய்துவிட்டாலும், திருவள்ளுவர் எதைச் சொல்லமாட்டாரோ அதைச் சொல்லிவிடாமலாவது உரை காண வேண்டும். பரிமேலழகர் உரையில் அநேக இடங்களில் திருவள்ளுவருடைய கருத்தை ஆராயாமல் அவர் எண்ணாத உரைகள் எழுதப்பட்டிருக்கின்றன என்பது மட்டுமன்றிச் சில இடங்களில் திருவள்ளுவர் எதைச் சொல்லவே மாட்டாரோ அது உரையாகச் சொல்லப்பட்டிருக்கிறது. திருவள்ளுவர் எதைச் சொல்லமாட்டார் என்பது உண்மையை நாடுகின்ற எல்லோருக்கும் எளிதிற் புலனாகும். திருக்குறள் முழுவதிலும் மிகவும் உச்சமான அறவொழுக்கம் தான் சொல்லப்படுகிறது. அற ஒழுக்கத்துக்கு மாறான எதையும் திருவள்ளுவர் சொல்லமாட்டார் என்ற ஒன்றே திருவள்ளுவர் எதைச்சொல்லியிருக்க மாட்டார் என்ற உணர்ச்சியை உண்டாக்கும்.

திருவள்ளுவர் எதைச் சொல்லியிருக்கவே மாட்டார் என்று நாம் நிச்சயமாகக் கூறமுடியுமோ அதையே பரிமேலழகர் திருக்குறளுக்கு உரையாகச் சொல்லியிருப்பதை நிரூபிக்க ஓர் உதாரணத்தை மட்டும் ஆராய்வோம்:

உலகத்தில் மனிதனுக்கு மனிதன் என்ற முறையிலாவது அரசனுக்கு அரசன் என்ற முறையிலாவது ஏதேனும் விவகாரம் ஏற்பட்டால், முதலில் அந்த விவகாரத்

தைச் சமாதான முறையிலே தீர்த்துக்கொள்ள முயல வேண்டும். அது முடியாமற்போனால் சிறிது விட்டுக் கொடுத்துத் 'தானம்' என்ற முறையிலாவது தீர்த்துக் கொள்ள முயலவேண்டும். அதுவும் முடியாவிட்டால் 'பேதம்' என்ற முறையில் 'எதிரிக்குச் சொல்லக்கூடியவர் களைக் கொண்டு அவன் மனத்தைப் பேதித்து இளகும் படி செய்ய முயலவேண்டும். அதுவும் முடியாது என்று தீர்மானமாகத் தெரிந்துவிட்ட பிறகுதான் 'தண்டம்' என்ற போர்முறையில் இறங்க வேண்டும். இதைத்தான் சாம, தான, பேத, தண்டம் என்று சொல்லுவது. இன் றளவும் உலகத்தில் தோன்றிய எல்லா இலக்கியங்க ளும், அறிஞர்களும் போதித்து வந்திருக்கிற செயல் முறைக்கான நல்லறிவு இதுதான். இதற்கு முற்றிலும் விரோதமாக, முடியுமானால் முதலில் உடனே போர் தொடுத்துத் தண்டோபாயத்தால் காரியத்தை முடித்துக் கொள்ளவேண்டும். அப்படிப் போர் செய்ய முடியா விட்டால் மட்டும் பேதம், தானம், சாமம் என்ற மற்ற மூன்று உபாயங்களில் ஒன்றால் காரியத்தை முடித்துக் கொள்ள வேண்டும் என்று திருவள்ளுவர் சொல்லி யிருப்பாரா? சொல்லியிருக்கவே மாட்டார் என்றுதான் திருக்குறளைச் சிறிதேனும் அறிந்த யாரும் சொல்லுவார் கள். ஆனால் திருவள்ளுவர் இப்படியே சொல்லியிருப்ப தாகப் பரிமேலழகர் சொல்லுகின்றார். இதுவும் மிக்க அசம்பாவிதமாகச் சொல்லத்தகாத இடத்தில் சொல்லு கின்றார்.

அது எங்கே சொல்லப்படுகிறது, எப்படிச் சொல் லப்படுகிறது என்பதைப் பாருங்கள்; காரியம் செய்ய வேண்டிய முறையைப் பற்றியனவாக 'வினைத்தூய்மை', 'வினைத்திட்பம்', 'வினை செயல் வகை' என்று மூன்று அதிகாரங்கள் வகுக்கப்பட்டிருக்கின்றன. 'வினைத் தூய்மை' என்ற அதிகாரம் ஒவ்வொரு மனிதனும் அவன் செய்யப் போகிற காரியம் குற்றமற்றதா என்பதை முதலில் ஆராய்ந்து அறிந்து கொண்ட பின்பே அதைச் செய்ய முயலவேண்டும் என்ற அறிவைப் புகட்டுவது. எவ்வளவு இலாபமுண்டாக்கக் கூடியதானாலும் பழி பாவங்களான எதையும் செய்யக்கூடாது என்பது இவ் வதிகாரத்தின் போதனை. அப்படி ஆராய்ந்து பார்த்துத் தூயவினைதான் என்று கண்டபின் அதைச் செய்துமுடிக்க வேண்டிய காரிய வைராக்கியத்தை மேற்கொள்ள வேண்டும் என்பதைப் புகட்டுவது 'வினைத்திட்பம்' என்ற அடுத்த அதிகாரம். அதன் பிறகு செய்யப் புகுந்த காரி யத்தை எப்பொழுது செய்ய வேண்டும், எப்படிச் செய்ய வேண்டும், எங்கே செய்யவேண்டும் என்பன போன்ற விவரங்களைப் புகட்டுவது 'வினைசெயல் வகை' என்ற அதிகாரம். இந்த 'வினைசெயல்வகை என்ற அதிகாரத்திலுள்ள மூன்றாவது குறளுக்கு உரை சொல் லும்போதுதான் பரிமேலழகர், எதைத் திருவள்ளுவர் சொல்ல வேமாட்டாரோ அதைச் சொன்னதாகச் சொல்லுகிறார். இந்த அதிகாரத்தின் முதற்குறள்;

> சூழ்ச்சி முடிவு துணிவெய்தல் அத்துணிவு
> தாழ்ச்சியுள் தங்குதல் தீது

என்பது. இதன் பொருள்: ஆலோசனை செய்தவன் முடிவு ஒரு காரியத்தை, அது செய்ய வேண்டியதுதான் என்று தீர்மானிப்பதுதான். செய்யவேண்டியது என்று தீர்மானித்துவிட்டால் அதன்பிறகு அதைத் தாமதிக்காமல் செய்துவிடவேண்டும். தாமதிப்பது கெடுதி—என்பது.

ஆனல் செய்ய வேண்டுமென்று தீர்மானித்த காரி யத்தைத் தாமதிக்காமல் செய்யவேண்டும் என்பதற்காக எல்லாக் காரியத்திலும் ஒரே மாதிரியான அவசரம் காட்டி விடக்கூடாது. ஏனென்ருல், செயயவேண்டியது என்று தீர்மானிக்கிற காரியங்களுள் பொறுத்து நிதானமாகச் செய்யவேண்டிய காரியங்களும் உண்டு. அதனல்:

> தூங்குக தூங்கிச் செயற்பால தூங்கற்க
> தூங்காது செய்யும் வினை

என்று அடுத்த குறளில் சொங்லுகின்ருர். பொறுத்து நிதானமாகச் செய்யவேண்டிய காரியங்களில் அவசரம் கூடாது, உடனே செய்யவேண்டிய காரியங்களில் தாமதம் கூடாது—என்பது.

என்ருலும், பொறுத்து நிதானமாகச் செய்யவேண் டும் என்று எண்ணிய காரியத்துக்கும் வாய்ப்பு நேர்ந்து விட்டால் அதையும் உடனே செய்து விடுவது நல்லது. வாய்ப்பு நேர்ந்தால்தான். வாய்ப்பு நேராவிட்டால் அதற்குரிய தருணம் வருகிறவரையிலும் பொறுத்திருந்தே செய்யவேண்டு மென்று அடுத்த குறளில் சொல்லு கின்ருர்:

> ஒல்லும்வா யெல்லாம் வினைநன்றே ஒல்லாக்கால்
> செல்லும்வாய் நோக்கிச் செயல்.

இதன் பொருள்: வாய்ப்புக் கிடைத்தபோ தெல்லாம் காரியத்தைச் செய்துவிடுவது நல்லதுதான். வாய்ப்புக் கிடைக்காவிட்டால் காத்திருந்து வாய்ப்பான தருணத்தில் செய்யவேண்டும்—என்பதே.

மேற்சொன்ன மூன்று குறள்களுக்கும் திருவள் ளுவர் கருதிய பொருள்கள் மேலே சொல்லப்பட்டவைக



ளாகத்தான் இருக்க முடியும். விதண்டாவாதமாகக் குதர்க்கம் செய்தாலன்றி இந்தக் குறள்களுக்கு வேறு பொருள்சொல்ல மனம் வராது. இந்த மூன்று குறள்க ளுள் முதலிரண்டு குறள்களுக்கும் சரியாக உரை சொன்ன பரிமேலழகர் மூன்ருவது குறளில் 'வினை' என்ற சொல்லுக்குப் 'போர்' என்று பொருள் செய்து, முன் சொன்னபடி மிகவும் அசம்பாவிதமாகத் திருவள்ளு வர் எதைச் சொல்லி யிருக்கவே மாட்டாரோ அதைச் சொல்லி யிருப்பதாகக் கூறுகின்ருர்.

இந்தக் குறளுக்குப் பரிமேலழகர் தந்துள்ள உரை யைப் பாருங்கள் :

**பதஉரை:** ஒல்லும் வாய் எல்லாம் வினை நன்று-வினை செய்யுங்கால் இயலுமிடத் தெல்லாம் போராற் செய்தல் நன்று: ஒல்லாக்கால் செல்லும் வாய்நோக்கிச் செயல்-அஃதியையாவிடத்து ஏனை மூன்று உபாயத்துள் ளும் அது முடிவதோர் உபாயம் நோக்கிச் செய்க—என்பது.

இதற்கு மேலும் அவர் தரும் விசேட விளக்க உரை யாவது: 'இயலுமிடம்—பகையிற்ருன் வலியனுய காலம். அக்காலத்துத் தண்டமே நன்றென்ருர், அஞ்சுவது அதற்கே யாதலின். இயலாவிடம்—ஒத்த காலமும் மெலிய காலமும். அவ்விரண்டு காலத்தும் சாம, பேத, தானங்களுள் அது முடியும் உபாயத்தாற் செய்கவென் ருர். அவை ஒன்றற்கொன்று வேறுபாடுடைய வேனும் உடம்படுத்தல் பயத்தால் தம்முள் ஒக்குமாகலின். இத ஞல் வலியான், ஒப்பான், மெலியானென நிலை மூவ

கைத் தென்பதூஉம், அவற்றுள் வலியது சிறப்பும் கூறப் பட்டன'—என்பது.

இந்தப் பதவுரையும் விளக்க உரையும் சேர்ந்து என்ன சொல்லுகின்றனவென்றால்: 'உன்னால் இயலும் போதெல்லாம் முதலில் தண்டோபாயத்தைக் கொண்டே உன் காரியங்களைச் சாதித்துக்கொள்வது நல்லது. ஏனென்றால். அதற்குத்தான் யாரும் அஞ்சுவார்கள். அப்படிப் போர் புரிந்து உன் பகைவர்களை, வெல்லமுடி யாதபடி நீ பலவீனனாக இருக்கிற சமயங்களில் மட்டும் மற்ற மூன்று உபாயங்களான சாம, பேத, தானங்களில் ஏதாவது ஒன்றன் மூலம் உன் காரியத்தைச் சாதித்துக் கொள்ளுக' என்ற உபதேசத்தைத்தான்.

இதைத் திருவள்ளுவர் சொல்லியிருப்பதாகப் பரிமே லழகர் சொல்லுகின்றார். திருவள்ளுவர் சொல்லியிருப் பாரா? வடமொழியோ தென்மொழியோ அல்லது பிற மொழிகளோ, எந்த மொழியிலுள்ள எந்த நிலைமைக் காவது எந்த நியாயத்துக்காவது இது பொருந்துமா? எவ் வளவு பலமிருந்தாலும் மானமுடைய ஒருவன் எண்ணத் தகுந்த செயல்முறையா இது? பலம் அதிகரிக்க அதிகரிக் கப் பணிவும் அதிகரிக்க வேண்டும் என்பதல்லவா திருக் குறளின் போதனை? 'ஒழிபியல்' பகுதியில் 'மானம்' என்ற அதிகாரத்தில்,

பெருக்கத்து வேண்டும் பணிதல் சிறிய
சுருக்கத்து வேண்டும் உயர்வு

என்ற குறளில் 'வல்லமை மிகுந்தவனாக இருக்கும் போதுதான் வணக்கமுள்ளவனாக அடங்கி நடத்தல் வேண்டும். வல்லமை குறைந்திருக்கும்போது தான்



அதைச் சமாளிக்க நிமிர்ந்து நிற்கவேண்டும்' என்னும் நல்லறிவைப் புகட்டுகின்ற திருவள்ளுவர், 'நீ வல்லமை மிகுந்தவனாக இருக்கும் போதெல்லாம் படையெடுத்துத் தண்டோபாயத்தால் காரியத்தை முடித்துக்கொள்; நீ பலம் குறைந்தவனாக இருக்கிற சமயங்களில் மட்டும் மற்றத் தந்திரங்களை மேற்கொள்ளுக' என்று சொல்லு வாரா?

'வினை செயல்வகை' என்ற அதிகாரம் எந்தக் காரியத்தை எப்படிச் செய்யவேண்டும் என்பதைப் பற்றி மட்டுந்தான் சொல்லுவது. அதுமட்டுமல்ல, 'வினைத் தூய்மை,' 'வினைத்திட்பம்,' 'வினைசெயல்வகை' என்ற பதத்தைச் 'செய்யவேண்டிய காரியம்' என்ற ஒரே பொருளில், மனிதன் மேற்கொள்ளக்கூடிய எல்லாக் காரியங்களுக்கும் பொதுவாகத்தான் சொல்லியிருக்கிறார். இந்த மூன்று அதிகாரங்களிலும் உள்ள முப்பது குறள் களிலும் போரைப் புகுத்திப் பொருள் செய்வதற்கு இடமேயில்லை. போரைப் புகுத்திப் பரிமேலழகர் பொருள் செய்திருக்கிற 'வினை செயல்வகை'யில் மூன்றாவது செய்யுளாகிய,

ஒல்லும்வா யெல்லாம் வினைநன்றே ஒல்லாக்கால்
செல்லும்வாய் நோக்கிச் செயல்

என்ற குறளில் உள்ள எந்தப் பதமும் போரை இழுத்துக் கொண்டு உரை செய்ய இடங் கொடுக்காது. இதற்கு முன்னுள்ள குறள்களிலாவது போரைக் கொண்டு கூட் டிப் பொருள் செய்ய இடங்கொடுக்கக் கூடிய பதமோ கருத்தோ இருக்கின்றதா என்று பாருங்கள். இந்தக் குறளுக்கு முன்னுள்ள இரண்டு குறள்களும் முறையே,

1. சூழ்ச்சி முடிவு துணிவெய்தல் அத்துணிவு
தாழ்ச்சியுள் தங்குதல் தீது

2. தூங்குக தூங்கிச் செயற்பால தூங்கற்க
தூங்காது செய்யும் வினை

என்பன. இவற்றிலும் போரை இழுத்துக் கொண்டு உரைசெய்ய இடமில்லை.

இந்த அதிகாரத்தில் போர் புரியத் தூண்டிவிடக் கூடிய இடமே இல்லை என்பது மட்டுமல்லாமல் போரை விலக்கவேண்டும் என்பதே தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது, ஆனல், போரைப் புகுத்திப் பொருள் செய்ய இடமே இல்லாத குறளுக்குப் போரையே பொருளாகச் சொல்லிவிட்ட பரிமேலழகர், போரையே விலக்க வேண்டும் என்று திருவள்ளுவர் சொல்லுகின்ற குறளுக்குப் போரை நீக்கி எப்படிப் பொருள்கூற முடியும்? அதனல் போரை விலக்கவேண்டும் என்று சொல்லுகிற குறளுக்குத் திருவள்ளுவர் கருதிய உரைக்கு முற்றிலும் விரோதமான உரை சொல்ல வேண்டியதாகிவிட்டது.

போரை விலக்கவேண்டும் என்றே சொல்லுகின்ற ஒரு குறளுக்கும் போர்புரியமேண்டும் என்ற கருத்தைப் புகுத்தியிருப்பதைப் பாருங்கள். இதே 'வினை செயல் வகை' என்ற அதிகாரத்தின் ஒன்பதாவது குறள்,

நட்டார்க்கு நல்ல செயலின் விரைந்ததே
ஒட்டாரை ஒட்டிக் கொளல்

என்பது. இதிலுள்ள பதங்களுக்கு நேரான பொருள் என்னவென்ருல், நண்பர்களுக்கு நல்லவற்றைச் செய்வதைக் காட்டிலும் விரைவாகத் தக்கது பகைவர்களை ஒட்டிக்கொள்வது—என்பது. இங்குள்ள பதங்களுக்கு இதைத் தவிர வேறு எந்த அர்த்தமும் செய்ய முடியாது.



**இதை விரித்துச் சொன்னல்:** பகைவரை வெல்லுவதற்காகப் பலபேரை நண்பர்களாகக் கட்சி சேர்த்துக் கொண்டு, அவர்கள் முகங்கோணுதபடி அவர்களுக்கு உதவிகளைச் செய்து உபசரித்துக்கொண்டிருப்பதைவிடப் பகைவரையே நண்பராக்கிக் கொள்வது விரைவாகப் பயனளிக்கக்கூடியது என்பதாம்.

**இதன் கருத்து:** ஒரு பகைவனை வெல்லுவதற்காகப் பலபேரைத் துணை சேர்த்துக் கொண்டு அவர்களைத் தொங்கிக்கொண்டிருப்பதைவிட அந்த ஒரு பகைவனையே நண்பனுக்கிக் கொள்வது நல்லது—என்பது.

இதுதான் இந்தக் குறளுக்குத் திருவள்ளுவர் கருதிய பொருள். வெகு நல்ல அறிவைப் புகட்டும் இந்தக் குறளுக்குப் பரிமேலழகர் தந்துள்ள உரையைப் பாருங்கள்:

'வினை செய்வானல் தன் நட்டார்க்கு இனியவற்றைச் செய்தலினும் விரைந்து செய்யப்படும்; தன் பகைவரோடு ஒட்டாரைத் தனக்கு நட்பாக்கிக் கோடல்' என்பது பரிமேலழகர் உரை.

இதில் 'நட்டார்க்கு' என்பதற்குத் 'தன் நட்டார்க்கு' என்று பொருளாகும் போது 'ஒட்டாரை' என்பதற்கு மட்டும் தன் பகைவரோடு ஒட்டாரை' என்று எப்படிப் பொருளாகும்? 'தன் பகைவரோடு' என்பதைச் சேர்த்துக்கொள்ள, இந்தக் குறளில் எந்தப் பதம் இடம் கொடுக்கிறது? எந்தப் பதமும் இடங் கொடுக்காத ஒரு

சொல்லைச் சேர்த்துக்கொண்டு சொல்லப் பட்டுள்ள உரை மிகவும் முரண்பட்டுப் போகிறது.

எப்படி யென்றால், ஒருவனுக்குத் தன் பகைவரோடு ஒட்டாராக இருப்பவர்கள் தானே தனக்கு நட்டாராக இருக்கமுடியும்? ஆகையினால் 'நட்டார்க்கு' என்ற பதத்தி லுள்ள 'நட்டார்' ஏற்கெனவே 'தன் பகைவரோடு 'ஒட்டார்' ஆகிவிட்டார்கள். அப்படியானால் இந்தக் குற ளுக்குப் (பரிமேலழகர் சேர்த்துக்கொண்ட 'தன் பகைவ ரோடு என்ற சொற்றொடரோடு) பொருள் எப்படி விரி கிறதென்றால், 'தன் பகைவரோடு ஒட்டார்க்கு இனிய வற்றைச் செய்தலினும் தன் பகைவரோடு ஒட்டாரைத் தனக்கு நட்பாக்கிக் கொள்வது விரைந்தே' என்றுதான் ஆகிவிடுகிறது.

இப்படிப் பொருளற்ற உரை செய்ய நேரிட்ட கார ணம், பரிமேலழகர் இந்த அதிகாரத்தின் மூன்றாவது குறளாகிய,

ஒல்லும்வா யெல்லாம் வினைநன்றே ஒல்லாக்கால்
செல்லும்வாய் நோக்கிச் செயல்

என்ற குறளில் 'வினை' என்ற பதத்திற்குப் 'போர்' என்ற பொருளைப் புகுத்திவிட்டதேயாகும். அத்துடன் 'ஒல்லும் வாயெல்லாம்' என்பதற்கும் மிகவும் தவறாக 'வலியானாய் இருக்கும்போதெல்லாம்' என்று பொருள் கொண்டுவிட் டார். அதனால் 'செல்லும் வாய்' என்பதற்குச் 'சாம, தான, பேதம்' என்ற மூன்றில் 'செல்லத் தகுந்த ஒன்று' என்று கற்பித்துப் பொருள் கொண்டார். அதனால் நீதி நூல்களுக்கும் ராஜ தர்மங்களுக்கும் முற்றிலும் விரோத மாக, முதலில் தண்டோபாயத்தை மேற்கொள்ள



வேண்டுமென்றும் அது முடியாவிட்டால் மற்றச் சாம, தான, பேதமாகிய மூன்றினுள் ஒன்றை மேற்கொள்ள வேண்டு மென்றும் சொல்லிவிட்டார்.

இப்படித் தவறான உத்திகளை மனதிற் கொண்டு விட்டதால் இந்த 'வினை செயல் வகை' என்னும் அதி காரம் போரைப்பற்றியும் அதை நடத்தவேண்டிய முறை யைப் பற்றியுமே சொல்லுவதாக எண்ணிக் கொண்டே பொருள் செய்யப் புகுந்திருக்கிறார். அப்படியும் போரை விலக்கிச் சமாதானம் செய்துகொள்வது நல்லது என்ற அறிவைச் சொல்லுகிற அந்தப் பொருளைச் சொல்லமுடி யாமற் போய்விட்டது.

நட்டார்க்கு நல்ல செயலின் விரைந்ததே
ஒட்டாரை ஒட்டிக் கொளல்

என்பதற்குப் 'பகைவனை வெல்லவென்று பலபேரைத் துணை சேர்த்துக்கொண்டு அவர்களுடைய தயவுக்காகப் பரிந்துகொண்டிருப்பதைவிடப் பகைவனையே சமாதானப் படுத்தி நண்பனாக மாற்றிவிடுவது மிகவும் நல்லது' என் பதுதான் திருவள்ளுவர் கருதிய பொருள் என்பதை இந்தக் குறளுக்கு அடுத்த,

உறைசிறியார் உள்நடுங்கல் அஞ்சிக்குறைபெறின்
கொள்வர் பெரியார்ப் பணிந்து

என்ற கடைசிக் குறள் நிச்சயப்படுத்துகிறது. இதன் பொருள்: இடம், பொருள், ஏவல் முதலிய வசதிகள் குறைவாக உள்ளவர்கள் தம்மைச் சேர்ந்தவர்கள் நடுங் குவதற்காகப் பயந்து தம்மினும் பலமுள்ளவர்களை எதிர்க் காமல் பணிந்து சமாதானம் செய்து கொள்வார்கள்.

அதற்காகப் பிறர் குற்றம் சொன்னாலும் பொறுத்துக் கொள்வார்கள் என்பது.

முந்திய குறளில் 'நட்டார்க்கு நல்ல செய்துகொண்டு சண்டைக்குக் கட்சி கட்டுவதைக் காட்டிலும் பகைவருடன் சமாதானம் செய்துகொண்டு அவனை நண்பனாக்கிக் கொள்வது நல்லது' என்று சொன்னதைத் தொடர்ந்து இந்தக் குறளில் 'பலம் மிகுந்த பகைவனை எதிர்த்துத் தன்னைச் சேர்ந்தவர்களுக்கு அழிவுண்டாக்குவதைவிடப் பணிந்து போவதே நல்லது' என்று சொல்லுகிறார்.

ஆதலால் இந்த அதிகாரம் சண்டைசெய்யத் தூண்டுவதற்காகச் சொல்லப்பட்டதன்று. சண்டை வரக்கூடியதாக இருந்தாலும் அதை விலக்கத் தகுந்த முறையில் 'வினை செய்வகை'யை அறியச் செய்வதற்காகவே சொல்லப்பட்டுள்ளது. இந்தச் சண்டையும் ஓர் அரசன் இன்னோர் அரசன்மேல் படையெடுத்துச் சதுரங்க சேனைகளைக் கொண்டு நடத்துகிற சண்டையை மட்டும் குறிப்பதன்று. சாதாரண மனிதருக்குள் வரக்கூடிய சண்டைகளையும் குறித்தது. ஏனென்றால் 'வினைத் தூய்மை', 'வினைத்திட்பம்', 'வினை செயல் வகை' என்ற மூன்று அதிகாரங்களும் பரிமேலழகர் கருதியபடி அமைச்சருக்கோ அரசருக்கோ மட்டும் போர் நடத்தச் சொன்னதன்று. எல்லா இல்லறத்தானுக்கும் பொதுவாகச் சொல்லப்பட்டவை.

# திருவள்ளுவர் அருளிய இன்பம்

'திருவள்ளுவர் அருளிய இன்பம்' என்றது திருக்குறளில் உள்ள 'காமத்துப் பால்' என்பதைப் பற்றித்தான். அறம், பொருள், இன்பம் என்ற மூன்றும் சேர்ந்தது திருக்குறள். இந்த மூன்றும் சேர்ந்ததுதான் மனித வாழ்க்கை. இந்த மூன்றையும் சரியான முறையில் அநுபவிக்கும் போதுதான் சமுதாயம் சந்தோஷமுள்ளதாக நடக்கும். இவற்றுள் ஏதாவது ஒன்று பழுதானாலும் வாழ்க்கையும் பழுதுபடும். வள்ளுவர் பெருமான் இந்த மூன்று பகுதிகளுக்கும் சமமான சிறப்பே தந்து, அந்த அந்தப் பகுதியில்சொல்ல வேண்டிய அனைத்தையும் சொல்லியிருக்கிறார். ஆனால் திருக்குறளைப் படிப்பவர்களும் போதிப்பவர்களும் உரையாசிரியர்களும் இந்த மூன்று பகுதிகளையும் சமநோக்குடன் கவனித்திருப்பதாகத் தெரியவில்லை. பொருட்பாலுக்குச் செலுத்தப்படுகிற கவனம் அறத்துப்பாலுக்கு இல்லை. அறத்துப்பாலுக்குச் செலுத்தப்படுகிற கவனம் காமத்துப் பாலுக்கு இல்லை. ஏனென்றால், 'காமம் என்பது ஆணுக்கும் பெண்ணுக்கும் இயற்கையாகவே இருந்துவருகிற வெகு சாதாரண விஷயந்தானே?' என்ற அலட்சிய மனப்பான்மை எல்லோருக்கும் இருக்கிறது. இது எப்படிப்போல என்றால், காற்று, நீர், உணவு என்ப

வற்றைப் பற்றி நாம் எண்ணுவதைப் போலத்தான். மனிதனுடைய உயிர் வாழ்க்கைக்கும் ஆரோக்கியத்துக்கும் முதன்மையானது காற்று. அதற்கு அடுத்தது நீர், அதற்குப் பிறகுதான் சோறு, தின்பண்டங்கள் முதலிய உணவு வகைகள்., இந்த மூன்றினுள் மக்கள் உணவில் செலுத்துகிற கவனம் குடிதண்ணீரில் செலுத்துவதில்லை. குடி தண்ணீரில் செலுத்துகிற கவனம் மூச்சு வாங்கும் காற்றில் செலுத்துவதில்லை. 'அணுக்குண்டு' என்ற ஒரு வெடிகுண்டு, காற்றிலுள்ள அணுக்களைப் பிளந்து உலகத்தையே அழித்துவிடும் என்று சொல்லும்போது நமக்கு உண்டாகிற வியப்பும் விசாரமும், நாம் மூச்சு வாங்கும் காற்றில் உள்ள கிருமிகள் நம்முடைய ஆரோக்கியத்தைக் கெடுத்துவிடும் என்று சொல்லும்போது உண்டாவதில்லை. அணுக்குண்டு ஆகாயத்திலுள்ள அணுக்களைப் பிளந்து நம்மையும் அழித்துவிடும் என்று சொல்லுகிறபோது, அப்படிப்பட்ட குண்டு இல்லாமலிருக்க நாம் ஏற்பாடு செய்ய வேண்டும் என்ற ஆசை உதிப்பதுபோல, அசுத்த ஆகாயத்தில் உள்ள கிருமிகள் நம் ஆரோக்கியத்தை அழித்துவிடும் என்று சொல்லும்போது அப்படிப்பட்ட கிருமிகள் ஆகாயத்தில் இல்லாதிருக்க ஓர் ஏற்பாடு செய்ய வேண்டும் என்ற ஆசை உண்டாவதில்லை.

மூச்சோடு இருப்பதற்கு வேண்டிய மூலப் பொருளாகிய காற்றைப்பற்றி நமக்கு இவ்வளவு அலட்சிய மனப்பான்மை இருப்பது போலவே மக்கள் பிறப்புக்கே மூலகாரணமாக இருக்கிற காமத்தைப் பற்றியும் அலட்சிய மனப்பான்மை இருந்து வருகிறது. 'காமம்' என்ற சொல்லை உச்சரிக்கவும் கூசுகின்றோம். வெளியில்



சொல்லத்தகாத விஷயம்போல் அதை விலக்குகின்றோம். இளைஞர்களுக்கிடையில் இதைப் பற்றிப் பேசுவதுங்கூடப் பெருங் குற்றமாகக் கருதப்படுகிறது. நல் வாழ்க்கைக்கு வேண்டிய பலவித ஒழுக்கங்களை உபதேசிக்கின்றவர்களும் காம இன்பத்தைச் சரியான முறையில் அநுபவிக்க வேண்டிய நன்னெறிகளைப் பற்றிப் பேசுவதில்லை. காமத்தைப் பற்றிப் பேசும்போதெல்லாம், அது உலகத்தார் ஒரு சிறிதும் விரும்பத்தகாத விஷயம் போல வெறுத்துப் பேசுவதையும் பாடுவதையும் கேட்டிருக்கிறோம். பல இலக்கியங்களில், காமம் என்ற சொல்லுங்கூட ஒரு குற்றத்தைக் குறிப்பது போலக் கூறப்பட்டிருப்பதைப் பார்க்கிறோமேயல்லாமல், காம இன்பம் விலக்க் முடியாத விதி என்பதையோ, அதைச் சரியானபடி அனுபவிக்கும் நன்னெறி இது என்பதையோ அதிகமாகப் பார்ப்பதில்லை இலக்கியங்களில் இப்படிக் காமத்தைக் கடிந்திருப்பவர்கள் மிகவும் நல்ல நோக்கத்துடன் தான் எழுதியிருக்கிறார்கள். அதாவது, உலகத்தில் பெரும்பாலும் துன்பங்களுக்கு முறைகெட்ட காம ஆசைதான் காரணமாக இருந்திருக்கிறது என்பதை மனத்தில் வைத்துக் கொண்டுதான் எழுதியிருக்கிறார்கள். என்றாலும் காமத் தீமைகளை மனத்தில் வைத்துக்கொண்டு அதைக் கடிந்து பேசியிருக்கிற அளவுக்குக் காமத்தின் இன்றியமையாத் தன்மையையும் அதை ஒட்டிய தத்துவங்களையும் விளக்கி அதை அநுபவிக்கும் நெறிமுறைகளைப் பற்றிப் பேசுகின்ற இலக்கியங்கள் இல்லையே என்பதுதான் இங்கே சொல்ல வந்தது. மேலும் இப்படிக் காமத்தைக் கடிந்து பேசுகின்ற சமயங்களிலும் ஓர் ஆண் மகன் தனக்கு உரிமை இல்லாத இன்னொருவனுடைய மனைவியைக் காமுறுவ

தால் விளைந்துள்ள அல்லது விளையக் கூடிய தீமைகளை மட்டுந்தான் மனத்திற்கொண்டு பேசுகிறார்கள். ஆனால் ஓர் ஆண்மகன் தனக்கே உரிமையான தன்னுடைய மனைவியிடத்திலும் வரையறையின்றியும் இயற்கையின் விதிவிலக்குகளை மதிக்காமலும் காம இன்பத்தை அநுபவிப்பதால் விளைகின்ற எண்ணிறந்த தீமைகளைப் பற்றி எண்ணுவதில்லை. இந்தத் தீமைகளைக் குறைக்க வேணும், காம உணர்ச்சியைப் பற்றிய நுணுக்கங்களையும் அதை நல்ல முறையில் அநுநுபவிக்க வேண்டிய அறிவு களையும் மக்களுக்குப் புகட்ட வேண்டும் என்ற ஏற்பாடு நமக்குள் இருந்ததில்லை. பழங்காலத்தில் ஒரு குடும்பத்தி லுள்ள முதியவர்கள் இளந்தம்பதிகளுக்கு மறைமுகமாகச் சொல்லிவந்ததாகக் கேள்விப்படுகிற நாள், கிழமை, நட்சத்திரம் என்ற விலக்கு விதிகளும் இக்காலத்தில் இல்லாது போய்விட்டன.

இப்படியாக இந்தக் 'காமம்' என்னும் மிக முக்கிய மான சக்தியைப் பற்றிய அறிவு அலட்சியம் செய்யப் பட்டே வந்திருக்கிறது. அந்த அலட்சிய மனப்பான்மையே திருக்குறளில் உள்ள காமப் பகுதிக்கும் காட்டப்பட் டிருக்கிறது. அதனால் திருவள்ளுவர் 'காமத்துப் பால்' என்ற பகுதியில் செலுத்தியிருக்கிற ஆழ்ந்த சிந்தனையை உரையாசிரியரும் உணர முடியவில்லை. அது காரண மாகத் திருக்குறளைப் படிப்பவர்களும் இந்தக் காமத்துப் பாலைப் பற்றி அதிகக் கவனம் செலுத்துவதில்லை. பொது மக்களில் திருக்குறளைப் படித்தறிய விரும்புகிறவர்கள் ஒருபுறம் இருக்க, தமிழறிவை மாணவர்களுக்குப் போதிக்கும் தமிழாசிரியர்களாவதற்கென்றே படிக்கிறவர் களுக்கும் திருக்குறளிலுள்ள காமப்பகுதியைப் பற்றிய



பாடங்கள் மிகவும் குறைவுதான்; இல்லையென்றே சொல்லிவிடலாம்.

திருக்குறளிலுள்ள காமத்துப் பாலைக் கல்வியாளரும் சரியாகக் கவனிப்பதில்லை என்பது மட்டும் அல்ல; திருவள்ளுவர் இந்தக் காமப் பகுதியை எதற்காக எழுதினார், இதை எழுதாமலே விட்டிருக்கலாமே என்று கவலைப்படுகிற கல்வியாளரும் இருக்கிறார்கள். அதற்கும் அதிகமாகக் காமப்பகுதியைத் திருக்குறளிலிருந்து கழித்து விட்டு வெறும் அறத்துப்பால், பொருட்பால் என்ற இரண்டு மட்டும் இருக்கும்படி அச்சிடுவது நல்லது என்று வெகு அழுத்தமாகச் சொல்லுகிற அறிஞர்களும் உண்டு. இவர்களெல்லாம் காமத்தால் விளைந்துள்ள தீமைகளைக் கருத்தில் வைத்துக் கொண்டு, நல்ல நோக்கத்தோடுதான் இப்படிச் சொல்லுகிறார்கள். என்றாலும் அது அறிவுடைமை ஆகாது. பணத்தால் எண்ணிறந்த தீமைகள் விளைகின்றன. பணத்தைக் கொண்டு அந்தத் தீமைகளைச் செய்கின்றவர்களை வெறுக்கலாம். ஆனால் பணத்தை வெறுத்துவிடலாமா? அளவு கடந்து உண்பதனால் அநேக நோய்கள் உண்டா கின்றன என்பது உண்மை. அதற்காக அளவு கடந்து உண்பதை வெறுத்துப் பேசலாம். ஆனால் உணவையே வெறுத்துப்பேசலாமா? அதுபோலக் காமத்தால் விளையும் தீமைகளை விலக்கலாம். ஆனால் காமத்தை எப்படி விலக்க முடியும்? காமத்தைவெறுத்துப் பேசுகின்றவர்களும் காமத் தால் பிறந்தவர்கள்தாமே? காமத்தை மறுக்கின்றவர்கள் தம்மையும் மறுப்பவர்களாகிறார்கள். தம்முடைய தாய்

தந்தையரையும் அவமதிக்கிறார்கள். காமத்தீமைகளை மனத்தில் எண்ணிக்கொண்டு காமத்தை இகழ்வதோடு பெண்களையும் அவமதித்து விடுகிறார்கள். துறவிகள் காமத்தை அறவே விலக்கவேண்டும் என்பதற்காக அவர்கள் காமத்தைக் குறைத்துப் பேசுகிறார்களென்பதைப் பொறுத்துக் கொள்ளலாம். ஆனால் அவர்களுங்கூடப் பெண்பாலை இகழ்ந்து பேசுவது குற்றமாகும். காமத்துக்குக் காரணமும் பொறுப்பாளிகளும் பெண்கள் மட்டுந்தானா?

முற்றுந்துறந்த முனிவர்களும் அடக்க முடியாமல் அவதிப்படுகிற காமத்தைத் துறவிகள் அல்லாதவர்களும் வெகு அலட்சியமாக, 'திருக்குறளில் காமப்பகுதி இல்லாதிருப்பது நல்லது' என்று சொல்லத் துணிகிறார்கள். திருக்குறளில் துறவறமும் சொல்லப்பட்டிருக்கிறது என்றாலும் திருவள்ளுவர் இல்லறத்தைக் கருதித்தான் திருக்குறளை எழுதியிருக்கிறார் என்பதில் எள்ளளவும் ஐயம் இல்லை. காமம் இல்லாமல் இல்லறம் இருக்க முடியுமா? அப்படியிருக்கத் திருவள்ளுவர் காமத்துப் பகுதியை எழுதாமல் விட்டிருக்கலாமே என்பது எப்படிப் பொருந்தும்? அவர் அதை விட்டிருந்தால் அதுதான் குற்றமாகும். 'ஆனால் அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கு உறுதிப் பொருள்களில் வீடு என்பதை விட்டுவிட்டாரே; அப்படிக் காமத்தையும் விட்டுவிட்டால் என்ன?' என்ற கேள்வி பிறக்கலாம். அந்தக் கேள்வி சரியானது அல்ல. எப்படியெனில் 'வீடு' என்ற 'முத்தி' உலக வாழ்க்கையோடு ஒட்டியது அல்ல. ஐம்புலன்களுக்கும் அப்பாற்பட்டது. மனோவாக்குக் காயங்களால் உணர முடியாதது. வெறும் நம்பிக்கையைச் சேர்ந்த



குறிக்கோள். என்னவென்று எவராலும் சொல்ல முடியாதது. சொல்ல முடியாததைச் சொல்லப் புகுவது குற்றமென்று விட்டுவிட்டார். சொல்ல முடிந்ததும் சொல்ல வேண்டியதுமான காமத்தை அப்படி விட்டு விடத்தகுமா? அறம், பொருள், இன்பம் என்ற மூன்றும் சேர்ந்தால்தான் வாழ்க்கை. இந்த மூன்றில் எதை விலக்கினாலும் வாழ்க்கை மூளியாகத்தான் இருக்கும். காமத்தை விட்டொழித்த துறவிக்கு அறம் ஒன்றைத் தவிர மற்றப் பொருள்இன்பம் என்ற இரண்டும் இல்லை. அந்த அறமுங்கூடத் தன் உடலையும் மனத்தையும் பற்றிய துறவு ஒழுக்கமேயன்றிப் பிறருக்குச் செய்ய வேண்டிய அறம் ஒன்றும் துறவிக்கு இல்லை. மக்கள் சமுதாயம் வாழையடி வாழையாக மகிழ்ச்சியுள்ளதாக நடந்துவர இல்லறத்தை எண்ணியே எழுதப்பட்ட திருக்குறளில் காமத்துப்பால் இல்லாதிருக்க இயலாது.

திருவள்ளுவர் சொல்லியிருக்கின்ற காம இன்பம் விபசாரக் குற்றங்களோடு சேர்த்துப் பேசப்படுகிற காமத் தீமை அல்ல. தூயதான காம உணர்ச்சியையும் துப்புரவான காதல் உறவையும் மிக நல்ல கற்பனைக் காட்சிகள் அடங்கிய நாடகமாக நடத்திக் காட்டப்பட்டிருக்கிற திருக்குறளிலுள்ள காமத்துப்பால், மேலே சொல்லப்பட்ட அவமதிப்பான எண்ணத்தினால் மிகவும் அலட்சியம் செயயப்பட்டிருக்கிறது. அதனால் திருவள்ளுவருடைய கருத்தைத் தெரிந்துகொள்ள முடியாமல் உரைகள் செய்யப்பட்டிருக்கின்றன. இதற்கு ஓர் உதாரணம் இப்போதே சொல்லிவிடுவது நல்லது.

"மலரினும் மெல்லிது காமம் சிலரதன்
செவ்வி தலைப்படு வார்"

என்ற குறள் காமத்துப் பாலில் 'புணர்ச்சி விதும்பல்' என்ற அதிகாரத்தில் உள்ளது. இது காமத்துப்பாலின் ஜீவநாடிகளில் ஒன்று எனத்தகுந்த குறள். வள்ளுவர் 'காமம்' என்பதற்குச் சொல்லுகின்ற இலக்கணமும், அந்தக் காமத்தை அநுபவிக்க அவர் சொல்லுகின்ற நல்லறிவும் சேர்ந்த மிக ஆழமான கருத்துகள் அடங்கியது இந்தக் குறள். மிகவும் நுண்ணியதாகிய காம இன்பத்தை பெரும்பாலும் மனிதர்கள் மிகவும் முரட்டுத்தனமான முறைகளில் அநுபவிக்க முயன்று இன்பத்தைத் துன்பமாகச் செய்துகொள்ளுகிறார்கள் என்பதைச் சுட்டிக் காட்டித் தவறான காம நுகர்ச்சிகளைத் தவிர்க்கச் சொல்லுவது இந்தக் குறள். 'அணுவைத் துளைத்து ஏழ்கடலைப் புகட்டிக், குறுகத்தறித்த குறள்' என்ற பெருமைக்கு இணங்கக் கணவன் மனைவி என்ற உரிமைபற்றியும் நடக்கத்தகாத பல காமக் குற்றங்களை வெகு கண்ணியமான சொற்களால் கடிந்து பேசுவது இந்தக் குறள்.

" மலரினும் மெல்லிது காமம் சிலர் அது
செவ்வி தலைப்படு வார்."

காமம் என்பது மலரைக் காட்டிலும் மென்மையானது. அதைக் கசங்கிப் போகும்படி மோப்பதோ கையாளுவதோ கூடாது. ஆனால் அந்த மென்மையை உணர்ந்து பக்குவம் பார்த்து அநுபவிக்கின்ற மனிதர்கள் சிலரே. பெரும்பாலும் மக்கள் அந்த மென்மையை மதிக்காமலும் பக்குவம் பார்க்காமலுந்தான் அந்த மலர் வாடிக் கசங்கிக் குழைந்து மணம் கெட்டுப் போகும்படிதான் நடந்து கொள்ளுகிறார்கள். அது குற்றம் என்று புத்தி புகட்டுவது இந்தக் குறள். 'மலரினும் மெல்லியது



காமம்' என்ற உவமானத்தினாலும், 'அதன் செவ்வி தலைப்படுவார் சிலர்' என்ற சொற்களாலும், திருவள்ளுவர் மலரினும் மெல்லிய காமத்தின் செவ்வி தலைப்படாத பெரும்பான்மையான (சிலர் அல்லாத பலராகிய) மக்களைக் கருதித்தான் இதைச் சொல்லியிருக்கிறார் என்பது நிச்சயம்.

இந்தக் குறளுக்குப் பரிமேலழகர் தந்துள்ள உரை திருவள்ளுவர் கருதிய நல்லறிவைப் புகட்டக் கூடியதாக இல்லை. அந்த உரையை ஆராய்வோம்: 'காமவின்பம் மலரினும் மெல்லியதாயிருக்கும். அங்ஙனம் மெல்லிதாதலை அறிந்து அதன் செவ்வி பெறுவார் உலகத்துச் சிலர்' என்பது பதவுரை.

இதற்கு விளக்கமாக அவர் தரும் விசேட உரையாவது: 'தொட்ட துணையானே மணச் செவ்வி அழிவதாய மலர் எல்லாவற்றினும் மெல்லிதென்பது விளக்கவின், உம்மை சிறப்பின்கண் வந்தது. குறிப்பும், வேட்கையும், நுகர்ச்சியும், இன்பமும் ஒரு காலத்தின்கண்ணே ஒத்து நுகர்தற்குரியார் இருவர் அதற்கு ஏற்ற இடனும் காலமும் உபகரணங்களும் பெற்றுக் கூடி நுகர வேண்டுதலின் அதனை செவ்வி தலைப்படுவார் சிலரென்றும், அவற்றுள் யாதானும் ஒன்றனாற் சிறிது வேறுபடினும் வாடுதலின், மலரினும் மெல்லி தென்றும் கூறினார். குறிப்பு ஒவ்வாமையின் யான் அது பெறுகின்றிலேன் என்பதாம். தலைமகள் ஊடல் தீர்வது பயன்' என்பது விளக்கம்.

இந்த உரையும் விளக்கமும் இந்த அருமையான குறளின் நோக்கத்தைப் புகட்டுவனவாக இல்லை, அன்

றியும் இந்த உரை இக்குறளின் நோக்கத்துக்கு முற்றும் வேறுபட்ட, 'இடம், காலம், உபகரணங்கள்' என்பனவற்றையே முக்கியமாக நினைக்கச் செய்கிறது. 'காமம் என்பது மலரைவிட மிகவும் மென்மையானது. ஆதலால் அதை மலரைக் கையாளுவதைவிட மிகவும் கவனிப்போடு அனுபவிக்க வேண்டும். ஆனால் பெரும்பாலும் மக்கள் அப்படிச் செய்வதில்லை. அது குற்றம்' என்ற நற்போதனையை உணராவிட்டால் இந்தக் குறளில் உள்ள உபமானம் பயனற்றதாகி விடும். ஒரு மலர் மொட்டாக இருக்கும்போது மோந்து பார்க்க புகுந்து கையாண்டால் கசங்குமேயன்றி மணம் கிடைக்காது. அது மலர்ந்து நெடுநேரமாகி வாடுகிற சமயத்தில் கண்ணுக்கும் அழகுதராது; மூக்குக்கும் நல்ல மணம் தராது. ஆகையால் மலரைப் **பருவம் அறிந்து** பக்குவமாகக் கையாள வேண்டும் என்பதுபோல, 'காலை அரும்பிப் பகலெல்லாம் போதாகி மாலை மலரும் மலர்' ஆகிய காமத்தையும் காலம் நேரம் கருதாமல் அநுபவிக்கச் செய்வது குற்றம். பெரும்பாலும் மக்கள் இந்தக் குற்றத்தைச் செய்கிறார்கள். நீயும் அப்படிச் செய்ய விரும்புகிறாய். நான் அதற்கு இணங்கமாட்டேன் என்று காதலன் புணர்ச்சி விரும்பிய காதலிக்குச் சொல்லுகிற குறள் இது.

இந்தக் குறளில் உள்ள 'செவ்வி' என்ற பதத்துக்கு இங்கே 'செம்மைத் தன்மை' அல்லது 'அழகு' என்பது அர்த்தம் அல்ல. பின் என்னவென்றால் 'ஏற்ற காலம்' அல்லது 'தக்க பருவம்' என்பதே வள்ளுவர் கருதும் பொருள். பின்னும் இக்குறளில் உள்ள 'தலைப்படுவார்' என்ற பதத்துக்குப் 'பெறுவார்' என்று பொருள் கொள்வ



தும் சரி அல்ல. 'தலைப்படுவார்' என்பதற்குப் பெறுவார் என்ற பொருளை வலிந்து கொள்வதும் வழக்கில் இல்லை. 'தலைப்படுவார்' என்பதற்கு 'மேற்கொள்வார்' அல்லது 'தொடங்குவார்' என்பதுதான் பொருள். இங்கே 'மேற்கொள்வார்' என்ற பொருளில் தான் வைக்கப்பட்டிருக்கிறது.

'காமம்' என்பதைப் பற்றிச் சமுதாயத்தில் இருந்து வந்திருக்கிற அலட்சிய மனப்பான்மை காரணமாகத் திருக்குறளில் 'காமத்துப் பால்' என்ற பகுதியில் உள்ள பல குறள்களுக்கும் இப்படிப் பயனற்ற உரைகளே சொல்லப்பட்டு வந்திருக்கின்றன.

'மலரினும் மெல்லிது காமம்' என்றபடியே திருவள்ளுவர் காமத்துப்பாலை மிகவும் மென்மையுடன் கையாண்டிருக்கிறார். உதாரணங்களால் வெகு நுணுக்கமாகச் சுட்டிக் காட்டப்பட்டிருக்கின்ற நல்லறிவுகள் உரைகளில் கவனிக்கப்படவில்லை. மேலும் காமத்துப் பால் முழுவதிலும் சந்தர்ப்ப அசந்தர்ப்பங்களைக் கருதாமல் 'பாங்கன்', 'தோழி' என்ற பாத்திரங்களைப் புகுத்திப் பொருள் செய்யப்பட்டதால் மலரினும் மெல்லிய காமம் மிகவும் கசங்கிப் போய்விட்டது. தலைமகன், தலைமகள்', பாங்கன், தோழி என்ற பாகுபாடுகளைத்திருவள்ளுவர் எண்ணவே இல்லை. மூன்றாம் பேர் அறிய முடியாதபடி, ஒருவரை ஒருவர் காதலிக்கின்ற 'ஓர் ஆண், ஒரு பெண்' என்ற இவர்களுக்குள் மட்டும் உதிக்கின்ற காம உணர்ச்சிகளையும் காதல் பற்றுகளையும் வெகு கண்ணியமான முறையில் சித்திரிப்பது திருவள்ளுவரின் காமத்துப்பால். அதிலுள்ள குறள்களின் தொடர்ச்சியை அறியாமல் இந்தத் 'தோழி',

'பாங்கன்' என்ற இடையூறுகளைப் புகுத்தி உரைகள் சீர்குலைக்கப்பட்டுவிட்டன.

காமத்துப்பாலை, 'ஒருத்திக்கு ஒருவன்—ஒருவனுக்கு ஒருத்தி' என்ற் உயர்ந்த கொள்கையின் அடிப்படையில் தான் திருவள்ளுவர் சித்திரிக்கிறார், ஆனால் உரைகளில் தலைமகனுக்கு விபசாரக் குற்றம் கற்பிக்கப்பட்டிருக்கிறது. அது திருவள்ளுவரின் கருத்துக்களின் தூய்மையை அசுத்தப்படுத்தி விடுகிறது. இதற்கு உதாரணம் :

" அலந்தாரை அல்லல்நோய் செய்தற்றால் தம்மைப்
புலந்தாரைப் புல்லா விடல்."

என்ற குறள் 'புலவி' என்ற அதிகாரத்தில் மூன்றாவது குறள். இதற்கு பரிமேலழகர் தந்துள்ள உரை பின் வருமாறு :

" பரத்தையரிடத்து நின்றும் வந்த தலைமகனோடு தலைமகள் புலந்து சொல்லியது.

தம்மைப் புலந்தாரைப் புல்லாவிடல் — தம்மைப் பெறாது புலந்த மகளிரைப் புலவி நீக்கிக் கலவாத ஆடவர் சேறல், அலந்தாரை அல்லல் நோய் செய்தற்று—பண்டே துன்பமுற்றழிந்தாரை அதன் மேலும் மிக்க துன்பத்தினைச் செய்தாற்போலும். பிறர்பாற் சேறலின் நும்மைப் பெறாது புலந்தூடி யிருக்கின்ற பரத்தையரைப் போய்ப் புலவி நீக்கிப் புல்லீராயின் அவராற்றாரென்பதாம்" என்பது பரிமேலழகர் தரும் பதவுரையும் விளக்கமும்.

இந்த உரை சரிதானா ? திருவள்ளுவரின் கருத்து இதுவாக இருக்க முடியுமா ? இந்தக் குறளில், 'தலைமகன் பரத்தையரிடத்து நின்றும் வந்தவன் ' என்று சந்



தேகிக்கவேனும் துளியாவது இடமிருக்கிறதா ? இதற்கு முன்னுள்ள குறள்களிலாவது பின்னுள்ள குறள்களிலாவது அப்படி நினைக்க மறைமுகமாகவேனும் இடமிருக்கிறதா ? சிந்திக்க வேண்டும்.

எப்படி யெல்லாம் சிந்தித்துப் பார்த்தாலும் திருவள்ளுவர் சொல்லுகின்ற காமத்துப் பாலில் சித்திரிக்கப்பட்டுள்ள ஆண்மகன் பரத்தையருடைய சம்பந்தம் உள்ளவன் என்று எண்ணத் தகாது. தமிழ் நாட்டில் நெடுங் காலமாகவே பரத்தையர்கள் இருந்து வந்திருக்கிறார்கள். விபசாரத்துக்குத் தடை விதித்துச் சட்டம் இயற்றிய காலத்துக்கு முன் பரத்தையர்கள் விபசாரத்தைப் பகிரங்கமாக விளம்பரப்படுத்தி, அதை ஒரு தொழிலாகவே நடத்தி வந்திருக்கிறார்கள். அறிவாளிகள், பரத்தையரையும் அவர்களுடைய உறவையும் அப்போதைக்கப்போது மிகவும் வன்மையாகவே கண்டித்து வந்திருக்கிறார்கள். என்றாலுங்கூட ஆடவர்கள் பரத்தையர் வீடுகளுக்குப் போய் வருவதை ஒரு சர்வ சாதாரண விஷயமாகவே சமுதாயம் சகித்து வந்திருக்கிறது. மனைவி இல்லாத ஆடவர்கள் மட்டுமல்ல; அழகும் இளமையும் அன்பும் அறிவும் நிறைந்துள்ள மனைவியையுடைய கணவன்மார்களும் கணிகையர் வீட்டுக்குப் போய் வருவது வெகு சகசமான காரியமாகக் கருதப்பட்டு வந்திருக்கிறது.

இப்படிப்பட்ட மனப்பான்மையினால் தான் இந்தக் குறளில் 'தலைமகன் பரத்தையரிடத்து நின்றும் வந்தவன்' என்று கூட்டிக் கொள்வதில் ஏற்படுகிற குற்றம் உரையாசிரியருடைய மனத்தை உறுத்தவில்லை. பரத்தையர்

களையும் அவர்களுடைய இன்பத்தை நாடும் காமுகர்களை யும் தமிழர் சமுதாயம் சகித்துக் கொண்டுதான் இருந் திருக்கிறது என்றாலும் தமிழ் இலக்கியங்கள் அப்படிச் சகித்ததில்லை. தமிழின் தலைசிறந்த இலக்கியமாகிய திருக் குறள், 'வரைவின் மகளிர்' என்ற அதிகாரத்தில் விலை மாதரையும் அவர்களை விரும்பி அலையும் ஆடவரையும் மிகவும் கண்டிக்கிறது. அப்படிப்பட்ட இலக்கியத்தில் தலை மகன் 'பரத்தையரிடத்து நின்றும் வந்தவன்' என்பதைக் கூட்டிக் கொண்டு பொருள் கூறுவதனால் திருவள்ளு வரும் ஆடவர்கள் பரத்தையர் வீடுகளுக்குப் போய் வரு வதை வெகு சகசமான காரியமாகத்தான் கொண்டிருக் கிறார் என்று எண்ணிவிடச் செய்கிறது. இந்தப் பழிக்குத் திருவள்ளுவரை ஆளாக்கி விடுவது அநியாயம்.

திருவள்ளுவர், தாம் சொல்லுகின்ற அறம், பொருள், இன்பம் என்ற மூன்று பால்களிலும் அந்த அந்தப் பகுதியில் அங்கங்கே பொருந்துவனவாகிய மிக உச்சமான அறிவுகளையே சொல்லி மனித வர்க்கத்தின் நல்லொழுக்கத்தையே கற்பிக்கிறார். காமத்துப் பாலிலும் காதலர்களுடைய நல்லொழுக்கம் பழுது படாதபடி பரி சுத்தமான காமத்தையும் காதலையுமே சித்திரித்துக் காட்டு கின்றார். காமமும் காதலும் உள்ளத்தின் உணர்ச்சிகளே யானதால் அவற்றைக் கணவன் மனைவியாகிய இருவ ருடைய உள்ளக் கிளர்ச்சிகளாகவே பெரும்பாலும் உருவகப் படுத்துகிறார். இந்த உண்மையைக் கவ னிக்காமையால் குறள்களில் ஒன்றோடு ஒன்று கொண்டுள்ள தொடர்பை அறிய முடியாமல், இப் படிக் குற்றமற்ற தலைமகனுக்கு விபசாரக் குற்றம் கூட்டி உரை செய்ய நேர்ந்திருக்கிறது. அதே காரணத்



தினால்தான் 'பாங்கன்', 'தோழி' என்ற அந்நியப் பாத்திரங்களைப் புகுத்தி உரைகாண வேண்டியதாகி விட்டது. அதனால் 'மலரினும் மெல்லிய காமம்' மணங் குறைந்து மாசுபடிந்து கசங்கிவிடுகிறது.

இனி, 'பரத்தையரிடத்து நின்றும் வந்த தலைமக னொடு தலைமகள் புலந்து சொல்லிய'தாக வரும்,

"அலந்தாரை அல்லல்நோய் செய்தற்றால் தம்மைப்
புலந்தாரைப் புல்லா விடல்"

என்ற குறளுக்குத் திருவள்ளுவர் கருதிய பொருளை ஆராய்வோம். இந்தக் குறள் 'புலவி' என்ற அதிகாரத் தில் உள்ளது. முதலில் 'புலவி' என்பதற்குப் பொருள் என்ன வென்பதைத் தீர்மானித்துக்கொள்ள வேண்டும். அப்படித் தீர்மானிப்பதில் 'புலவி' என்பதைப்பற்றி நாம் கொண்டுள்ள கருத்தையோ அல்லது வேறு அறிஞர் களுடைய கருத்தையோ மட்டும் ஆதாரமாகக் கொண்டு விடாமல் திருவள்ளுவர் எந்த அர்த்தத்தில் 'புலவி' என்பதைச் சொல்லுகின்றார் என்பதையே முக்கியமாகக் கொள்ளவேண்டும். 'புலவி' என்பதற்குப் பொருள் 'பிணக்கு' என்பது. காமத்துப் பாலில் 'பிணக்கு' என்பது, 'இன்புற இடங் கொடுக்காமல் மறுப்புக் காட்டுவது'. அதாவது கணவனும் மனைவியும் ஒருங்கே இருக்கும் போது அளவளாவும் ஆசை கொண்ட கணவன் மனைவியை அணையும்போது அவள் இணங்காதவள் போலக் கணவனை விலக்குவது. இது பெண்ணியல் போடு சேர்ந்தது. ஆணியல்பில் உள்ளதல்ல. திருவள்ளுவர் இந்தப் பிணங்கும் குணத்தைப் பெண்

ணுக்குத்தான் அமைத்திருக்கிறார். அதுதான் இயற்கையின் உண்மைக்கு ஒத்தது. ஆனால் உரையாசிரியர் இந்தப் 'புலவி' என்னும் பிணக்குக் குணம் ஆணுக்கும் பெண்ணுக்கும் பொதுவானது என்று கொண்டுவிட்டார். பரிமேலழகர் 'புலவி' என்பதற்குக் கூறும் இலக்கணம் வருமாறு: 'அஃதாவது இருவர் நெஞ்சம் புணர்ச்சி விதும்பாது புலக்கக் கருதிய வழி ஒருவரோ டொருவர் புலத்தல்' இதில், புலத்தல் என்பது இருவருக்கும் பொதுவானது என்றே உரையாசிரியர் கருதுகின்றார் என்பது தெளிவாகிறது. புலவிக் குணம் இருபாலுக்கும் பொதுவானது போல் கருதிவிட்டதனால், பெண்ணின் மனத்தை மட்டும் பேசுகின்ற இந்த அதிகாரத்தில் இடையிடையே ஆணையும் இழுத்து வைத்து உரைகள் தடுமாறும்படியாகி விட்டது.

புலத்தல் என்பது பெண்ணுக்கு மட்டுந்தான். ஆணுக்கும் அது பொதுவென்று வாதிப்பவர்கள் இருப்பினும் இருக்கலாம். அவர்களோடு நாம் வாதிக்கப் புக வேண்டாம். ஆனால் திருவள்ளுவர் புலவி என்பதைப் பெண்ணுக்கு மட்டுந்தான் உரியதாக்கியிருக்கிறார். இதைப் 'புலவி நுணுக்கம்' என்ற அடுத்த அதிகாரம் ஐயந்திரிபுகளுக்கு இடம் இல்லாமல் உறுதிப் படுத்துகிறது. 'புலவி நுணுக்கம்' என்ற அதிகாரத்தில் உள்ள பத்துக் குறள்களும் பெண்ணின பிணக்கத்தைத்தான் பேசுகின்றனவே அல்லாமல் ஆண் பிணங்குவதாக இல்லை. ஆதலால் திருவள்ளுவரின் கருத்துக்கு இணங்க இந்தப் 'புலவி' என்ற அதிகாரத்தில் உள்ள பத்துக் குறள்களும் கணவனோடு பிணங்கத் தீர்மானித்த மனைவியின் உள்ளத்தில் உதிக்கின்ற எண்ணங்களை மட்டுமே



காட்டுவனவாகும். வேறு எவரையும் இடையே புகுத்த இடம் இல்லை.

இந்த அதிகாரத்தின் சூழ்நிலையைக் கவனிப்போம். நெடுநாள் மனைவியை விட்டுப் பிரிந்திருந்த கணவன் எங்கே போயிருந்தான் என்பதை இங்கேயே அறிந்து கொள்ள வேண்டும். பரிமேலழகர் சொல்லியதுபோலப் பரத்தையரிடத்து நின்றும் வந்தவன் அல்ல. பின் எங்கிருந்து வருகிறான்? தொழில் முறையில் அரசனுடைய அலுவலாக அயலூருக்குப் போய் அங்கே தான் மேற்கொண்ட வேலை விரைவில் முடியாமற் போனதால் அதை முடிக்கிறவரைக்கும் அநேக நாள் அங்கேயே தங்கிவிட நேர்ந்தவன் அவன். இதை 'அவர்வயின் விதும்பல்' என்ற அதிகாரத்திலுள்ள,

> "வினைகலந்து வென்றீக வேந்தன் மனைகலந்து
> மாலை அயர்கம் விருந்து"

என்ற குறள் நிரூபிக்கின்றது. இது வெளியூரில் இருக்கும்போது கணவன் மனைவியை நினைத்துச்சொல்லுவது. இந்தக் குறளின் கருத்து, 'மேற்கொண்டு வந்துள்ள வேலையை வெற்றிகரமாக முடித்துவிட்டு அரசனிடம் விடைபெற்றுக்கொண்டு வீட்டுக்குப் போய் மனைவியுடன் மாலை விருந்தாகிய இன்ப நுகர்ச்சியை ஆசைதீர, சலிக்கச் சலிக்க நுகர்வேன்' என்பது. இந்தக் குறளுக்கு அடுத்த குறள்,

> "ஒருநாள் எழுநாள்போல் செல்லும் சேண்சென்றார்
> வருநாள்வைத்து ஏங்கு பவர்க்கு"

என்பது. இதுவும் மனைவியை நினைத்துக் கணவன் சொல்லுவது. இதன் கருத்து, 'தூர தேசத்துக்கு

வந்திருக்கிற என்னுடைய வரவை எதிர்பார்த்துக் கொண்டு ஏங்கியிருக்கும் என் மனைவிக்கு ஒரு நாள் கழிவது ஏழு நாட்கள்போல இருக்கும். அதனால் நான் விரைந்து சென்று அவள் ஏக்கத்தைப் போக்கவேண்டும் என்பது.

இதற்கு அடுத்த குறள்,

"பெறின்என்னும் பெற்றக்கால் என்னும் உறின்என்னும்
உள்ளம் உடைந்துஉக்கக் கால்"

என்பது. இதுவும் கணவன் மனைவியை நினைத்துத் தனக்குள்ளேயே சொல்லிக் கொள்வது. இதன் கருத்து: 'நான் என் மனைவியை விட்டு வந்து பல நாட்களாகி விட்டதால் என்னைப் பிரிந்திருக்கும் ஏக்கத்தால் என் மனைவி மனம் உடைந்தவளாகி அவளுக்கு ஏதேனும் கெடுதி நேர்ந்து விட்டால் நான் வந்த அலுவலில் வெற்றி பெற்றுத்தான் என்ன பயன்? அந்த வெற்றிக்காக மன்னனிடம் பரிசும் பணமும் பெற்று விட்டால்தான் என்ன பயன்? அந்தச் செல்வங்களுடன் மனைவியிடம் போய்த் தான் என்ன பயன்? ஒரு பயனும் இல்லாமற்போகும், ஆதலால் அவள் மனம் உடைந்து போவதற்குள் நான் அவளிடம் திரும்பிப் போக வேண்டும்' என்பது.

இப்படியெல்லாம் நினைத்து விரைவில் வேலையை முடித்துக்கொண்டு வீட்டுக்கு வந்தவன் இவன். இவனைப் போய்ப் பரத்தையரிடத்து நின்றும் வந்தவன் என்று சொல்லலாமா?

மேற்சொன்ன மூன்று குறள்களுக்கும் பரிமேலழகரும் ஏறத் தாழ இதே பொருள்களைச் சொல்லியிருக்கிறார். அப்படியிருந்தும் அடுத்த அதிகாரத்தில் வீட்டுக்குத் திரும்பி வந்துவிட்ட தலைமகனை அவன் பரத்தையரிடத்து நின்றும் வந்தவன் என்று சொன்னது எப்படியோ தெரியவில்லை. எப்படி இருந்தாலும் அவன் பரத்தையரிடத்து நின்றும் வந்தவன் அல்ல என்பதற்கு மேற்சொன்ன குறள்களே போதும். அப்படியானால், 'அலந்தாரை அல்லல்நோய் செய்தற்றால் தம்மைப் புலந்தாரைப் புல்லாவிடல்' என்பதற்குத் திருவள்ளுவர் கருதிய பொருள் என்னவென்பதைக் காண்போம்.



'புலவி' என்னும் அதிகாரம் ஆரம்பிக்கும் முன்பு உள்ள சூழ்நிலை பின்வருமாறு : கற்பியலாகக் கல்யாணம் செய்துகொண்ட காதலர்கள் கணவனும் மனைவியுமாகித் தனிக் குடித்தனமாக இன்ப வாழ்க்கை நடத்திக் கொண்டிருக்கிறபோது கணவன் தொழில் முறையில் அரசாங்க அலுவலாகத் தூர தேசத்துக்குப் போக வேண்டியிருக்கிறது. கணவன் பிரிந்து போவதற்கு ஆற்றாமல் மனைவி அவனுக்கு விடை கொடுக்க மறுக்கிறாள். ஆனால் கணவன் அரசனுடைய ஏவலாக வெளியூருக்குப் போக வேண்டியது கடமையாக இருந்ததால் விடாப்பிடியாக விடைபெற்றுக் கொண்டு போய்விடுகிறான். கணவன் தன்னை விட்டுப் பிரிந்த நிமிஷம் முதற்கொண்டு மனைவி பிரிவாற்றாமைத் துன்பங்களால் அவதிப்படுகிறாள். அந்தத் துன்ப நிலைமை, 'படர் மெலிந்திரங்கல்' என்ற அதிகாரம் முதலாக 'அவர்வயின் விதும்பல்' என்ற அதிகாரம் வரையில் பத்து அதிகாரங்களில் வெவ்வேறு விதமாகச் சித்தரிக்கப்பட்டிருக்கிறது.

வெளியூருக்குச் சென்ற கணவன், தான் மேற்கொண்டு வந்த வேலையைச் செய்து முடிக்கும் முயற்சி

களிலேயே கவனம் செலுத்திப் பல பேருடன் பேசிப் பழகிப் பொழுது போக்கத் தக்க நிலையில் இருந்ததனால் மனைவியை நினைத்துப் புழுங்கிக் கொண்டிருக்க நேரம் இல்லை. ஆனால் வீட்டில் தனியே இருந்த மனைவி அல்லும் பகலும் அவனுடைய நினைப்பாகவே தவித்துக் கொண்டிருக்கிறாள். அந்தத் தவிப்பினால் கணவனைத் தனக்குள்ளேயே கடிந்து கொண்டு, அவன் வந்தால் தன்னுடைய வருத்தத்தைக் காட்ட அவனோடு பிணங்கிக் கொள்ள வேண்டும் என்று எண்ணுகிறாள். ஆனால் அவனைக் கண்டு விட்டால் தன்னால் பிணங்க முடியுமா என்று சந்தேகிக்கிறாள். அதை,

"புலப்பேன்கொல் புல்லுவேன்கொல்லோ கலப்பேன்கொல்
கண்ணன்ன கேளிர் வரின்"

என்ற குறள் காட்டுகின்றது. இதன் பொருள் 'என் கண்ணன்ன கணவர் வந்தால், (அவர் இத்துணை நாளும் என்னைத் தவிக்கவிட்டுப் பிரிந்திருந்ததற்காக) பிணங்குவேனா, அல்லது உடனே ஓடி அவரைத் தழுவிக் கொள்வேனா, அல்லது இந்த இரண்டு எண்ணங்களும் கலந்து தடுமாறுவேனா' என்பது.

இப்படியெல்லாம் அவள் எண்ணிக் கொண்டிருக்கிற சமயத்தில் வெளியூரிலிருந்த கணவன் அவன் மேற்கொண்டு சென்ற அலுவல் முடிந்துவிடும் தருணமாகித் தன் மனைவியின் நினைவு வந்து விரைவில் வீட்டுக்கு வர விரும்புகிறான். அந்த விருப்பந்தான் முன்சொன்ன மூன்று குறள்களால் விளக்கப்பட்டது. இப்படி மனைவியும் கணவனும் ஒருவரை ஒருவர் நினைத்துத் தம்முள் சொல்லிக் கொள்வதை 'அவர்வயின் விதும்பல்' என்ற அதிகாரம் சித்திரிக்கிறது.



அதற்கு அடுத்த அதிகாரம் 'குறிப்பறிவுறுத்தல்' என்பது. இதில் வெளியூருக்குப் போயிருந்த கணவன் வீட்டுக்கு வந்து விடுகிறான். வந்த கணவன் மனைவியைப் பார்க்கிறான். மனைவியின் முகம் வாடியிருப்பதும், கண் கலங்கியிருப்பதும், மேனி பசந்திருப்பதும், வளையல்கள் கழன்று விழுந்துவிடும்போல் உடல் மிகவும் இளைத்துப் போயிருப்பதும் ஆகிய குறிப்புகளால் பிரிவாற்றாமல் மனைவி அடைந்திருக்கிற வேதனையெல்லாம் அறிந்து கொள்ளுகிறான். அவளுக்குத் தன்மீதுள்ள காதலின் சிறப்பை எண்ணிப் பெருமை அடைகின்றான். தான் நெடுங்காலம் அவளைப் பிரிந்திருந்து அவளுக்கு அவ்வளவு வேதனையை உண்டாக்கி விட்டதை நினைத்து வருந்துகிறான், இவ்வளவும் அவன் தனக்குள்ளேயே நினைத்துக் கொள்வது.

இப்படிக் கணவன் மனைவியைப் பார்த்து எண்ணிக் கொள்ளும்போது மனைவி செய்தது என்னவெனில், அவள் முன்னே எண்ணியது போலப் பிணக்கமும் காட்டவில்லை; வழக்கம்போல் தழுவிக் கொள்ளவும் இல்லை. பின் என்ன செய்தாள்? வளையல் கையை விட்டுக் கழன்று விழுந்துவிடும் போலத் தன்னுடைய உடல் மிகவும் மெலிந்திருப்பதையும் மேனி பசந்திருப்பதையும் பார்த்துக் கணவனே தான் பட்டுள்ள வேதனைகளை அறிந்து கொள்ளட்டும் என்று தனக்குள்ளேயே நினைத்துக் கொள்கிறாள்.

"தொடிநோக்கி மென்றோளும் நோக்கி அடிநோக்கி
அஃதுஆண்டு அவள் செய்தது."

தன் வளையல்களைப் பார்த்து, மெலிந்துபோன கைகளை

வனைக் கண்டவுடன் உண்டான களிப்பினால் சொல்கிறாள் :

"ஊடற்கண் சென்றேன்மற் றோழி!
அதுமறந்து கூடற்கண் சென்றதுஎன் நெஞ்சு."

'பிணங்கி வருத்தம் காட்ட வேண்டுமென்று தான் அவர் முன் சென்றேன், தோழி! ஆனால் என் மனம் அதை மறந்துவிட்டு அவரை அணைந்து இன்புற வேண்டும் என்ற ஆசையில் புகுந்துவிட்டது. நான் என்ன செய்வேன்!' என்றெல்லாம் சொல்கிறாள். நெடுநாள் பிரிந்திருந்த ஏக்கம் தீர உடனே இன்புற வேண்டுமென்ற ஆத்திரங்கொண்டு, கணவன் இருந்த இடத்துக்குச் சென்று தன் விருப்பத்தை,

"இனித்தக்க இன்னா செயினும் களித்தார்க்குக்
கள்ளற்றே கள்வநின் மார்பு"

என்ற குறளில் தெரிவிக்கின்றாள். இதன் பொருள் : 'பார்த்தவர்கள் பரிகசிக்கத் தக்க துன்பங்களையே உண்டாக்குவதானாலும் குடிகாரர்கள் கள்ளைக் கண்டவுடனே அது தமக்கு உண்டாக்கிய துன்பங்களை மறந்து மீண்டும் மீண்டும் அதையே குடிக்க விரும்புவார்கள். அது போலத் திருடரே, நீர் என்னை விட்டு இத்தனை நாள் பிரிந்திருந்ததனால் என்னைப் பார்த்தவர்கள் பரிகசிக்கும் படியான துன்பங்களை உண்டாக்கி விட்டீரென்றாலும் உம்மைக் கண்டவுடன் அவற்றையெல்லாம் மறந்துவிட்டு உம்முடைய மார்பைத்தழுவி இன்புற ஆசை மிகுந்துவிட்டேன். வாரும். என் காம வேதனையைத் தீரும்' என்று கணவனை இன்புற அழைக்கிறாள்.



[இந்தக் குறள் 'தலைமகள் புணர்ச்சி விதுப்பறிந்த தோழி தலைமகனுக்குச் சொல்லியது' என்று பரிமேலழகர் குறிப்பிடுவது சரி அல்ல. எந்தப் பெண்ணும் எவ்வளவு காமம் வந்து விட்டாலும் தன்னுடைய தோழியை அனுப்பித் தன்னோடு அளவளாவும்படி கணவனுக்குச் சொல்லியனுப்ப மாட்டாள். அல்லது தோழியாகவே தலைமகளுடைய குறிப்பை அறிந்து தனிமகனிடம் போய், 'உம்முடையமனைவி காம வேதனையால் அவதிப்பட்டு உம்மோடு இன்புற விரும்புகிறாள், குடியருக்குக் கள்ளைப் போன்றது அவளுக்கு உம்முடைய புணர்ச்சி' என்று சொல்லுவதும் முறை அல்ல. அப்படிச் சொல்லுவது தோழியினுடைய பெண்ணியல்புக்கு மாறான நாணமற்ற காரியமாகும். மேலும் தன்னுடைய தலைவியின் கணவனாகிய தலைமகனிடத்தில் ஒரு தோழிப் பெண் அப்படிப் பேசுவதும் அநு மதிக்கத் தக்கது அல்ல.]

இப்படிக் கணவனைக் கலவிக்கு அழைத்த மனைவியின் அவசரத்தைத் தடுத்துக் கணவன் சொன்னது தான்,

"மலரினும் மெல்லிது காமம் சிலர் அதன்
செவ்வி தலைப்படு வார்"

என்ற குறள். இதன் பொருள் முன்னாலேயே விரிவாகச் சொல்லப்பட் டிருக்கிறது.

பிணக்கத்தையும் நாணத்தையும் விட்டுத் தானே வலியச் சென்று இன்புற அழைத்தும், கணவன் உடனே தன் விருப்பத்திற்கு இணங்காமல் 'மலரினும் மெல்லிது காமம்' என்று சொல்லிவிட்டதில் ஏமாற்றம் அடைந்த மனைவி துன்பமுற்றுக் கண் கலங்கினாள். அதைக் கண்ட

கணவன், 'கலவிக்கு அவசரப் படவேண்டிய இயல்புடைய ஆண்மகனுகிய நான் பொறுத்திருக்கக் காமத்தை அடக்கும் இயல்புடைய பெண்ணுகிய நீ ஏன் எனக்கு முன்னுல் கலவிக்குத் துடிக்கிருய்?' என்பது போலக் கேலி செய்கிருன். அதை.

"கண்ணில் துனித்தே கலங்கினுள் புல்லுதல்
என்னினும் தான்விதுப் புற்று"

என்ற குறள் காட்டுகின்றது. இதனுடன் 'புணர்ச்சி விதும்பல்' காட்சி முடிகின்றது.

இதற்கு அடுத்த காட்சி 'நெஞ்சொடு புலத்தல்' என்ற அதிகாரம். 'நெஞ்சொடு புலத்தல்' என்பது தன் மனத்தோடு பிணங்குதல். அதாவது, மனத்தைக் கடிந்துகொள்வது. முன் அதிகாரத்தில் காதலி இன்புற விரைந்தது போல் காதலன் காதலியின் விருப்பத்தை ஏளனமும் செய்துவிட்டான். அதனுல் வெட்கமும் வருத்தமும் அடைந்து கண் கலங்கிய காதலி தனியே இருந்து, புணர்ச்சிக்கு அவசரப்படுத்தித் தன்னைக் காதலரிடம் போகச் செய்த தன்னுடைய மனத்தைக் கடிந்து அதனேடு பேசுகின்ருள். இந்த அதிகாரத்தில் உள்ள பத்துக் குறள்களும் காதலி தன்னுடைய மனத்தோடு பேசிக் கொள்ளுவதைப் பற்றியனவே. இதில் தோழிக்கோ தலைமகனுக்கோ துளிகூடப் பங்கில்லை. இந்த அதிகாரத்தின் நோக்கத்தைச் சரியாக அறிந்து கொண்டால்தான் 'புலவி' என்ற அடுத்த அதிகாரத்தின் நுணுக்கங்களைச் சரியாக அநுபவிக்க முடியும்.

பரிமேலழகருடைய உரை இந்த அதிகாரத்தின் நோக்கத்தைக் காணத் தவறிவிட்டது. அதனுல்தான்



திருவள்ளுவர் கருதிய பொருள்களைக் காண முடியாமற் போய்விட்டது. அதை, பரிமேலழகர் இந்த அதிகாரத்தின் பெயராகிய 'நெஞ்சொடு புலத்தல்' என்ற சொற்ருெடருக்கு அவர் தந்துள்ள விளக்கமே காண்கின்றது. 'நெஞ்சொடு புலத்தல்' என்பதற்குப் பரிமேலழகர் சொல்லும் விளக்கம் என்னவெனில், 'அஃதாவது' காரணமுண்டாய வழியும் புலக்கக் கருதாது புணர்ச்சி விதும்புகின்ற நெஞ்சுடனே தலைமகள் புலத்தலும் தலைமகன் புலத்தலுமாம்' என்பது.

இது முற்றும் தவருனது. எப்படியெனின் 'நெஞ்சொடு புலத்தல்' என்பதற்கு, 'தன்னுடைய நெஞ்சை முன்னிலையில் நிறுத்தி, அதனேடு தான் புலத்தல்' என்ற பொருளில் தான் திருவள்ளுவர் சொல்லியிருக்கிருர். ஆனுல் பரிமேலழகர் 'நெஞ்சொடு' என்பதற்கு, புலக்கக் கருதாது புணர்ச்சி விதும்புகின்ற நெஞ்சுடனே' என்று 'நெஞ்சொடு' என்பதற்குப் பொருத்தமற்ற அடைமொழிகளைக் கூட்டுகின்ருர். அதனுல் இந்த அதிகாரத்தின் நோக்கமே மாறி விட்டது. அத்துடன் புலத்தலென்பது ஆண் பெண் ஆகிய இருபாலருக்கும் பொதுவானது போல் 'தலைமகள் புலத்தலும் தலைமகன் புலத்தலுமாம்' என்றதும் தவருனது. தலைமகன் புலத்தல் என்பது இந்த அதிகாரத்திலோ மற்றெந்த அதிகாரத்திலுமோ இல்லை. 'நெஞ்சொடு புலத்தல்' என்பதற்கு மிகவும் தவருகப் பொருள் கொண்டு விட்டதால் தலைமகள் மட்டும் ஏகாந்தமாகத் தன்னுடைய நெஞ்சோடு பேசுகின்ற இந்த அதிகாரத்தில் தலைமகனும் தோழியும் புகுத்தப்பட்டு விட்டார்கள்.

இந்த அதிகாரத்தில் உள்ள பத்துக் குறள்களையும் சுருக்கமாக இப்போதே பார்த்து விடுவது பயனுடைத்து.

"அவர் நெஞ்சவர்க்காதல் கண்டும் எவனெஞ்சே
நீஎமக் காகா தது."

'மனமே! என் காதலருடைய மனம் அவர் சொன்ன படி கேட்டு அவருக்கு அடங்கி யிருப்பதைக் கண்டும் நீ ஏன் எனக்கு அடங்காமல் அவரிடமே ஓடுகிறாய்?'

"உறாஅ தவர்க்கண்ட கண்ணும் அவரைச்
செறாஅரெனச் சேறியென் னெஞ்சு.

'எனக்குச் சொந்தமான என் நெஞ்சே! இப்போது அவர் காம ஆசை உறாதவராக இருப்பதைக் கண்டும், நாம் விரும்பினால் மறுக்கமாட்டார் என்று எண்ணிக் கொண்டு என் அவரிடம் சென்றாய்?'

"கெட்டார்க்கு நட்டாரில் லென்பதோ நெஞ்சேநீ
பெட்டாங் கவர்பின் செலல்,"

'நெஞ்சே, நீ என்னை மதிக்காமல் உன் விருப்பத்தின் படியே அவரிடம் ஓடுவது, வறுமை அடைந்துவிட்ட வர்களை உற்றார் உறவினரும் கைவிட்டுப் போய்விடு வார்கள் என்ற உண்மையைச் சேர்ந்ததோ?'

"இனியன்ன நின்னொடு சூழ்வார்யார் நெஞ்சே,
துனிசெய்து துவ்வாய்காண் மற்று,"

'நெஞ்சே, காதலரிடம் பிணங்க வேண்டும் என்று நீ தான் எனக்கு யோசனை சொன்னாய். அதன்படி நடந்துகொள்ளாமல் இப்போது நீ என்னை விட்டு அவ ரிடமே ஓடுகின்றாய். இனி உன்னை நம்பி உன்னுடைய யோசனையைக் கேட்க மாட்டேன்.'



"பெறாஅமை யஞ்சும் பெறிற் பிரிவஞ்சும்
அறாஅ இடும்பைத்தென் னெஞ்சு,"

'என் மனம் காதலர் இல்லாதபோது அவர் வர வில்லையே என்று என்னைத் துன்புறுத்திக் கொண்டிருந் தது. அவர் வந்தபின் அவர் என்னைப் புணராமல் பிரிந்து போய்விடுவாரோ என்று துன்புறுத்துகிறது. அப்பா! இந்த மனந்தான் ஓயாமல் எனக்கு என்ன துன்பம் உண்டாக்குகிறது!'

"தனியே யிருந்து நினைத்தக்கால் என்னைத்
தினிய இருந்ததென் நெஞ்சு,"

'நான் என் காதலரைச் சற்றே மறந்து தனியே இருந்த சமயங்களில், என்னுடைய நெஞ்சு என்னைத் தின்று விடுவது போலத் துன்புறுத்திக் காதலரையே நினைக்கச் செய்தது.'

"நாணு மறந்தே னவர்மறக் கல்லாவென்
மாணா மடநெஞ்சிற் பட்டு,"

'காதலரைச் சிறிது நேரங்கூட மறக்க முடியாததாகி விட்ட என்னுடைய புத்தி யில்லாத அற்ப மனத்தோடு சேர்ந்து நான் மானங் கெட்டவளாகி விட்டேன்.'

"எள்ளின் இளிவாமென் றெண்ணி யவர்திறன்
உள்ளு முயிர்க்காத நெஞ்சு,"

'உயிரின்மேல் மிகுந்த பற்றுள்ள என் மனம் காத லரை மறந்தால் உயிர் போய்விடுமோ என்று எண்ணி அவரைப் பற்றியே நினைத்துக்கொண் டிருக்கிறது.'

"துன்பத்திற் கியாரே துணையாவர் தாமுடைய
நெஞ்சந் துணையல் வழி."

'ஒருவருக்குத் துன்பம் வந்துவிட்ட சமயத்தில் அவருடைய மனமே அவருக்கு உதவா விட்டால் மற்ற யார் உதவப் போகிறார்கள்? இது உனக்குத் தெரியாததல்லவே, மனமே!'

"தஞ்சந் தமரல்ல ரேதிலார் தாமுடைய
நெஞ்சந் தமரல் வழி."

'மனமே, ஒருவருக்கு அவருடைய மனமே உறவற்றுப் போய்விட்டால் மற்ற யாரும் அவருக்கு உறவாக மாட்டார்கள். ஆகையால் நீதான் எனக்கு உறுதுணை. நான் உன்னைத் தஞ்சம் அடைகிறேன்.'

மேற்சொன்ன உரைகள்தாம் திருவள்ளுவர் கருதியவை. இப்படியாகத் தலைமகள் தன்னுடைய நெஞ்சோடு புலந்து பேசிக் கொண்டு அமளியில் தனியே படுத்துக்கொண்டிருக்கிற சமயத்தில் தலைமகன் அமளிக்கு வந்து படுக்கிறான். அப்போதுதான் 'புலவி' என்ற காட்சி ஆரம்பமாகிறது. இந்தப் 'புலவி' என்ற அதிகாரத்தில் உள்ள பத்துக் குறள்களும் தலைமகனின் மனத்துக்குள் நிகழும் எண்ணங்களே ஆகும். இந்த அதிகாரத்திலும் தோழிக்கோ தலைமகனுக்கோ இடம் இல்லை. பத்துக் குறள்களும் ஒன்றன்பின் ஒன்று தொடர்ச்சியாகத் தலைமகனின் எண்ணங்களே யாகும். இந்த அதிகாரத்தின் முதற் குறளும் முந்தின அதிகாரத்தின் கடைசிக் குறளின் தொடர்ச்சியே.

முந்தின அதிகாரத்தின் கடைசிக் குறளில் தலைமகள் தன்னுடைய மனத்தைப் பார்த்து, 'மனமே' ஒருவருக்கு அவருடைய நெஞ்சமே உறவற்றதாகி விட்டதால் அயலார் யாரும் உறவாக மாட்டார்கள். ஆகையால் நீதான் எனக்குத் தஞ்சம். நீ என்னுடன் ஒத்துழைக்கவேண்டும்'



என்று கேட்டுக் கொள்கிறாள். அதைத் தொடர்ந்து இந்த முதற் குறளில்,

"புல்லா திராஅப் புலத்தை அவருறும்
அல்லல்நோய் காண்கம் சிறிது,"

'மனமே, நீ காதலரைத் தழுவாமல் இரு. அவர் தழுவினாலும் இடங்கொடுக்காமல் பிணங்கிக் கொள். அவர் காமவேதனையால் படும் பாட்டைச் சிறிது வேடிக்கை பார்ப்போம்' என்கிறாள்.

இதன் விரிவுரை என்னவென்றால், 'மனமே, நான் போய் இன்புற அழைத்தபோது மட்டும் என்னுடைய காம வேதனையை உணராமல், மலரினும் மெல்லிது காமம் என்று சொல்லி மறுத்து ஏளனமும் செய்துவிட்டாரே! இப்போது அவர் தமக்குக் காமவேதனை வந்து கலவிசெய்ய வந்திருக்கிற இந்தச் சமயத்தில் நான் பிணங்கிப் புணர மறுத்து அவர் படும் காமவேதனையைச் சிறிது வேடிக்கை பார்க்க விரும்புகிறேன். நீ அவசரப்பட்டு அவரைத் தழுவ நினைத்து விடாதே' என்பது.

இப்படிக் கணவனைத் தழுவாதிருந்து பிணங்கும்படி தன்னுடைய மனத்தைக் கேட்டுக்கொண்ட மனைவிக்கு உடனே ஒரு சந்தேகம் உதிக்கிறது. அந்தச் சந்தேகம் என்னவென்றால், 'கலவியிற் பிணங்குவது நல்லதுதான். ஆனால் அந்தப் பிணக்கம் நீண்டு போனால் என்ன செய்வது?' என்ற சந்தேகம். அடுத்த குறளில் அந்தச் சந்தேகம் வருகிறது.

"உப்பமைந் தற்றால் புலவி யதுசிறிது
மிக்கற்றால் நீள விடல்."

'கலவியிற் பிணங்குவது உணவுக்கு உப்புச் சேர்த்துக் கொள்வது போலச் சுவைதரக் கூடியது. ஆனால் அந்தப் பிணக்கம் அதிக நேரம் நீண்டுவிட்டால் அது உணவில் உப்பு அதிகப்பட்டு விட்டது போலச் சுவை கெட்டுப் போகுமே.'

இதன் விரிவு: 'காதலருடைய காம வேதனையை வேடிக்கை பார்க்கலாமென்று நாம் சிறிது நேரம் பிணங்குவதில் குற்றமில்லை. அது உணவுக்கு உப்புப் போலக் கலவிக்குச் சுவை தரக்கூடியதுதான். ஆனால் நம் பிணக்கத்தை நீக்கிக் காதலர் அணையாமல் நெடுநேரம் சும்மா இருந்து விட்டாலும் அது உணவில் உப்பு அதிகப்பட்டது போலச் சுவை கெட்டுப் போகுமே' என்றும் மனைவி எண்ணுகிறாள்.

அப்படி அவர் நெடுநேரம் புலவி நீக்கி அணையாமல் இருந்துவிட்டால், அல்லது விடியும் வரை புலவிநீக்கி அணையாமல் இருந்துவிட்டால்:

"அலந்தாரை அல்லல்நோய் செய்தற்றால் தம்மைப்
புலந்தாரைப் புல்லா விடல்."

'தன்னுடன் கலவியிற் பிணங்கிய காதலியைக் காதலன் அவளுடைய பிணக்கத்தை விடச் செய்து, அணையாமல் பிணக்கத்தை அப்படியே விட்டுவிடுவது, முன்னாலேயே மிகவும் நொந்து போயிருக்கிற ஒருவருடைய நிலைமையைத் தெரிந்துகொண்டே இரக்கமில்லாமல் மேலும் அவரை நோகச் செய்வதற்கே ஒப்பாகும்.'

இங்குள்ள சூழ்நிலையில் இதற்கு விரிவுரை: 'நெடுநாள் காதலன் பிரிவாற்றாமல்' வருந்தி யிருக்கிற நான் இப்போது பிணங்கும்போது என் பிணக்கத்தை விரைந்து நீக்கி என்னை அணையாமல் என் காதலர் சும்மா இருந்து விட்டால் என்ன செய்வது? ஏற்கனவே மிகவும் மிகவும் நொந்து போயிருக்கிற நான் மேலும் நொந்துபோக நேர்ந்திடுமே' என்று எண்ணி ஏங்குகின்றாள்.



இதுதான் இந்தக் குறளுக்கு உரை. இந்தக் குறளுக்கு இதுதான் பொருள் என்பதையும், இந்த அதிகாரத்திலுள்ள எல்லாக் குறள்களும் புலந்துகொள்ள நினைக்கும் தலைமகளின் மனத்தில் உதித்த எண்ணங்களின் கோவையே என்பதையும் இந்தக் குறளுக்குப் பின்னாலுள்ள ஏழு குறள்களுக்கும் காணப்பட்டுள்ள புது உரைகள் உறுதிப்படுத்தும். அந்த உரைகளையெல்லாம் இங்கே விவரிப்பது இக்கட்டுரையின் நோக்கம் அல்ல.

இப்போது மேற்கொண்ட விஷயம், குற்றமற்ற காதல் உள்ளவனான தலைமகனை அவன் பரத்தையரிடத்து நின்றும் வந்தவனாகச் சொல்லித் திருவள்ளுவருடைய கருத்துக்கு மாசு உண்டாக்குவது சரியல்ல என்பதே. குறள்களிலுள்ள கருத்துத் தொடர்ச்சிகளைக் கவனிக்காததால் இப்படிப் பல பிழைகள் புகுந்துவிட நேரிட்டிருக்கிறது. அத்துடன் அதிகாரங்களின் பெயர்களுக்கும் தவறாகப் பொருள் கொண்டுவிட்டதும் குழப்பத்துக்குக் காரணமாகி விட்டது.

'நெஞ்சொடு புலத்தல்' என்ற பெயருக்குத் திருவள்ளுவர் கருதிய பொருள் கொள்ளாததனால் அதிலுள்ள குறள்களின் உரைகள் திசை மாறிவிட்டன. அதனால் அந்த அதிகாரத்தின் தொடர்ச்சிதான் 'புலவி'

என்பதும் புலனுகாமற் போய்விட்டது. அதனல் 'புலவி' என்ற அதிகாரத்திலுள்ள முதற் குறள்,

"புல்லா திராஅப் புலத்தை அவருறும்
அல்லல்நோய் காண்கம் சிறிது."

என்றதை யார் யாருக்குச் சொன்னது என்பதை அறிய முடியாமல் தடுமாற்றம் ஏற்பட்டு, அதை, 'வாயிலாகச் சென்ற தோழி தலைமகள் வாயில்நேர்தற் பொருட்டு அவளொடு நகையாடிச் சொல்லியது' என்று தோழியைக் கூட்டிக்கொள்ள வேண்டியதாகி விட்டது. முதற் குறள் திசை தப்பிவிட்டதால் மற்றக் குறள்களின் தொடர்ச்சியும் துண்டிக்கப்பட்டு, 'அலந்தாரை அல்லல் நோய் செய்தற்றால் தம்மைப் புலந்தாரைப் புல்லா விடல்' என்ற குறளின் சூழ்நிலையை அறிய முடியாமல் பொருத்த மற்ற உரை செய்ததோடு பரத்தையரையும் புகுத்த வேண்டியதாயிற்று.

முற்றும்